574

# உலகை உய்வித்த உத்தமர்

ஒன்பதாம் வகுப்புக்கு

574/H.65

ஆ. நாராயணசாமி

ஈஸ்டர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்
சென்னை-1.

TB
031,6(9)
N65
85088

# உலகை உய்வித்த உத்தமர்

ஆசிரியர்:
வித்துவான் அ. நாராயணசாமி
தலைமைத் தமிழாசிரியர்
இராமகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி
தி. நகர், சென்னை-17

ஈஸ்டர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்
286, எஸ்பிளனேடு (அப்பா பில்டிங்ஸ்)
சென்னை - 1

முதற்பதிப்பு: அக்டோபர், 1965

பதிப்புரிமை

85088

விலை ரூ. 1-00

TB
031,6(9)
N65

(10·9 கி. கிராம் வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது)

அச்சிட்டோர்:
மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்,
சென்னை-2.

# முன்னுரை

செயற்கரிய செய்த பெரியார்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைப் படிப்பதால், படிப்பவர் மனம் பண்படும் என்பது அறிஞர்கள் அறிந்த உண்மை. கிரேக்க மாவீரன் அலெக்சாந்தரும், பிரெஞ்சு மாவீரன் நெப்போலியனும், மராட்டிய மாவீரன் சிவாஜியும் தத்தம் தாய்மார் கூறிய பண்டை வீரர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை மனதில் பதிய வைத்ததே, பின்னர்ப் பெரு வீரர்களாக விளங்கியதற்குக் காரணமாயிற்று என அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே இன்று கல்வி பயிலும் நம் நாட்டு இளைஞர்கள் மனப்பண்பும் ஒழுக்க நெறியும் சிறக்கப் பெற்று, மொழித்திறனும் அடைதல் வேண்டுமென்னும் கருத்துக்கொண்டு, செயற்கரிய செய்த எண்மரின் வரலாற்றுக் குறிப்புகளையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் தொகுத்து எளிய இனிய செந்தமிழ் நடையில் இச்சிறு நூலாக்கித் தந்துள்ளேன்.

இந்நூல் உருவானதற்குப் பேருதவியா யிருந்து பிழையற்றுச் செம்மையாக மிளிருமாறு செய்துதவிய எனது கெழுதகை அன்பர் உயர்திருவாளர் வித்துவான் பு. செல்வராசனார் அவர்களுக்கு என் மனம் நிறைந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கிறேன்.

இந்நூலை மாணவச் செல்வர்கள் படித்துப் பயனடைய உதவி புரியுமாறு கல்வித்துறைப் பெருமக்களை வேண்டுகிறேன்.

ஆசிரியர்

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பெஞ்சமின் பிராங்க்ளின் | 1 |
| 2 | ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் | 9 |
| 3. | பிளாரன்ஸ் நைட்டிங்கேல் | 26 |
| 4. | லூயி பாஸ்டியர் | 36 |
| 5. | இரவீந்திரநாத தாகூர் | 50 |
| 6. | மார்க்கோனி | 62 |
| 7. | பால கங்காதர திலகர் | 75 |
| 8. | பண்டிட் ஜவாஹர்லால் நெஹ்ரு | 99 |
| 9. | கட்டுரைப் பயிற்சி | 123 |

# 1. பெஞ்சமின் பிராங்க்ளின்

பெஞ்சமின் பிராங்க்ளின் அச்சிடுவோராய் இருந்து தமது வாழ்விலே ஓர் அரசியல் அறிஞரானர். எட்டாம் நூற்ருண்டிலே அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் இங்கிலாந்துடன் தங்களது இறுதிப் போரைத் தொடங்குங்கால், உலகமே இந்தப் புகழ் பெற்ற அமெரிக்க அறிவியல் மேதையும் அரசியல்வாதியுமான பிராங்க்ளினிடம் கவனத்தைத் திருப்பியது. இவர் இரு கண்டங்களில் தத்துவப் பேரறிஞராகவும், அறிவியல் அறிஞராகவும், ஒப்புரவாளராகவும் திகழ்ந்தார். இவர்தம் செய்கைகள், அறிவியலில் இவர் கண்ட புதுமைகள், தத்துவத் துறையில் இவர்தம் அரிய பணிகள் அனைத்தும் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவே பயன்பட்டன. மானிடர் உய்ய நல்ல வழி காணுதல் உயர் நாகரிகம் உள்ளவர் செய்கை அல்லவா?

இம்மேதை 1706 ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில் அமெரிக்காவிலுள்ள பாஸ்டனில் பிறந்தார்; சில ஆண்டுகளே கல்வி பயின்ருர்; இவர் தந்தையார் நடத்தி வந்த மெழுகுவர்த்திக் கடையில் பத்து வயதில் இவர் வேலை செய்யத் தொடங்கினுர். இவருக்கு அவ்வேலை பிடிக்கவில்லை. இவர் மாலுமி ஆகவே விரும்பினுர். ஆனல், இவர் தகப்பனருக்கு அது பிடிக்கவில்லை. இருப்பினும், இவர் கடற்கருகில் இருந்ததால் நீந்தவும் படகுகளைச் செலுத்தவும் பழகினுர். கடலில் செல்லும் ஆசையும், மெழுகுவர்த்தி செய்யும் வேலையும் பெஞ்சமின் பிராங்க்ளினை விட்டு நீங்கின. இவர் தகப்பனர் இவரை வேருெரு பணியில்

ஈடுபடுத்துவது பற்றிச் சிந்தித்தார். பெஞ்சமின் எப்பொழுதுமே நல்ல சுவடிகளைப் படிப்பதில் அவாக் கொண்டவர். எவ்வளவு பெரிய நூலாயினும் அதை இவர் விரைவில் படித்துவிடுவார். ஆகவே இவர் தகப்பனார் இவருக்கு அச்சுத்தொழிலே சிறந்த தெனக் கருதினார்; ஜேம்ஸ் நடத்தி வந்த அச்சகத்தில் வேலை பழகிக்கொள்ள, பிராங்க்ளினை அமர்த்தினார். அவ்வச்சகத்தில் எழுத்துக் கோக்குங்கால் பிராங்க்ளினுக்கு இன்னும் மிகுதியாகப் படிக்க வாய்ப்பிருந்தது. அமெரிக்காவில் ஜேம்ஸ் அவர்களால் தொடங்கப்பட்ட 'புதிய இங்கிலாந்து கரண்ட்' என்ற செய்தித் தாளுக்கு எழுதுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

பிராங்க்ளினே தாம் அச்சுத் தொழிலில் பழகிய நாட்களைப் பற்றி எழுதியுள்ளார். அது இவருக்கு ஆராய்ச்சியில் இருந்த நுண்ணறிவையும், முன்னேற்றத்திலிருந்த அவாவையும், அதில் இவர் கொண்ட உறுதியையும் எடுத்துக் காட்டுகின்றது.

இவர் தமது பதினாறும் ஆண்டிலே டிரையன் என்பவரால் சைவ உணவைப் பற்றி எழுதப்பட்ட ஒரு நூலைப் படித்தார். அது முதல் புலால் நீக்கி உண்பதே சிறந்தது எனப் பிராங்க்ளின் உறுதி பூண்டார். இவர் உடன் பிறந்தார் திருமணமாகாதவராயிருந்தார். எனவே, அவரே சமைத்துச் சாப்பிடுவது அவருக்கு வழக்கமாயிருந்தது; பிராங்க்ளின் இறைச்சியுண்ண மறுத்தது அவருக்குத் தொந்தரவாயிருந்தது. ஆகவே இதற்காக அவர் பிராங்க்ளினை ஏசுவது வழக்கமாயிற்று. எனவே பிராங்க்ளின் உருளைக் கிழங்கை வேக வைக்கவும் சமைக்கவும் கற்றுக்கொண்டார்; தம் அண்ணனுடன் சேர்ந்து சாப்பிடுவதில் தமது உணவிற்காக ஆகும் செலவைவிடத் தாமே சமைத்து

உண்பதால் அரைப் பகுதியே ஆகும் என்பதை அறிந்தார். இவர் தனியே சமைத்து உண்பதை இவர் அண்ணனும் ஏற்றுக்கொண்டார். இவ்வாறு மிஞ்சிய பணத்திற்குப் புதிய நூல்கள் வாங்கப் பிராங்க்ளினுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதனுல் இவருக்கு இன்னுமொரு நலனுமிருந்தது.

இவர் உடன்பிறந்தவரும் மற்றவரும் அச்சகத்திலிருந்து உணவுண்ண வெளியே சென்ற பொழுது இவர் அச்சகத்திலிருந்துகொண்டே ஒரு ரொட்டியையும் ஒரு கோப்பைத் தண்ணீரையும் உட்கொண்டு அவர்கள் திரும்பி வரும் வரையிலுமுள்ள எஞ்சிய நேரத்தில் நூல்களைப் படிப்பதில் செலவழித்தார். மிதவுணவினுல் இவரது அறிவு மிகத் தெளிவாயிருந்தது. கணிதம், மீகான்கலை, இலக்கணம், அளவியல், வடிவக் கணிதம் ஆகியவற்றைத் தமது முயற்சியாலேயே இவர் கற்ருர். ஓர் ஆண்டு கழிந்த பின் இவர் பாஸ்டனிலிருந்து கடற் பயணம் செய்தார். அவ்வமயம் கப்பலிலிருந்து மக்கள் 'காட்' என்ற மீனைப் பிடித்துச் சமைத்து உண்டனர். ஒரு 'காட்' மீன் பொறியலின் மணம் இவரது புலால் நீக்கிய உணவுக் கொள்கையை மாற்றியது.

பதினேழாம் வயதில் இவர் தம் அண்ணனுடன் கருத்து வேற்றுமை கொண்டு நியூயார்க்கு வழியாகப் பிலடெல்பியாவிற்குச் சென்ருர். நீண்ட தொலைப் பயணத்திற்குப் பிறகு இவர் களைத்துவிட்டார். இவர் ஆடைகள் அழுக்கடைந்திருந்தன. பசி மிகுந்த இவர் ஒரு ரொட்டிக் கிடங்கை அடைந்தார். மூன்று ரொட்டி வாங்கினுர். இவரது பையில் அவைகளை வைத்துக் கொள்ள இயலாததால், ஒவ்வொரு கக்கத்திலும் ஒவ்வொரு ரொட்டியை அடக்கியும் மற்ருென்றைத் தின்று

கொண்டும் நடந்தார். பின்னர்ச் சந்தைத் தெரு வழியாகத் தமது பிற்கால இல்லக் கிழத்தி ஆகவிருக்கும் ரீடு என்னும் பெயருடைய பெண் வாழும் வீட்டுப் பக்கம் சென்றார். அவள், வாயிற் கதவருகில் நின்று இவரது நகைப்பூட்டும் தோற்றத்தைக் கண்டாள்.

1725இல் இவர் இலண்டன் வந்து இரண்டாண்டுகள் வரை அச்சிடுவோராகப் பணியாற்றினார்.

1726இல் இவர் பிலடெல்பியா திரும்பி இன்னோர் உதவியாளருடன் சேர்ந்து அச்சகத் தொழிலைத் தொடங்கினார்; கடினமாக உழைத்து அத்தொழிலில் முழு வெற்றியைக் கண்டார். 1729இல் இவர் 'பென்சில்வேனியா கெஜட்' என்ற செய்தித்தாளை வெளியிட்டார். நான்காண்டுகள் கழித்து, 'ஏழை ரிச்சர்டு ஆண்டுக் குறிப்பேடு (Poor Richard's Almanac) என்ற ஆண்டு ஏட்டை வெளியிட்டார். இதனை 25 ஆண்டுகள் வரை வெளியிட்டு வந்தார். அமெரிக்கக் குடியேற்ற மக்கள் இந்த ஏட்டைப் படித்து மிகவும் மகிழ்ந்தனர். 'ஏழை ரிச்சர்டு ஆண்டுக் குறிப்பேடு' இவருக்கு நிரம்பச் செல்வத்தையும் புகழையும் கொணர்ந்தது. அந்த ஏடு இவரைத் தத்துவ அறிஞராகவும் அரசியலறிஞராகவும் செய்தது.

பின்னர், பிராங்க்ளின் பொதுப் பணியில் ஈடுபட்டார்; பிலடெல்பியாவிற்குத் திரும்பியவுடன் ஜன்டோ கிளப் (Junto Club) என்ற நிலையத்தை இவர் நிறுவினார். அங்கு இவர் எழுதிய கட்டுரைகள் பல வெளியிடப்பட்டன. அந்த நிலையம் நாளடைவில் அமெரிக்கத் தத்துவ அறிவுக் கழகமாய் வளர்ந்தது. 1731இல் இவர் நடமாடும் நூல் நிலையம் ஒன்றை புதன்முதலாக நிறுவினார். தீயணைப்புத் துறையைப் பிலடெல்பியாவில் தொடங்கி, அங்குத் தீ இன்ஷ்ஒ

ரன்ஸ் கம்பெனி ஏற்படவும் துணை நின்றார்; ஊர்க் காவலர் (போலீஸ்) அமைப்பைச் சீர்ப் படுத்தினார். அமெரிக்காவிலே முதல் மருத்துவ விடுதியான பென்சில்வேனியா மருத்துவ விடுதியைத் தொடங்க இவர் வழி செய்தார். பென்சில்வேனியாக் கழகத்தை (Academy of Pennsylvania) இவர் அமைத்தார். இவர் வாழ்நாளிலேயே பிலடெல்பியா ஒரு பல்கலைக் கழக மாய்த் திகழ்ந்தது. இவர் அமைத்த பென்சில் வேனியாக் கழகமே நாளடைவில் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகமாய் வளர்ந்தது.

1749இல் இவர் பென்சில்வேனியாக் கழகத்தைத் தொடங்கி இரண்டாண்டுகளுக்குப் பிறகு அமெரிக் காவில் முதல் மருத்துவ மனை அமைப்பதற்கு உதவி னார்; இம் முயற்சிகளுக்காகப் பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்; ஆங்காங்கே சொற்பொழிவுகள் செய்து வந்தார்; பிறகு தெருக்கள் துப்புரவு பற்றியும் உயர்ந்த தெருக்கள் பற்றியும் தம் கருத்துக்களையும் வெளியிட்டார்; தெருத் துப்புரவு செய்வோர், நகரத்தி லுள்ள சாலைகள் செப்பனிடுவோர் முதலியோர் நலன் அடைவதற்குரிய பல திட்டங்கள் வகுத்தார்.

எப்பொழுதுமே ஏதாவது ஒன்றைத் தமது அறிவுத் திறனால் செய்து உருவாக்கிக்கொண்டிருக்கும் பிராங்க்ளின், அறிவியலுக்குத் திரும்பினார்; 1742இல் 'ஸ்டவ்' என்ற ஒரு வகை அடுப்பைக் கண்டு பிடித் தார். இதிலிருந்து அமெரிக்காவில் ஸ்டவ் தொழில் வளர்ந்தது. மின்னலில் மின்சாரம் இருக்கிறது என்ற உண்மையை இவர் கண்டு பிடித்தார். இடி தாங்கியை இவர் அமைத்தார். இதைக் கொண்டு இன்றுங்கூடப் பல உயிர்களையும் பொருள்களையும் காக்க முடிகிறது. மின்சாரத்தைப் பற்றி இவர் எழுதிய விவரங்கள்

இலண்டன் மாநகரில் வெளியிடப்பட்டன. அவை பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டன. அவற்றை ஐரோப்பா முழுதும் உள்ள அறிஞர்கள் படித்தார்கள். 'ஆர்மச்சூர்' (Armature), கண்டென்சர் (Condencer), பாட்டரி (Battery) முதலிய சொற்களை உண்டாக்கியவர் பிராங்க்ளினே.

இவருடைய கண்டுபிடிப்புகள், சோதனைகள், ஆராய்ச்சிகள் முதலியவை இங்கிலாந்திலும் பிரான்சிலும் உள்ள மக்களின் கருத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்தன. இவர் ஆட்சியிலும் பொறுப்பெடுத்துக் கொண்டார்; சட்ட மன்ற உறுப்பினராக்கப்பட்டார்; 1753இல் காப்லி தங்கப் பதக்கமும் இவருக்கு வழங்கப் பட்டது.

இங்கிலாந்துக்கு இவர் சென்ற பொழுது செயின்டு ஆண்டுரு, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களில் இவருக்குக் கௌரவப் பட்டங்கள் அளிக்கப்பட்டன.

1730இல் அச்சக வாழ்விலே ஈடுபட்டிருந்த பிராங்க்ளின், 1749இல் புகழ் பெற்ற அறிஞராயும் அரசியல் நிபுணராயும் விளங்கினர்.

பிராங்க்ளின் இல்லத்தில் ஏவலாளர்களும் சோம்பலாய் இருப்பதில்லை. பிராங்க்ளின் மேசையும் மற்றப் பொருள்களும் எளியவையாய் இருந்தன. இவரது காலையுணவு நீண்ட காலமாக ரொட்டியும் பாலுமேயாகும். இவர் தேநீர் குடிப்பதில்லை. இவர் புகழ் அடைந்த பிறகு இவர் மனைவி சீனக் கோப்பையில் இவரது காலை உணவை வைத்து அதை எடுத்து உண்பதற்கு ஒரு வெள்ளிக் கரண்டி வைத்துக் கொண்டு வந்தார். அக்கோப்பையும் வெள்ளிக் கரண்டியும் இவர் அறியாமலே வாங்கப்பட்டன.

"இவை எப்படி வந்தன?" என்று தம் மனைவியைப் பார்த்துப் பிராங்க்ளின் கேட்டதற்கு அவள், "என் கணவராகிய உங்கள் தகுதிக்கு இவை ஏற்றவை எனக் கருதி நான் வாங்கினேன்" என்று கூறினாள். இவர் இல்லத்தில் சீனுத்தட்டும் சீனுக் கோப்பையும் அப்போதுதான் முதன் முதலாகத் தலைகாட்டின. அதன் பிறகு இவரது செல்வ நிலை வளர்ந்தது.



பெஞ்சமின் பிராங்க்ளின்

பொதுப்பணியில் ஆர்வம் கொண்ட இவர் முதலில் பென்சில்வேனியாச் சட்ட சபையில் எழுத்தாளர் ஆனார்; அடுத்த ஆண்டில் பிலடெல்பியா அஞ்சலகத் தலைவரானார்; பிறகு குடியேற்ற நாடுகளின் அஞ்சற்பகுதி இயக்குநர் ஆனார். 1753இல் சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பதினேர்ஆண்டுகள் வரை அதன் உறுப்பினராய் இருந்தார். இவர் அமெரிக்காவின் சிறந்தகுடிமகனாராய் விளங்கினார். இவர் பிரிட்டிஷ் பேரரசிற்கு ஆதரவாகக் 'குடியேற்ற நாடுகளில் கிரேட் பிரிட்டனுக்குள்ள அக்கறை' என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் ஆங்கிலேயரிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றது. பிறகு பிராங்க்ளின் ஹாலந்துக்குப் பிரயாணமானார்.

1764இல் பென்சில்வேனியாவிற்கும் அங்கு வாழ்ந்த மக்களுக்கும் வரிகளைத் திருப்பிக் கொடுப்பது குறித்துப் பூசல் ஏற்பட்டது. பிராங்க்ளின் எதிர்க்கட்சித் தலைவராய் இங்கிலாந்திற்குச் சென்று, அந்த

நாட்டு அரசரைக் கண்டு பேசினுர். ஆனுல், இவர் இங்கிலாந்தில் அமெரிக்காமீது விதிக்கப்பட்ட முத்திரைச் சட்டத்தினைக் கண்டு வெறுப்படைந்தார். இவரது அரிய முயற்சியால் அது நீக்கப்பட்டது.

அமெரிக்கா ஐக்கிய நாடுகள் உருவாகக் காரணமாய் இருந்தவர்களுள் இவரும் ஒருவர். அமெரிக்க உரிமைச் சாசனத்தை எழுத உதவி, அதில் இவரும் கையெழுத்திட்டார். பிரான்சுடன் நேச உடன்படிக்கை செய்து அதில் கையெழுத்திட்டார்; சமாதான உடன்படிக்கையைத் தயாரித்து, அதிலும் கையெழுத்திட்டார். அமெரிக்க வரலாற்றில் மிகச் சிறந்தவைகளான நான்கு அறிக்கைகளிலும் கையெழுத்திட்டவர் பிராங்க்ளின் ஒருவரே. இவர் அமெரிக்காவில் ஏற்பட்ட அடிமை எதிர்ப்புக் கழகத் தலைவர் ஆனுர். அடிமை வாணிகம் ஒழிய இவர் பெரிதும் முயன்ருர். பிராங்க்ளின் தம் சுய சரிதையைத் தாமே எழுதியுள்ளார்.

இரட்டைக் கண்ணுடியுள்ள மூக்குக் கண்ணுடியை (Double spectacles or bifocals) இவரே முதன் முதலில் அமைத்தார். காற்ருேட்டமில்லாத அறைகளே பிணி பரவக் காரணமென இவர் கண்டுபிடித்தார். காலநிலையை முன்கூட்டிக் கூறும் ஆராய்ச்சியில் இவர் ஈடுபட்டார். மேலும், வட துருவப் பகுதியை ஆராயத் திட்டம் தீட்டினுர் என்ருல், இவர்தம் சலியா உழைப்பை என்னென்று கூறுவது! பல பணிகளிலும் ஈடுபட்டு மனித சமூகத்தின் நன்மைக்காகவே இவர் உழைத்தார்.

பெஞ்சமின் பிராங்க்ளின் ஏராளமான நன்மைகளே மக்களுக்குச் செய்துள்ளார்; அவற்றையும் நேர்த்தியாகச் செய்துள்ளார். அரசியல் தலைவரும் சிறந்த அறிவியலறிஞருமான பிராங்க்ளின் மனித இனத்துக்கே பாடுபட்ட மேதையாவர்.

## 2. ஜார்ஜ் ஸ்டீவன்ஸன்

இன்றைய உலகம் நாகரிகத்திற் சிறந்து சீர் பெற்று விளங்குகிறது. பண்டைய நாட்களில் நம் முன்னோர் கண்டும் கேட்டுமிராத பல நலன்களை இன்று நாம் நம் வாழ்க்கையில் பெற்று வருகிறோம் அல்லவா? கடந்த பல நூற்றாண்டுகளாய், அறிஞர் பலர் தம் நுண்ணறிவாலும் விடாமுயற்சியாலும் ஆராய்ச்சியாலும் கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில் இன்று நாம் இன்ப வாழ்விற்குரிய நலன்கள் பல வற்றைப் பெற்றிருக்கிறோம்.

நாகரிகம் என்பது உள்ளத்தைக் கவரும் சொல். நாகரிகம் மிகுந்த நாடே உலகில் மதிப்புப்பெறுகிறது. மேனாட்டார் பொறிகளால் ஏற்படும் செல்வப் பெருக்கையும், இன்ப உணர்ச்சிகளையும் நாகரிகம் எனக் கொள்வர். அண்டவெளியில் மக்கள் நடமாட முயல்வதில் நாகரிக முன்னேற்றம் காண்கின்ற காலத்தில் நாம் வாழ்கின்றோம்.

நம் முன்னோர் அன்பு, தூய சிந்தை, நல்லொழுக்கம், எளிய வாழ்க்கை முதலியவற்றையே நாகரிகத்தின் பண்புகளாகக் கருதினர். மேனாட்டார் கொள்கையில் மட்டுமோ, கீழ் நாட்டார் கருத்தில் மட்டுமோ, உண்மை நாகரிகத்தின் இயல்பு பொதிந்தது அன்று. அவ்விரண்டும் ஒன்றாக இணையுங்கால் எழுவதே சிறந்த நாகரிகம் ஆகும்.

ஆதி மனிதன் தான் செல்லவேண்டும் இடங்களுக்கெல்லாம் நடந்தே சென்றான்; தன் பொருள்களைத் தானே சுமந்து சென்றான்; ஆறு, ஏரி முதலிய நீர்


நிலைகள் குறுக்கிடுங்கால், அவற்றில் பெரிய மரத் துண்டை மிதக்கவிட்டு அதில் ஏறிக் கையால் துழாவிச் செலுத்தி, மறு கரையை அடைந்தான்; நாளாகவாக மாடு, குதிரை முதலிய விலங்குகளைப் பழக்கி அவற்றினைப் பயன்படுத்திப் பயணம் செய்யத் தொடங்கினான். இவ்வண்ணம் பல நூற்றாண்டுகள் கழிந்தன.

நாளடைவில் மக்கள் வாழ்வில் சிறந்த முன்னேற்றம் தோன்றியது. சக்கரத்தின் பயனைப் பற்றிய கருத்துக்கள் ஓரறிஞர் உள்ளத்தில் தோன்றின. அம் மேதை வட்ட வடிவமான ஒரு சக்கரத்தை உருவாக்கினார். அது பின்னாளில் தோன்றிய ஊர்திகள் அனைத்திற்கும் அடிப்படையாய் அமைந்தது. அதனால் விளைந்த புதுமைகள் பல. அது, அக்கால மக்கள் வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட்டது. ஆகவே, சக்கரம் கண்டு பிடிக்கப்பட்ட காலம் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டுவதொன்றாகும். அப்பெருமை இந்தியாவிற் குரியதென்பது அறிஞர் கூற்று.

சக்கரம் கண்டுபிடிக்கப்பட்ட பின், இரண்டு சக்கரங்களை ஓர் அச்சுத் தண்டால் இணைத்து ஊர்தி அமைக்கக் கற்றான் மனிதன்; அதனைத் தானே இழுத்தும், விலங்குகளைக் கொண்டு இழுக்கச் செய்தும் இயங்க வைத்தான். காலப்போக்கில் ஊர்திகள் பல தோன்றின. தொலைவிடங்களுக்குச் சென்று மீள்வதற்கும் வாணிகத்தை வளர்ப்பதற்கும் இவ்வூர்திகள் பெரிதும் பயன்பட்டன. காலத்தின் அருமை அறிந்து அதனை வீணாக்காமல், விரைந்து பயணம் செய்வதற்குரிய வழி காண்பதில் மனித மூளை ஈடுபட்டது.

18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஜேம்ஸ் வாட் என்ற அறிஞர் நீராவிக்குப் பேராற்றல் உண்டு என்பதை உணர்ந்தார். அவர் தமது இளமைப் பரு

வத்தில் கெட்டிலில் உள்ள வெந்நீரிலிருந்து வெளிவந்த நீராவி கெட்டிலின் மூடியை மேலே உயர்த்துவதைக் கண்டார்; எந்த ஆற்றல் மூடியை மேலே உயர்த்துகிறதோ, அந்த ஆற்றலைப் பயன்படுத்திப் பல அரிய செயல்களைச் செய்ய முடியுமென்று எண்ணினார். ஆயின், அவர் எண்ணத்தை மக்கள் பயன் அடையும் வண்ணம் செயற்படுத்தியவர் ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் அவர்களேயாவார்.



ஜார்ஜ் ஸ்டீவன்ஸன்

அவர் 1781ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 9ஆம் நாள் ஓர் ஏழைக் குடும்பத்தில் இங்கிலாந்து நாட்டின் நியூகாசில் துறைமுகத்துக்கருகிலுள்ள வைலம் என்ற சிற்றூரில் பிறந்தார். அவர் தந்தையார் அங்குள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் உலைக்களத்தில் எரியும் நெருப்பை மேற்பார்க்கும் வேலையாளாய் அமர்ந்திருந்தார். அவர் பெற்ற ஊதியம் வாரத்திற்கு இரண்டு ஷில்லிங்குகளாகும் (ஏறத்தாழ ஒன்றரை ரூபாய்). இக்குறைந்த ஊதியத்தைக் கொண்டு ஒரு பெரிய குடும்பம் உயிர் வாழ வேண்டிய நிலையில் இருந்தது. அவருக்கு ஆண்மக்கள் நால்வரும் பெண்மக்கள் இருவரும் இருந்தனர். அவர் ஒரே அறையுள்ள ஒரு சிறிய வீட்டில் குடியிருந்தார். வறுமையின் கொடுமையால் அவர் தம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப இயலவில்லை.

கல்வி கற்று அறிவு பெற வேண்டிய இளம்பருவத்தில் அக்குழந்தைகள் கடும் பணியாற்றிப் பொருளீட்ட வேண்டியிருந்தது. அவருடைய மூத்த மகனார் ஜேம்ஸ் அவரைப் போலவே நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்தார். இரண்டாம் மகனாரான ஸ்டீவன்ஸன் பசுக்களை மேய்க்கும் தொழிலில் பக்கத்து வீட்டுச் செல்வரிடம் அமர்ந்தார். அவருக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு அணா (இரு பென்னி) ஊதியமாகக் கிடைத்தது. அது, அக்குடும்பத்தின் அன்றாட வாழ்க்கைக்குப் பேருதவியாய் இருந்தது. சில மாதங்களில் ஸ்டீவன்ஸன் மாடு மேய்க்கும் தொழிலைவிட்டு, அதனினும் கூடுதலாக வருவாய் கிடைக்கும் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டார். வயலில் களை பறித்தல், உழவனுக்கு உதவுதல் முதலியவற்றைச் செய்து நாள் தோறும் நான்கு அணா (நான்கு பென்னி) ஊதியம் பெற்று வந்து அன்னையிடம் அளித்தார்.

பெற்றோருடைய வறுமைத் துன்பத்தைப் போக்கவே ஸ்டீவன்ஸன் பண்ணைத் தொழிலில் அமர்ந்தார். ஆனால், அவரது மனம் அவ் வேலையில் நாட்டம் கொள்ளவில்லை. தம் தந்தையாரும் தமையனாரும் பணியாற்றும் சுரங்கத்தில் தமக்கு வேலை கிடைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். தந்தையாரும் மகனார் விருப்பத்தை அறிந்தார்; தாம் பணியாற்றும் சுரங்கத்திலேயே மகனாருக்கு வேலை பெற்றளித்தார்.

நிலக்கரியோடு சேர்ந்து கிடக்கும் கல்லையும் கட்டியையும் பொறுக்கி அப்புறப்படுத்த வேண்டிய வேலையில் ஸ்டீவன்ஸன் அமர்ந்து அதை மிகக் கவனமாகச் செய்து வந்தார். ஸ்டீவன்ஸன் தம் 14ஆம் ஆண்டில் சுரங்கத்தில் தந்தையாருக்குத் துணையாளாக நியமிக்கப்பட்டார். இப்புது வேலையில் ஸ்டீவன்ஸ

னுக்கு ஈாளொன்றுக்குப் பன்னிரண்டணு (ஒரு ஷில்லிங்) ஊதியம் கிடைத்தது. நாளடைவில் ஸ்டீவன்ஸன் வாரத்தில் ஒன்பது ரூபாய் (12 ஷில்லிங்) ஊதியம் பெறக்கூடிய நிலையை அடைந்தார்.

இந்நிலை பிறர் கையை நோக்காமல் வாழக்கூடும் என்னும் நம்பிக்கையை அவருக்கு அளித்தது. ஆயினும் குடும்பப் பொருளாதார நிலை சீர்பெறவில்லை. அவர் தம்பியர் இருவரும் நிலக்கரியிலுள்ள கற்களைப் பொறுக்கும் சுரங்கத் தொழிலில் அமர்த்தப்பட்டனர். வீட்டிலுள்ள பெண் குழந்தைகள் இருவரும் தாயாருக்கு வீட்டு வேலைகளில் உதவி புரிந்து வந்தனர். இவ்வாறு தந்தையாரும் நான்கு ஆண் பிள்ளைகளும் உழைத்ததால் அக்குடும்பம் வறுமையின்றி வாழ முடிந்தது. அக்குடும்பம் வாழ்ந்த ஓரறையுடைய அவ் வீட்டிலேதான் நீராவியால் இயங்கும் வண்டி பற்றிய கருத்து ஸ்டீவன்ஸன் உள்ளத்தில் உருவாயிற்று.

வறுமை ஒருவனுடைய முன்னேற்றத்திற்குத் தடையாய் இருப்பதை நாம் காண்கிறோம். பலர் அறிவும் ஆற்றலும் பெற்றிருந்தும், வறுமையினுல் முன்னேற்ற மடையாமல் குன்றிப் போகின்றனர். பொருட்சிறப்பினுல் அறிவையும் பிற நல்லியல்புகளையும் வளர்த்துக்கொள்ளலாம். இக்காலத்தில் அறிவு வளர்ச்சிக்குப் பொருள் இன்றியமையாததாயுள்ளது.

பொருள் சில வேளைகளில் நன்மையினும் தீமையையே பெரிதும் விளைவிக்கின்றது. செல்வச் செருக்கால் பலர் தீச்செயல்களில் ஈடுபட்டுத் தமக்கும் கேடுண்டாக்கிக்கொண்டு, பிறர்க்கும் கேடு விளைவிக்கின்றனர்; இயல்பாக ஆற்றலும் அறிவும் அமையப் பெருதவர்கள் செல்வம் வாயிலாக அவற்றைப் பெறுவது இயலாத செயலாகும். கருவிலே திருவுடையராய்ப்

பிறக்கும் மேன்மக்களின் சிறப்பியல்புகளை வறுமை வாட்டி அழித்துவிடுதலும் இயலாததாகும். எனவே, வறுமை முன்னேற்றத்தைத் தடை செய்வதெனினும், அவ்வறுமையே புகழுடல் பெறும் வளத்தையும் பலருக்கு வழங்கியுளது.

பிறவியிலேயே கூரிய அறிவும், சிந்திக்கும் ஆற்றலும், கற்பனைத் திறனும் சிறக்க அமைந்தவர் ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் ஆவார். இப்பண்புகள் நல்ல சூழ்நிலையில் செவ்வையாக வளர்ச்சியுற்றிருப்பின், குறித்த காலத்தில் விரும்பிய பயனை அளித்திருக்கும். இளமையில் வறுமையும், அதனால் கல்வி கற்க வேண்டிய பருவத்தில் கல்லாமையும் அவரது முன்னேற்றத்திற்குத் தடையாயிருந்தன. 'கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை," என்றல்லவா ஔவைப் பெருமாட்டியார் கூறியுள்ளார்? "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஸ்டீவன்ஸன் வாழ்க்கை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் அமைந்தது. இந்த வறுமையே தமக்கு நலம் தருவதாகும் என்று அவர் கருதி, அருமுயற்சியினால் இடைவிடாமல் உழைத்து முன்னேறினார்.

இளமையில் பசுக்களை மேய்க்கச் சென்றபோது ஸ்டீவன்ஸன் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தார். மரஞ்செடிகளிடையே பறந்து திரியும் பறவைகள் அவர் மனத்திற்கு மகிழ்ச்சியூட்டின. இயற்கைப் பொருள்களில் அவர் மனம் ஈடுபட்டது போல அவற்றின் இயல்புகளைக் கூர்ந்து நோக்கி, அவ்வியற்கை ஆற்றலை வியக்கும் பண்பும் அவரிடம் அமைந்தது.

கூர்ந்தறியும் பண்பு வளர்ந்ததால், ஸ்டீவன்ஸன் சுரங்கத்தில் பணியாற்றுங்கால் இயந்திரங்களைக்

கூர்ந்து நோக்கி, அவற்றின் பணிகண்டு வியப்பார்; இயந்திரங்கள் இயங்கும் நுட்பங்களை அறிய முயல்வார்; இவ்வாறு இயந்திரங்களின் அமைப்பையும் அவற்றின் ஒவ்வோர் உறுப்பின் இன்றியமையாமையையும் அறிந்தார். இயந்திரத்தைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரிப்பதற்கும், பழுதுபார்ப்பதற்கும், மீண்டும் பூட்டுவதற்கும் ஆற்றல் பெற்றார்.

அக்காலத்தில் பல்வேறு வகையான இயந்திரங்களைப் பற்றிய நூல்கள் பல வெளிவந்தன. ஆனால், கல்வியில்லாத ஸ்டீவன்ஸன் அவற்றால் பயன் பெற முடியவில்லை. எங்ஙனமேனும் அந்நூல்களைப் படித்து இயந்திரங்களைப் பற்றி அறிய அவாக் கொண்ட அவர் இரவுப் பள்ளிக்கூடமொன்றில் சேர்ந்து, கல்வி கற்கத் தொடங்கினார்; பகலில் கடினமாக உழைத்துவிட்டு இரவில் பள்ளிக்குச் சென்று கற்றார்: வாரத்தில் மூன்று நாட்கள் எண்ணையும் எழுத்தையும் முறையாகக் கற்றார்; ஆசிரியருக்கு வாரத்திற்கு நான்கணா (நாலு பென்னி) சம்பளம் கொடுத்தார்; ஓய்வு நேரங்களிலும், தொழிற்சாலையில் பணியாற்றுகையிலும் ஆசிரியர் கற்பிப்பதைச் சிந்தித்தார்; கணக்குகளைச் செய்து வந்தார். அவர் கணக்கை மிகவிரைவில் கற்றார்; நாளடைவில் எழுதப் படிக்கவும், கணக்குகள் போடவும் கற்றுக்கொண்ட ஸ்டீவன்ஸன், பத்திரிகைகளிலும் நூல்களிலும் வெளி வந்த அறிவியல் கருத்துக்களையும் பொறிஇயல் பற்றிய செய்திகளையும் படித்து அறிந்துகொண்டார். அவருக்கு இயந்திரங்களைப் பற்றி அறியும் அவா மிகுந்தது. ஆகவே, எல்லா இயந்திரங்களிலுமே ஸ்டீவன்ஸன் நாட்டம் பதிந்திருந்தது; ஓய்வு கிடைக்கும்போது பழுதான கடிகாரங்களைச் சிறுசிறு பகுதிகளாகக் கழற்றுவார்; எந்த இடத்தில் பிழையுள்ளது என்பதை விரைவில்

அறிவார்; பின்னர் அவற்றைச் சரிப்படுத்தி, மாசு போக்கி, மீண்டும் பொருத்திவிடுவார். கடிகாரம் சரியாகி ஓடும்.

ஒரு முறை கில்லிங்ஒர்த்து என்ற சுரங்கத்தில் ஓர் இயந்திரம் பழுதுபட்டுப் பயனற்றுக் கிடந்தது. ஒரு நண்பர் ஸ்டீவன்ஸனை அவ்விடத்திற்கு அழைத்துச் சென்றார். ஸ்டீவன்ஸன் அவ்வியந்திரத்தின் ஒவ்வோர் உறுப்பையும் கூர்ந்து கவனித்தார்; பழுதான உறுப்பை அகற்றினார்; புதிய உறுப்புக்களைச் சேர்த்தார்; இரண்டு நாட்களில் அவ்வியந்திரத்தை ஓடும் நிலையில் வைத்தார். இயந்திரத்தின் முதலாளி அது கண்டு எல்லையற்ற மகிழ்ச்சியுற்றார். அவர் ஸ்டீவன்ஸனைப் பாராட்டினார்; இயந்திரப் பொறுப்பாளர் பதவியில் அவரை நியமித்துப் பெருமைப்படுத்தினார். ஸ்டீவன்ஸன் தமது இருபதாவது வயதிலேயே இப்பெருமையையும் பதவியையும் அடைந்தார். இப்பதவி உயர்வு அவருக்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்தது. இப்பணியில் அவருக்கு வாரத்திற்கு ஒரு பவுன் ஊதியம் கிடைத்தது.

ஸ்டீவன்ஸன் இல்லற வாழ்க்கை மிகவும் குறுகிய கால அளவில் முடிவுற்றது. மூன்று ஆண்டுகள் வாழ்ந்த பிறகு அவர் மனைவியார் காலமானார். அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை தான் பிற்காலத்தில் தந்தையாரைப் போன்று பெரும் புகழும் எய்திய இராபர்ட் ஸ்டீவன்ஸன் ஆவார். ஸ்டீவன்ஸன் தம் மனைவியாரை இழந்த துயரத்துடன் தம் தகப்பனார் இரு கண்களையும் இழந்ததாலுண்டான துயரத்தையும் அனுபவிக்க வேண்டியிருந்தது. அவர் தகப்பனார் சுரங்கத்தில் வேலை பார்க்குங்கால் ஏற்பட்ட ஒரு வெடிவிபத்தில் இரு கண்களையும் இழந்தார். ஸ்டீவன்ஸன் மிகவும் துயருற்றுத் தம் தந்தை

யாருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளையெல்லாம் தாமே செய்து வந்தார்.

அக்காலத்தில் பிரான்சு நாட்டில் நெப்போலியன் மன்னராயிருந்தார். ஐரோப்பிய நாடுகள் பல ஒன்று சேர்ந்து நெப்போலியனை எதிர்த்தன. இப்போரின் பயனாக நாடெங்கும் பொருளாதார நெருக்கடி, வறுமை முதலியவை நிலவின. பொருள்களின் விலை நாளுக்கு நாள் பெருகியது. சுரங்கத்தில் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு ஸ்டீவன்ஸனால் பெற்றோர்களைக் காப்பாற்ற முடியவில்லை. இதற்கிடையில் ஸ்டீவன்ஸனும் போருக்கு அழைக்கப்பட்டார். குடும்ப நிலையை முன்னிட்டு அவர் போருக்குப் போகாமல் வேறொருவரை அனுப்பிவைத்தார். தமக்குப் பதிலாகப் போருக்குச் சென்ற அம்மனிதருக்கு ஒரு பெருந் தொகையைக் கைக்கூலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. இவற்றுடன் தம் மகன் இராபர்ட் கல்வி கற்பதற்கும் பொருள் நெருக்கடி ஏற்பட்டது.

ஸ்டீவன்ஸன் வாழ்நாளில் இது ஒரு பெரிய சோதனைக் காலமாய் இருந்தது. அவர் ஊக்கம் குன்றாமல் முன்னைவிட மிகுதியாக உழைக்கத் தொடங்கினார்; நிலக்கரிச் சுரங்கத்து வேலையுடன் ஒழிந்த நேரங்களில் வேறு வேறு வேலைகளையும் செய்யத் தொடங்கினார். கடிகாரம் பழுது பார்த்தல், சுரங்க வேலைக்காரர்களுக்குச் செருப்புத் தைத்தல் முதலிய வேலைகளையெல்லாம் ஸ்டீவன்ஸன் செய்து பொருள் திரட்டினார்.

ஸ்டீவன்ஸன் இயந்திரத் துறையில் தம் மதி நுட்பத்தாலும் விடா முயற்சியாலும் கண்டு வெளியிட்ட புதுமைகள் பலவாம். அக்காலத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் பணியாற்றுபவர்களுக்கு அடிக்கடி பெரிய

இடர்கள் நிகழ்வதுண்டு. நிலத்துக்கு அடியிலிருக்கும் ஆழமான இருண்ட சுரங்கத்தில் பணியாற்றுபவர்கள் வெளிச்சத்திற்காகக் கையில் விளக்குகளைக் கொண்டு செல்வது வழக்கம். நிலக்கரிச் சுரங்கத்திற்குள் ஒரு வகையான வாயு வெளிப்படும். அவ்வாயு வெளிக் காற்றோடு ஒரு குறிப்பிட்ட அளவில் கலந்து விளக் கொளியால் சூடேறும்போது பேரொலியுடன் வெடிக் கும். அப்போது சுரங்கம் இடிந்து விழும். பணியாள ருட் பலர் உயிரிழப்பர். பலருக்குப் பல வகை உறுப்புக் குறைபடும். பலர் வேறுபல துன்பங்களுக் கும் ஆளாவர். ஆகவே, சுரங்க வேலை இடுக்கண் நிறைந்தது என்று பலர் அப்பணிக்கு வர மறுத்தனர். ஊதியம் உயர்த்தப்பட்ட போதிலும் வேண்டிய அளவு ஆள்கள் வேலைக்கு வரவில்லை. இதனால் தொழிற் சாலைகளுக்கு வேண்டிய நிலக்கரி கிடைக்காமல் வேலை தடைப்பட்டுக் கிடந்தது.

சுரங்கத்தில் வெடி உண்டாகாமல் இருக்கவல்ல விளக்கு ஒன்று கண்டு பிடிப்பவருக்குப் பரிசுகள் அளிக்கப்படும் எனச் சுரங்க முதலாளிகள் அறிவித் தனர். இவ்வறிவிப்பு அறிவியல் அறிவும் இயந்திரங் களிற் பழக்கமும் வாய்ந்த பலரையும் இம்முயற்சியில் ஈடுபடுத்தியது.

ஸ்டீவன்ஸன் அதைக் குறித்து ஆழச் சிந்தித்து, ஒரு புது வகை விளக்கைக் கண்டு பிடித்தார். அவ் விளக்கைச் சுரங்கத்தினுள் எடுத்துச் சென்றால், எவ்வித இடையூறும் நேரிடுவதில்லை. அதற்கு 'ஜார்ஜ் காப்பு விளக்கு' என்பது பெயர். இதற்காக மக்கள் ஸ்டீவன்ஸனைப் பாராட்டினர்.

அதே சமயத்தில் சர் ஹம்ப்ரி டேவி என்பவர் வேறொரு வகை ளிளக்கைக் கண்டுபிடித்தார்; சாதா

ரண விளக்கைச் சுற்றி மயிரிழைபோன்ற கண்களை யுடைய சல்லடைக் கம்பிகளை அமைப்பது வாயிலாகச் சுரங்கத்தில் ஏற்படும் இடையூற்றைத் தடுக்கலாம் என்று அவர் கண்டறிந்தார்; இம்முறைப்படி ஒரு விளக்கைச் செய்தார். அதற்கு 'டேவி காப்பு விளக்கு' என்பது பெயர்.

இவ்விரு விளக்குகளும் சுரங்கத்தில் ஏற்படும் இடையூறுகளை வெவ்வேறு முறைகளில் தீர்த்து வைப்பவைகளாயிருந்தன. இவ்விரு விளக்குகளும் வெவ்வேறு முறையில் அமைக்கப்பட்டிருந்தன. இரு விளக்குகளும் பயன் தருவனவே. ஆகவே, இவ்விரு வருள் எவருக்குப் பரிசு வழங்குவது என்ற கருத்து வேற்றுமை அறிஞர்களிடையே ஏற்பட்டது. சுரங்க உரிமையாளர் டேவி விளக்கிற்குப் பரிசு கொடுத்தனர். ஸ்டீவன்ஸனுக்குச் சிறிது தொகையே கொடுத்தனர்.

பொதுமக்கள் ஸ்டீவன்ஸன் உழைப்பையும் கூரிய அறிவையும் மெச்சினர்; ஆகவே அவரைப் பாராட்டி நன்கொடை திரட்டி ஆயிரம் பவுன் பரிசு கொடுத்தார்கள். சுரங்கப் பணியாளர்கள் சிறு தொகை ஒன்றைத் திரட்டி ஒரு வெள்ளிக் கடிகாரம் வாங்கி அவருக்கு அளித்தனர். இத்தகைய கருவிகள் பலவற்றை அவர் செய்தபோதிலும் அவருக்கு நிலைத்த புகழை அளித்து, அவர் ஒப்புயர்வற்ற ஒரு மேதை என உலகத்துக்கு எடுத்துக்காட்டியது. அவர் கண்டு பிடித்த மற்றொன்று நீராவி ஆற்றலால் ஓடும் இரயில் வண்டியேயாகும்.

ஸ்டீவன்ஸன் காலத்தில் இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவ்விருப்புப் பாதையில் நிறுத்தப்பட்ட வண்டிகளைக் குதிரைகளே இழுத்தன. இதன் விளைவாகச் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்

பட்ட நிலக்கரி அயல்நாடுகளுக்கு நத்தை வேகத்தில் சென்றது. சுரங்கத்தில் ஆயிரக்கணக்கான டன் நிலக்கரி குவிந்து கிடந்தது. ஆனால், நிலக்கரி தேவைப்படும் பட்டணங்களிலோ, அது உடனுக்குடன் கிடைக்காமல் இருந்தது. இந்த முட்டுப்பாட்டை அகற்றுவதற்குப் பல மேதைகள் முயன்றுகொண்டிருந்தனர். அப்போது ரிச்சர்டு டிரதிவிக்கு என்பவர் ஒரு நீராவி இயந்திரத்தை உண்டுபண்ணினார். அது சாதாரணப் பாதையில் மெல்ல ஓடக்கூடியதாயிருந்தது.

அந்த இயந்திரத்தை நியூகாசிலில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தின் உரிமையாளர் ஒருவர் வாங்கினார். அதை இருப்புப் பாதையின்மீது ஓட்டிப் பார்த்தார். அப்போது இயந்திரம் வெடித்துப் போய்விட்டது. ஆயினும் வேறோர் இயந்திரத்தை அவர் விலைக்கு வாங்கினார். அது தண்டவாளத்தில் ஊர்ந்து போய்க்கொண்டிருந்தது. அது மக்களுக்கு ஒரு புதுமையாய் இருந்தது. அதைப் பார்க்க மக்கள் கூட்டம் கூட்டமாய்த் திரண்டனர். ஸ்டீவன்ஸனும் அதைப் பார்க்கச் சென்றிருந்தார்; அதைக் கண்ணுற்ற ஸ்டீவன்ஸன் அதனினும் சிறந்த ஓர் இயந்திரத்தை உண்டுபண்ண வேண்டுமென்று கருதினார்.

கில்லிங்ஓர்த்துச் சுரங்க உரிமையாளரான ரேவின்ஸ் என்பவருக்கு ஸ்டீவன்ஸன் திறமையில் நம்பிக்கையிருந்தது. அவர் ஸ்டீவன்ஸனுக்குப் பொருளுதவி செய்தார். 1814இல் சுரங்கப் பணியாளர்கள் உதவியோடு ஸ்டீவன்ஸன் ஒரு நீராவி இயந்திரத்தைச் செய்து முடித்தார்; அதற்கு 'மை லார்டு' என்று பெயரிட்டார். அது மணிக்கு நான்கு மைல் வேகத்தில் சென்றது. அது மிக உயரமான ஏற்றங்களிலும் பெரும்பளுவை இழுத்துக்கொண்டு சென்றது.

அந்த இயந்திரம் பல ஆண்டுகள் உழைத்தது. அதனினும் சிறப்புடைய ஓர் இயந்திரத்தைச் செய்வதற்கான ஒரு வாய்ப்பு ஸ்டீவன்ஸனுக்குக் கிடைத்தது.

அந்த நாளில் எதிர்காலத்தை ஏறிட்டுப் பார்க்க வல்ல மதிநலம் படைத்தவர் இரண்டொருவர் இருந்தனர். அவர்களில் எட்வர்டு பீஸ் என்பவர் ஒருவராவர். அவர் நிலக்கரிச் சுரங்கங்கள் மிகுதியாயுள்ள டார்லிங்டன் என்ற இடத்திலிருந்து ஸ்டாக்டன் என்ற கடற்கரையூருக்கு இரயில் பாதை அமைக்கவேண்டும் என்னும் தேவையை உணர்ந்து, அதற்காக முயன்று வந்தார்.

ஸ்டீவன்ஸன் அதைப்பற்றிக் கேள்விப்பட்டார்; எட்வர்டை அவர் இருக்குமிடத்திற் சென்று பார்த்தார். குதிரைகளால் இழுக்கப்படும் வண்டிகளைப் பயன்படுத்துதலே போதுமென்று கருதிய அவர், ஸ்டீவன்ஸன் கூறியவாறு தண்டவாளங்களை மிக உறுதியாக அமைத்தார்; அவற்றின்மீது நீராவி இயந்திரத்தை ஓடச் செய்யலாம் என்ற எண்ணத்தைத் தாம் கில்லிங்ஓர்த்துச் சுரங்கத்துக்குச் சென்று ஸ்டீவன்ஸனல் செய்யப்பட்ட இயந்திரத்தைப் பார்த்தபிறகு எட்வர்டு ஏற்றுக்கொண்டார். தாம் புதிதாக அமைக்கக் கருதிய இருப்புப்பாதையை ஸ்டீவன்ஸனுடைய மேற்பார்வையில் அமைத்தார்; ஸ்டீவன்ஸனுக்கு முந்நூறு பவுன் சம்பளம் கொடுப்பதாகவும் கூறினர். எட்வர்டு பீஸின் உதவியால் 1828இல் நியூகாசிலில் ஸ்டீவன்ஸன் ஓர் இயந்திரத் தொழிற்சாலை தொடங்கினர்; தமது எண்ணத்திற்கு இணங்க இருப்புப் பாதையையும் இயந்திரங்களையும் உருவாக்கினர்; தாம் பொது மக்களிடம் பெற்ற ஆயிரம் பவுன் நன்கொடையையும் இச்செயலில் ஈடுபடுத்தினர்.

1825இல் இருப்புப்பாதை வேலை முடிந்தது. அதற்குள் இருப்புப் பாதையின்மீது ஓடுவதற்கான ஒரு நீராவி இயந்திரத்தைச் செய்து முடித்தார்; அப்படிச் செய்ததும் அல்லாமல் தாமே அதை ஓட்டிக் கொண்டும் சென்ருர்; நிலக்கரி இருந்த பன்னிரண்டு வண்டிகளையும் இருப்புப் பாதை அமைப்புச் சங்க நிர்வாகிகள் ஏறியிருந்த வண்டி ஒன்றையும், மக்கள் ஏறியிருந்த சாதாரண இருபத்தொரு வண்டிகளையும் இழுத்துக்கொண்டு மணி ஒன்றுக்குப் பன்னிரண்டு மைல் வேகத்தில் அந்த நீராவி இயந்திரம் சென்றது. பெரிய பாரத்தை இழுத்துக்கொண்டு சென்ற அந்த இரயில் வண்டியின் தோற்றம் இயந்திரத் துறையில் ஸ்டீவன்ஸன் பெற்ற ஒப்பற்ற வெற்றியாகும்.

இக்காலத்தில் அறுபது மைல் வேகத்தில் ஓடும் இரயில் வண்டியுடன் அதை ஒப்பிடுங்கால், அது பெரிய வியப்பாய் நமக்குத் தோன்ருவிடினும், இரயில் வண்டிகளைக் குதிரைகள் இழுத்த காலத்தில் அது ஒரு மகத்தான வியப்புக்குரிய தொண்டாகவே விளங்கியது. ஸ்டீவன்ஸனின் இரயில் வண்டியைப் பார்த்த பின்னர்ப் பல புதிய இருப்புப் பாதைகள் அமைக்கப் பட்டன.

அக்காலத்தில் உலகில் பல இடங்களிலிருந்து கப்பல் வழியாக லிவர்ப்பூல் துறைமுகத்தில் வந்திறங்கிய பஞ்சை மாஞ்செஸ்டர் என்னும் ஊரிலுள்ள பல பஞ்சாலைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. அங்கே இரயில் வண்டி இல்லாமையால் பஞ்சை மாஞ்செஸ்டருக்கு எடுத்துச் செல்வதில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டது. இதை அறிந்த அரசாங்கத்தார் அங்கே இரயில் பாதை அமைக்க முடிவு செய்தனர்.

அக்காலப் பாமர மக்கள் இருப்புப்பாதையின் தேவையையும் நன்மையையும் உணர்ந்து கொள்ள வில்லை. பாதையை அளந்து அமைக்கும் ஆள்கள் மீது கற்கள் எறிந்தும், அவர்கள் வைத்திருந்த கருவி களைச் சேதப்படுத்தியும், அவர்கள் செல்வதற்கு இடங் கொடாமல் இடையூறு செய்தனர். செல்வர்களும் தம் நிலங்கள் வழியாக இரயில் வண்டி ஓடுவதை விரும்ப வில்லை. இரயில் வண்டிப் புகை, மனிதனுக்கும், பயிர்கள், பறவைகள், விலங்குகள் முதலியவைகளுக் கும் இடர் உண்டாக்கும் என்று பலரும் நம்பினர். செய்தித் தாள்களும் மக்களுக்கு ஏற்றபடி தவருன வதந்திகளைப் பரவவிட்டன; மக்கள் அச்சம் கொள் ளும் வகையில் பல பொய்களைப் பரப்பி, மணி ஒன்றுக்குப் பத்து மைலுக்கு மேற்பட்ட வேகத்தில் ஓடும் எந்த வண்டியும் நிலையாக இருக்க முடியா தென்றும், எச்சமயத்திலும் அதன் இயந்திரம் உடைந்து விழுந்து இடையூறு விளைவிக்கக் கூடும் என்றும் எழுதின.

இவ் வெதிர்ப்புகளிடையே தொடக்க வேலை முற்றுப் பெற்றது. பின்னர் இருப்புப் பாதையை அமைக்கப் பார்லிமெண்டார் கட்டளை பிறப்பித்தனர். ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் தலைமைப்பொறியியல் அறிஞராக நியமிக்கப் பட்டார். ஆண்டிற்கு ஆயிரம் பவுன் அவருக்கு ஊதியம் அளிக்கப்பட்டது. அப்பாதை மலைகள், குன்றுகள், நீரோடைகள் முதலியவற்றை யும், பல பள்ளத்தாக்குகளையும், ஒரு பெரிய சதுப்பு நிலத்தையும் கடந்து செல்ல வேண்டி யிருந்தது. ஸ்டீவன்ஸன் தமது அறிவாலும், ஆற்றலாலும், பட்டறிவாலும் முழு வெற்றியைக் கண்டார்.

இதன் பிறகு பல இடையூறுகள் ஏற்பட்டன. இருப்புப் பாதையின்மீது ஓடும் வண்டி நீராவி இயங்

திரமாக இருக்க வேண்டுமா, அல்லது குதிரைகள் இழுக்கக் கூடியவையாய் இருக்க வேண்டுமா? என்பதைக் குறித்து வழக்குகள் ஏற்பட்டன. புதியதாக அமைக்கப்படும் இயந்திரம் இருபது டன் பாரத்தை இழுக்க வேண்டும். அதை ஓட வைப்பதற்குரிய செலவு 550 பவுனுக்கும் உட்பட்டதாய் இருக்க வேண்டும். 1829 ஆண்டு அக்டோபர் முதல் நாளுக்கு முன்பே வண்டி தயாராக இருக்க வேண்டும். இந்நிபந்தனைகளுக்கேற்ப இயந்திரங்களைச் செய்பவர்களுக்கு 500 பவுன் பரிசளிப்பதாக அரசாங்கத்தார் அறிவித்தனர்.

ஸ்டீவன்ஸனும், ராபர்ட்டாகிய அவர் மகனும் இப்பணியில் ஈடுபட்டனர். தந்தையும், மகனுமாகக் குறிப்பிட்ட நாளில் ஓர் இயந்திரத்தை உருவாக்கினர். ரெயின் ஹில் என்ற இடத்தில் அதை நிறுத்தினர். அதைப் பார்ப்பதற்கு அறிஞர்கள், தொழிற்சாலை அதிபர்கள் முதலிய பலரும் திரளாகக் கூடியிருந்தனர். பின்பு அவ்வியந்திரம் அவர்கள் முன் வெள்ளோட்டம் விடப்பட்டது; ஸ்டீவன்ஸனே தமது இயந்திரத்தை ஓட்டினார்; பிரயாணிகள் ஏறியிருந்த ஒரு வண்டியும், நிலக்கரி ஏற்றப்பட்ட ஆறு பாரவண்டிகளும் அதனோடு இணைக்கப்பட்டிருந்தன. ஒரு குதிரை வீரன் கொடி பிடித்துக்கொண்டு வண்டியின் முன் புறத்தில் காவலாகச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இயந்திரத்தில் நெருப்பை மூட்டியதும் சிறிது நேரத்தில் உலை நீர் கொதித்தது. ஆவி எழும்பி வண்டி நகரத் தொடங்கியது. அதன் விரைவு வரவரக் கூடிக் கொண்டே வந்தது. 15 மைல் விரைவில் அது ஓடத் தொடங்கியதும் குதிரை வீரன் பின் தங்கிவிட்டான். பின்னர் 35 மைல் விரைவில் ஓடி டார்லிங்டனுக்குச் சென்று நிலக்கரியை இறக்கிவிட்டு, அங்கிருந்து 600 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட இடத்

திற்கு மீண்டும் வந்தது. ஸ்டீவன்ஸன் செய்த வண்டியே மற்ற எல்லா வண்டிகளிலும் சிறந்ததெனக் கருதப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படை அமைப்பையும் உறுதியான வேலைப் பாட்டையும் எல்லோரும் மெச்சிப் பாராட்டினர்.

லிவர்ப்பூல்-மாஞ்செஸ்டர் இருப்புப் பாதையில் ஸ்டீவன்ஸன் செய்த எட்டு வண்டிகள் ஓடிக்கொண்டிருந்தன. மக்கள் புகைவண்டியின் பயனை அறியலானார்கள். இங்கிலாந்தில் பல பாகங்களிலும் புகை வண்டிப் பயணத்திற்காக இருப்புப்பாதைகள் போடப்பட்டன. அவை ஸ்டீவன்ஸன் அறிவுப்படியும் அவரது மேற்பார்வையிலுமே நடந்தேறின. சில ஆண்டுகளில் உலகில் எல்லா நாடுகளிலும் இருப்புப் பாதைகள் அமைந்தன. செல்வமும் புகழும் சிறக்கப் பெற்று ஸ்டீவன்ஸன் இன்பமாக வாழ்ந்து வந்தார். அவர் மிக்க உறுதியும், துணிவும், உழைப்பும் உடையவர்; பிறர் குறை கூறுவதைக் கேட்டு அவர் ஊக்கம் குன்றுவதில்லை; கருமமே கண்ணாகக் கொண்டவர். அரசாங்கம் அவருக்கு ஸர் பட்டம் வழங்கியது. அது வெற்று ஆரவாரம் என்று கருதி ஸ்டீவன்ஸன் அதை ஏற்க மறுத்தார். தம் பெயரின் முன்னும் பின்னும் பட்டங்களைச் சேர்த்து அலங்கரித்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. மக்கள் குறைந்த செலவில் பயணம் செய்ய ஸ்டீவன்ஸன் புகை வண்டி இயந்திரம் மிகுந்த பயன் அளித்தது. ஆகவே மக்களுக்கு வாழ்வளித்த ஸ்டீவன்ஸன் ஒரு நாகரிகச் சிற்பியாவார் என்பதில் ஐயமில்லை.

# 3. பிளாரன்ஸ் நைட்டிங்கேல்

உலக வரலாற்றிலே சிறப்புற்று, உண்மை நாகரிகத்தை உலக மக்களிடையே பரவ வைத்த பெரியார்களில் நைட்டிங்கேல் அம்மையார் அவர்களும் ஒருவராவர். இவர் மக்கள் இனத்திற்கு ஆற்றியிருக்கும் தொண்டிற்கு உலகம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது. மக்களுக்குப் பணியாற்றி இம் மாநிலத்தே மாபெருந் தியாகியாகி மாண்ட இவ் வம்மையாரை உலக நாகரிக மேதைகளுள் ஒருவர் எனல் சாலப் பொருந்தும். கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையவராகிய நைட்டிங்கேல் அம்மையார் எவ்வின்னலையும் பொருட்படுத்தாமல், மக்கள் தொண்டே இறைவன் தொண்டு எனக் கருதி, மக்கட்பணி புரிவதிலேயே அல்லும் பகலும் ஈடு பட்டிருந்தார்.

கிரிமியாவில் நடந்த போரில் இவர் தம் மனத்தே கொண்ட கருத்துக்களைச் செயல் முறையில் வெளிப் படுத்தி உலகிலேயே எஞ்ஞான்றும் புகழ் ஒளி வீசிக் கொண்டிருக்கும் 'நந்தா விளக்காய்' விளங்கினர். இக் காலத்தில் மருத்துவ நிலையங்களில் கையாளப்பட்டு வரும் சில முறைகள் இவ்வம்மையார் செய்து காட்டிய வழியைப் பின் பற்றியவையே யாகும்.

நைட்டிங்கேல் அம்மையார் 1820 ஆம் ஆண்டு, மேத்திங்கள், 12 ஆம் நாள் இத்தாலியிலுள்ள பிளாரன்ஸ் என்ற ஊரில் பிறந்தார். இவருடைய சொந்த நாடு இங்கிலாந்தைச் சேர்ந்த டெர்பிஷைர் ஆகும். இவ்வம்மையார் அந்நாட்டில் பெருநிலக்

கிழாரும் பெருஞ்செல்வருமான வில்லியம் நைட்டிங்கேல் என்பாரின் இரண்டாம் மகளாராவர் இவருடைய தாயார் பெயர் பான்னி (Fanny) என்பதாகும். இவர் கிரிமியாப் போரில் குண்டடிபட்டுக் குற்றுயிரோடு சாய்ந்து கிடந்த போர் வீரர்களின் புண்களைக் கழுவி, மருந்திட்டு, மருத்துவப் பணி செய்தார்; பறக்கும் குண்டுமாரியினிடையே தொண்டுணர்ச்சியுடன் மக்கட் பணி புரிந்தார்; இறப்பிற்கும் வாழ்விற்குமிடையே துடித்துக் கிடந்த வீரர்களுக்கு உயிர் கொடுத்தார்.



பிளாரன்ஸ் நைட்டிங்கேல்

நைட்டிங்கேல் அம்மையார் இளமையிலேயே இளகிய உள்ளம் பெற்றிருந்தார். பிறர் படும் துன்பங்களைக் கண்டு அதற்காக உளம் உருகி நைந்து வாடும் உயர் பண்பு உள்ளவராய் இவர் வளர்ந்தார். இளமையிலேயே வீட்டிலிருந்து இனிய தின்பண்டங்களை எடுத்துச் சென்று ஊரிலுள்ள ஏழைகளுக்கும் பிணியாளர்களுக்கும் வழங்கி மகிழ்ந்தார். அவ்வூரில் எவரேனும் நோயுற்றால், நைட்டிங்கேல் அம்மையார் அவ்விடத்திற்கு விரைந்தேகித் தம்மாலான அரும்பெருந் தொண்டாற்றுவார்.

பிறவிப் பயன் இன்பவாழ்வு மட்டுமன்று என்று அம்மையார் இதயம் ஒலித்துக் கொண்டிருந்தது. எனவே, தாம் பெற்ற பிறவி ஒரு சிறந்த செயலைச்

செய்வதற்காகவே என்று கருதிய இவரது உள்ளம் தொண்டு தொண்டு என்று முழங்கிற்று. பகட்டான வாழ்வு இவருக்குச் சுவைக்கவேயில்லை. அறுசுவை உண்டி, கேளிக்கை விளையாட்டு முதலிய எவையும் இவரது கருத்தை ஈர்க்கவில்லை. நைட்டிங்கேல் அம்மையார் அடிக்கடி தனியே உட்கார்ந்து ஏதேனும் சிந்தித்துக்கொண்டே இருப்பார். தம்மைத் தொண்டு செய்ய ஏதோ ஒரு குரல் அழைப்பது போல எண்ணி உறக்கத்திலிருந்து சரேலென எழுவார். மருத்துவ மனையிலுள்ள பிணியாளர்களுக்குத் தாம் பணி செய்வது போலக் கனவு கண்டார். பல நாள்களாகத் தமது உள்ளத்திலே வேரூன்றிப் பதிந்த தம் எண்ணத்தைப் பெற்றோரிடம் இவர் துணிந்து கூறினார்.

தங்கள் மகள் இவ்விதக் கருத்தைக் கொண்டிருப்பதைக் கேட்ட பெற்றோர் திடுக்கிட்டனர்; நைட்டிங்கேல் அம்மையாருக்குப் பித்துப் பிடித்து விட்டதோ என்றுகூட ஐயுற்றனர். அவர்கள் நெஞ்சம் பதைத்தது. நைட்டிங்கேல் அம்மையாரது வாழ்க்கையைப் பற்றி, இவர் பெற்றோர் அரும்பெருந் திட்டங்கள் பல தீட்டியிருந்தனர்; அவர்கள் நினைத்தனவெல்லாம் பகற் கனவாய் மாறின. அவர்கள் தம் மகளுக்குப் பற்பல அறிவுரைகள் கூறினர்.

அக்காலத்திலோவெனில் உயர்குடிப் பெண்கள் பகட்டிலும் உல்லாசப் பொழுது போக்கிலும் காலம் கழித்தனர்; தங்களைக் காட்டிலும் தகுதி குறைந்த மக்களுடன் பேசுவதும் தங்கள் உயர்குடிப் பிறப்புக்கு இழுக்கு என எண்ணினர். ஆனால் இத்தகைய குடும்பத்தில் பிறந்த நைட்டிங்கேல் அம்மையாரின் கருத்தோ அதற்கு மாறாயிருந்தது.

செல்வத்திலும் உயர்குடியிலும் பிறந்த நைட்டிங்கேல் அம்மையார் பகட்டையும் உல்லாசத்தையும் மறந்து, மருத்துவ மனையில் பணிப்பெண்ணாய் அமர்ந்தாரென்றால் இவர்பால் அமைந்த தொண்டுள்ளத்தின் பெருமையை என்னவென்று கூறுவது! இவர் போலி நாகரிகத்தை வெறுத்துப் பிறர் நலமே தம் நலம் எனக் கருதும் உயர் நாகரிகத்தில் விருப்பம் உடையவராயிருந்தார்.

இவ்வம்மையார் தம் பெற்றோர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் மருத்துவ நிலையத் தொண்டு செய்யும் எண்ணத்தை விடவில்லை. மருத்துவப் பணியாற்றுவதற்கு மருத்துவப் பயிற்சி தேவை என்பதைச் சிட்னி எர்பர்ட் என்பாரும் அவர் மனைவியார் எலிசபெத்து அம்மையாரும் நைட்டிங்கேலுக்கு விளக்கினர். எனவே, அப்பயிற்சியின் இன்றியமையாமையை நைட்டிங்கேல் உணர்ந்தார்.

நைட்டிங்கேல் பல நாடுகளைச் சுற்றிப் பார்க்கும் நோக்கத்துடன் பயணத்தை மேற்கொண்டார். 1849 இல் இவர் பாரிஸில் இருந்த பொழுது, ஆஸ்திரேலியாவிலுள்ள வின்சண்ட் டிபால் என்னும் பொது நலக் கழகத்தைச் சேர்ந்த இரு மாதர்களைச் சந்தித்தார். அவர்கள் அலெக்ஸாண்டிரியாவிலுள்ள தங்கள் மருத்துவ நிலையங்களைப் போய்ப் பார்க்கும்படி நைட்டிங்கேலைத் தூண்டி, அதற்கு வேண்டிய அறிமுகக் கடிதங்கள் கொடுத்தார்கள். நைட்டிங்கேல் அம்மையார் எகிப்து சென்று, அலெக்சாண்டிரியாவிலுள்ள பள்ளிகளையும் மருத்துவ மனைகளையும் பார்வையிட்டார். மருத்துவ மனைகளில் இருக்க வேண்டிய கட்டுப்பாட்டின் இன்றியமையாமையை நைட்டிங்கேல் அங்கேதான் அறிந்தார்.

1852 ஆம் ஆண்டு இவர் பாரிஸ் நகரம் மீண்டு மருத்துவப் பணிப்பெண் பயிற்சி பெற்ருர். அதே ஆண்டு ஆகஸ்டுத்திங்களில் இவர் தாம் விரும்பிய ஒரு நிலயத்திற்குத் தலைமை பூண்டார். அந்த நிலயம் வாழ்க்கையில் துன்புற்ற பெண்களுக்காக என்று நிறுவப்பெற்ற நிலயமாகும்.

ரைன் ஆற்றங்கரையிலிருந்த மருத்துவப் பணி மனயில் நைட்டிங்கேல் பயிற்சி பெற்று வந்தார். அவ்வமயம் இலண்டன் மாநகரில் பொருட்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. அதைக் காண உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரள் திரளாக இலண்டன் மாநகரில் கூடினர். நைட்டிங்கேல் அம்மை யாருக்கு அதில் கருத்துச் செல்லவில்லை.

மருத்துவ மனயில் துணி தைத்தல், சமைத்தல், துப்புரவு செய்தல் ஆகிய எல்லா வேலகளையும் விருப்பத்துடன் செய்வதில்தான் இவர் மனம் ஈடு பட்டது. அந்த மருத்துவ மனயில் அறுத்துக் குணப் படுத்தும் முறைகளேக் கற்க இவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆகவே, இவர் பாரிஸ் நகரிலுள்ள கன்னி மருத்துவக் கழகத்திற்குரிய மாதர் குழுவில் சேர்ந்து, அறுவை மருத்துவ முறைகளேப் பயிலத் தொடங்கினுர். இவ்வாருகப் பயிற்சி பெற்ற நைட்டிங்கேல் லண்டன் மாநகரிலுள்ள மருத்துவ மனயின் தலைமைப் பதவி ஏற்ருர்.

1854ஆம் ஆண்டு கிரிமியாப் போர் தொடங்கியது. இங்கிலாந்து, பிரான்சு, துருக்கி ஆகிய நாட்டினர் ஒருபுறமும், உருசிய நாட்டினர் ஒருபுறமுமாக நின்று பெரும்போர் நடத்தினர். போர் மிகவும் கடுமையாய் நடந்தது. இரு புறத்திலும் பலர் உயிரிழந்தனர். குளிரின் கொடுமை மிகுதியா

யிருந்தது. விழுப்புண் பட்டுத் துன்புற்ற வீரர்களின் எண்ணிக்கை போர்க்களத்தில் போரில் ஈடுபட்டிருந்த வர்களின் எண்ணிக்கையைவிட மிகுந்திருந்தது. மருத்துவருக்கு உதவியாக மருத்துவப்பணி செய்யும் மாதர் எவருமில்லை. அங்கிருந்த மருத்துவப் பணி மகளிர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவராகையால், அவர்கள் தம் நாட்டு வீரர்க்கே தொண்டாற்றக் காலம் போதாமல் தொல்லைப்பட்டனர்.

புண்பட்ட வீரர்களுக்குக் கட்டுவதற்குப் போது மான கட்டுத் துணிகளும் இல்லை என்ற செய்தி எட்டி யது. புண்பட்டவர்கள் எண்ணிக்கை பெருகிவிட்ட தால், மருத்துவர்களும் மருத்துவப் பயிற்சி பெற்ற பெண்களும் மேலும் பலர் தேவை என்ற செய்தியும் எட்டியது. அப்பொழுது போர்த்துறை அமைச்சராய் இருந்த சிட்னி எட்வர்டு என்பவர், பிளாரன்ஸ் நைட் டிங்கேல் அம்மையாரைவிட அன்பு, இன்சொல், தொண்டு மனப்பான்மை, பொறுப்பு முதலியவை நிறைந்த வேறொருவரைக் காண முடியாது என்று கருதி, உடனடியாகப் போர்க்களஞ் சென்று புண்பட் டாருக்கு உதவும் பணியை ஏற்குமாறு நைட்டிங்கேல் அம்மையாரை வேண்டினார்; போர்க்கள மருத்துவப் பணிப் பெண்கள் துறைத்தலைமைப் பதவியில் இவரை அமர்த்தினார்.

போர் அலுவலகத்திலிருந்து, தாம் மருத்துவப் பணிப் பெண்கள் துணைத் தலைவியாக நியமிக்கப்பட்ட செய்தியை நைட்டிங்கேல் அம்மையார் பெற்றார். 1854ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள், 21ஆம் நாள், கடமையுணர்ச்சியும், உடல் வலிமையும், அறி வாற்றலுமுள்ள-தம்மிடம் பயின்ற-கன்னிப் பெண்கள் முப்பத்தெண்மருடன், நைட்டிங்கேல் அம்மையார்

புறப்பட்டுச் சென்று போர்க்கள மருத்துவ மனையை அடைந்தார்.

அரசியலாரால் வழங்கப்பட்ட இப்பணி நைட்டிங்கேல் அம்மையாருக்கு உலகப் புகழைக்கொணர்ந்தது. செல்வமும், பருவமும், எழிலும், கவர்ச்சியுமுள்ள அம்மையார், பகட்டையும் இன்ப வாழ்க்கையையும் அறவே வெறுத்து நீக்கி, இடுக்கணும் அச்சமும் நிறைந்த போர்க்களத்தில் தொண்டாற்றும் பணியை ஏற்றார் என்றால், இவருடைய தொண்டுணர்ச்சியை என்னென்று புகழ்வது! அம்மையார் போர்க்கள மருத்துவ மனை வந்து சேர்ந்த பிறகு புண்பட்டவருள் நூற்றுக்கு இருவரே இறந்தனர்.

நைட்டிங்கேல் அம்மையார் மருத்துவ மனை ஒழுங்கைப்பற்றிய திட்டங்களை வகுத்தார். அந்த மருத்துவ மனை மூன்றரை கி. மீட்டர் நீளமுள்ளதாயிருந்ததால், பிணியாளரின் படுக்கைக் கட்டில்கள் நெருக்கமாக இடப்பட்டிருந்தன. மேலும், புண்பட்டோரின் தொகை பல ஆயிரங்களுக்குமேல் பெருகினமையாலும், போதிய இடமின்மையாலும் அம்மனையின் சுவர் ஓரங்களிலும் வழிகளிலும் புண்பட்டோரைப் படுக்கவைத்திருந்தனர்.

அந்த மருத்துவ மனைக்குப் பல வசதிகள் தேவைப்படுகின்றனவென்றும், அவைகளை உடனுக்குடன் அளித்து உதவவேண்டுமென்றும் நைட்டிங்கேல் அம்மையார் அரசியலாருக்கு அறிவித்திருந்தார். அதற்கிணங்க, அம்மருத்துவ மனையைப் பார்த்து வருமாறு அரசியலார் மேற்பார்வையாளர்களை அனுப்பியிருந்தனர். அவர்கள் பார்த்துச் சென்றும் எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை. மீண்டும் நைட்டிங்கேல் அம்மையார் எழுதியும் பயன்படவில்லை.

நைட்டிங்கேல் அம்மையார், தாமே நேரிற் சென்று நிலைமையை விளக்கினர். அதன் பயனாக மீண்டும் ஒரு மேற்பார்வையாளர் அம்மருத்துவ மனையைப் பார்வையிட வந்தார். அதன் விளைவாக அம்மருத்துவ மனைக்குக் காற்றேட்டத்திற்கான சாளரங்கள் அமைக்கப்பட்டன. சுற்றியுள்ள இடங்கள் துப்புரவு செய்யப்பட்டன. குடி தண்ணீருக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டன.

நிர்வாக அலுவல்களும் எழுத்து வேலைகளும் முடிந்த பிறகு, நடு இரவிலோ விடியற்காலையிலோ நைட்டிங்கேல் அம்மையார் பிணியாளர்களைப் பார்வையிட வருவார்; அப்படி வருங்கால் ஒரு கைவிளக்குடன் வருவார்.

இவர் ஒவ்வொரு பிணியாளரையும் பார்வையிட வருங்கால் அவர்களுக்கு ஆறுதலைத் தரும் இனிய சொற்களைப் பேசுவார். ஆகவே, இவரை அவர்கள் நந்தா விளக்கென்று வழங்கினர். சிலர் 'உயிருக்கு ஒளியூட்டும் விளக்கேந்திய மங்கை' என்றனர்.

நைட்டிங்கேல் அம்மையார், போர்க்களங்களுக்குச் சென்று என்னென்ன சீர்திருத்தங்கள் தேவை என்பதை நேரிற்கண்டு அறிந்தார். இவ்வாறு இடையருமல் இரவு பகலாக உழைத்தபடியால், நைட்டிங்கேல் அம்மையார் பிணியுற்றூர். இவர் குணமடைய வேண்டுமென இறைவனை வேண்டுவதாக விக்டோரியாப் பேரரசியார் ஓர் ஆறுதல் முடங்கலை நைட்டிங்கேல் அம்மையாருக்கு அனுப்பியிருந்தார்.

நைட்டிங்கேல் அம்மையார், தம் பிணியைப் பொருட்படுத்தாமல், 1856இல் பிரிட்டிஷார் துருக்கியை விட்டு அகலும் வரையில் தமது பணிப்

பொறுப்பை விட்டு நீங்கவில்லை. பிறகு இவர் இங்கிலாந்திற்கு வந்தார். இவருக்காக ஏற்பாடு செய்த வரவேற்புகளை இவர் விரும்பவில்லை. ஆயினும், விக்டோரியா அரசியாரே நேரில் வந்து நைட்டிங்கேல் அம்மையாரை வரவேற்றுப் பாராட்டினர்.

போர்க்களத்தில் இவர் ஆற்றிய பணியைப் பாராட்டிப் பொதுமக்களின் தலைவர்கள் மக்களிடம் ஐம்பதாயிரம் பவுன்கள் நிதி திரட்டி இவருக்குத் தந்தனர். அந்நிதியைக்கொண்டு செயின்ட் தாமஸ் மருத்துவ மனையில் மருத்துவப் பணிப் பெண்களின் பயிற்சிக்காக இல்லம் ஒன்றை நைட்டிங்கேல் நிறுவினார்; அதில் சிறந்த முறையில் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்தார். அது 'நைட்டிங்கேல் மருத்துவ மாதர் பயிற்சி இல்லம்' என வழங்கப்பட்டது. போர் வீரர்களின் உடல் நலம், பயிற்சி, மருத்துவமனை நிர்வாகம் முதலியவை பற்றிய குறிப்புகளடங்கிய ஒரு நூலை 1858இல் இவர் வெளியிட்டார். இவருடைய குறிப்புகள் ஆங்கிலப் படையை வலுப்படுத்தப் பெரிதும் உதவின எனலாம்.

நைட்டிங்கேல் இந்தியாவின் நலத் திட்டங்களில் கருத்துக் கொண்டு, அப்பொழுதிருந்த இந்தியா அமைச்சருக்குப் பல கடிதங்கள் எழுதினார். மக்களின் நலம், நல்வாழ்வு, மக்கட்பணி என்பவற்றில் நாடு, மக்கள் என்ற வேறுபாடு இவரிடம் இல்லை.

நைட்டிங்கேல் அம்மையாரின் மருத்துவ மனைச் சீர்திருத்தம் உலகப் புகழுக்குரியதாகும். மருத்துவப் பணிப்பெண் பணி மதிப்பிற்குரிய பணி என்பதையும், அது சிறந்த பணி என்பதையும் நைட்டிங்கேல் அம்மையார், தம் தொண்டினால் உலகமறியச் செய்தார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கருதி இவர்

மேற்கொண்ட பணியால் இவர் புகழ் உலகமெங்கும் பரவியுள்ளது.

1907இல் நைட்டிங்கேல் அம்மையாருக்குத் 'தகுதிச் சான்று' (Order • Merit) வழங்கப்பட்டது. இந்தப் பெருமை பெற்ற பெண்மணிகளில் இவரே முதல்வர். இவர் தொண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்தார். இவ்வயதில் இவருடைய நினைவாற்றலும் கண்பார்வையும் குறைந்தன.

1910 ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள், 13 ஆம் நாள் தம் தொண்டு நல்ல பலன் அளித்திருக்கிறது என்ற நிறைநெஞ்சத்துடன் நைட்டிங்கேல் அம்மையார் இவ்வுலகை நீத்தார். நைட்டிங்கேல் அம்மையார் பல தொல்லைகளுக்குள்ளாகியும், மக்களின் பணியே ஆண்டவன் பணி எனக் கருதி மனித இனத்துக்குத் தொண்டாற்றினர். பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் வாழ்க்கை, மாணவர் உள்ளத்தில் பொதுத் தொண்டாற்றும் எண்ணத்தைப் பதிய வைக்குமாக.

# 4. லூயி பாஸ்டியர்

மக்கள் பிணியின்றி உடல் நலத்துடன் பல்லாண்டுகள் வாழ்தலும் நாகரிகத்தின் நல்லியல்பே. உடல் நலம் வாய்ந்தவர்களுக்கு உலக வாழ்க்கை இன்பமுடையதாக அமையும். உடல் நலமுடையவர்களே முற்றிலும் இன்பம் துய்க்க முடியும். இன்ப வாழ்வுக்குரிய நலன்கள் யாவும் சிறக்க அமையப் பெற்றிருந்தும், உடல் நலக் குறைவால் அவ்வின்பமனைத்தையும் இழந்து பலர் துன்பத்துள் ஆழ்ந்து தவிக்கின்றனர். ஆகவே, நாம் நமது உடலினை உரமுடையதாக்கி, நோய்க்கிடங்கொடாமல், குறைவற்ற செல்வமாகிய நோயற்ற வாழ்வை நாட வேண்டும்.

உடல் நலத்திற்குப் பகையாயிருப்பது பிணியே. அப்பிணிகள் பலவாகும். கை, கால், நரம்பு முதலிய உறுப்புகள் பற்றி வருவனவற்றை ஒரு வகையுள் அடக்கலாம். இவ்வகைப் பிணிக்குள்ளானவர்களுக்கு உற்றார் உறவினர் உதவலாம். ஆனால், வேறு வகைப் பிணிகள் சில உள்ளன. அவை தொற்றும் பிணிகள். அவைகள் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு எளிதில் பரவக் கூடும். தொற்றும் பிணி ஒருவருக்கு வந்தால், அவரோடு நெருங்கிப் பழகும் பலரையும் அது பற்றுகின்றது.

இவ்விதத் தொற்றும் பிணிகள் சிற்சில காலங்களில் ஆங்காங்கே மிகக் கொடுமையாகத் தோன்றி அவ்விடங்களிலுள்ள மக்களுட் பெரும்பாலாரின் உயிர்களைக் கொள்ளைகொண்டு போகின்றன. இப்பிணிகள்


மக்களிடையிலும், விலங்குகளிடையிலும். செடி கொடிகளிடையிலும் காணப்படுகின்றன. இத்தகைய தொற்றும் பிணிகளால் சில காலங்களில் கன்று காலிகளும் ஏராளமாக இறக்கின்றன.

மனிதன் இவ்வுலகில் தோன்றிய கால முதலே பிணிகளும் இருந்து வருகின்றன. ஆனால், மனிதன் நலமாக இருக்குங்கால் இப்பிணிகள் அணுகுவதில்லை. ஏதேனும் காரணத்தால் ஒருவன் உடல் மெலிவுற்றால் பிணிக் கிருமிகள் அவன் உடலிற்குள் புகுகின்றன. அப்போது அவன் பிணிவாய்ப் பட்டிருப்பதாகச் சொல்லுகிறான். பிணியாளன் படுக்கையிலிருக்கும் காலம் முழுவதும் அவன் உடலிற்குள் பிணிக் கிருமிகளின் போராட்டம் நடைபெறுகிறது. அப்போரின் இறுதியில் பிணிக்கிருமிகள் வென்றுவிட்டால், அவன் இறந்து போகிறான். பிணிக்கிருமிகள் தோல்வியுற்று அழியுமானால், அவன் பிழைத்துவிடுகிறான்.

முற்காலத்திலிருந்தவர்களுக்குத் தொற்றும் பிணிகள் தோன்றுவது எதனால் என்பது தெரியவில்லை. இப்பிணிகள் வாராமல் தடுப்பதற்கும், வந்தால் மருத்துவம் செய்வதற்கும் உரிய முறைகளை அவர்கள் சரிவர அறியாமலிருந்தார்கள். தொற்றும் பிணிகள் தோன்றி மக்களைப் பெரிய அளவில் மாளச் செய்த போது, அது சிறு தெய்வங்களின் சினத்தால் விளைந்ததெனக் கருதிக் கொடை, பூசை முதலிய கொடுத்து வாளாவிருப்பார்கள். தொற்றும் பிணிகள் தோன்றி விட்டால் பிணியுற்றவர்களைப் பேணாமல் அங்கேயே போட்டுவிட்டுச் சிலர் வேற்றூர்களை நாடிச் செல்வர்; அங்கே உணவு, வீடு போன்றவை சரிவரக் கிடைக்காமல் தொற்றும் பிணிகள் எங்கே பின் தொடருமோ என அஞ்சி அஞ்சி வாழ்வர்.

இங்ஙனம் அச்சத்தோடு மக்கள் வாழ்ந்தக்கால், அச்சம் நீங்கி வாழ்க்கையின் இன்பத்தை நுகர வழி வகை செய்த பெரியார் லூயி பாஸ்டியர் என்பவராவர். அவர் தம் அரிய முயற்சியால் பல பிணிகளின் அடிப் படைக் காரணங்களையும் அவற்றைத் தடுக்கும் முறை களையும் குணப்படுத்தும் வழிகளையும் கண்டறிந்தார்.

1822 ஆம் ஆண்டு டோல் என்ற சிற்றூரில் லூயி பாஸ்டியர் தோல் பதனிடும் வேலை செய்பவர் ஒரு வரின் மகனாராய்ப் பிறந் தார். தந்தையார் கல்வி கற்றவரல்லர். ஆயினும் அவர், தம் மைந்தரைச் சிறந்த கல்வி அறிவுடை யவராகச் செய்ய வேண்டு மென்று பெரிதும் விரும்பி லூயியை ஒரு பள்ளிக்கு அனுப்பிக்கல்வி கற்க வழி வகை செய்தார். திறமை யுடன் கல்வி கற்கும் மாணவன் ஆசிரியர் அன் பைப் பெறுவதுண்டல் லவா? லூயி பாஸ்டியரும் அவ்வண்ணமே திறமை யுடன் கற்று ஆசிரியர்கள் எல்லாருடைய மனத்தை யும் கவர்ந்து, அவர்களின் அன்பிற்குரியவரானார்.



லூயி பாஸ்டியர்

இளமையிலேயே உழைக்குமாற்றலைக் கொண்டார். எதனையும் ஆழச் சிந்தித்து உண்மை காணும் ஆற்றல் அவருக்கு இயல்பாக அமைந்திருந்தது.

இரசாயனக் கல்வியில் அவர் உள்ளம் நாட்டம் கொள்ளவே, அதைக் கருத்தூன்றிக் கற்று வந்தார். தேர்வுகளில் தேறிப் பட்டம் பெற்றதும் அவர் ஒரு கல்விக்கூடத்தில் இரசாயன ஆசிரியராய் அமர்ந்தார். பின்னர் ஸ்டிராஸ்பர்கு பல்கலைக் கழகத்தில் இரசாயனப் பேராசிரியர் பதவி அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் மனைவியாரும் அவர் செய்து வந்த இரசாயன ஆராய்ச்சிகளுக்கு வேண்டிய உதவிகள் புரிவதிலேயே ஈடுபட்டிருந்தார்.

பட்டம் பெற்றவுடன் படிப்பு முடிந்தது என்றும் வேலை கிடைத்தவுடன் உழைப்பு நின்றது என்றும் கருதுகிற பட்டதாரிகள் கூட்டத்தைச் சார்ந்தவரல்லர் லூயி பாஸ்டியர். அவர் இரசாயனத் துறையில் வெளி வரும் புதிய நூல்களைப் படித்தறிந்தும், அறிஞர் பிறர் செய்துவரும் ஆராய்ச்சிகளைப் படித்து ஆராய்ந்தும் சிந்தித்தும் வந்தார். மனத்தை ஒருநிலைப்படுத்தி, அரிய பொருள்களைப் பற்றிச் சிந்தித்த வண்ணமாகவே அவர் நெடுநேரம் இருப்பார். அவருக்கு ஏதாவது ஓர் உண்மை விளங்கிவிட்டால் சிந்தனையால் சோர்வுற்றிருந்த அவரது முகத்திலே மின்னல் போலப் புன்னகை தவழ்ந்து விளங்கும். அவர் தம் மனைவியாரிடமும் நண்பர்களிடமும் தாமறிந்த உண்மைகளைக் கூறி மகிழ்வார்.

1854 ஆம் ஆண்டு லூயி பாஸ்டியர் பிரான்சின் வடக்த்த் திசையிலிருக்கும் லில்லி என்ற இடத்தி லுள்ள அறிவியற் கல்லூரியின் தலைவராய் நிய மிக்கப்பட்டார். அங்கே மது வகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல இருந்தன. லூயி தமது இரசா யன ஆராய்ச்சி வாயிலாகக் கைத்தொழில் வாணிகம் முதலியவைகளை முன்னேறச் செய்யக்கூடும் என்ற

நம்பிக்கை கொண்டிருந்தார். லூயி பாஸ்டியர் தம் வாழ்க்கையில் காண்கின்ற சாதாரண நிகழ்ச்சிகளைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்கினார். இறைச்சி சில நாள்களில் அழுகி நாற்றமெடுக்கிறது. நெடுநேரம் வைத்திருந்தால் பால் புளிக்கிறது. திராட்சைப் பழச் சாறு புளித்து மதுவாக மாறுகிறது. அதனைப் பருகுபவர்களுக்கு மயக்கத்தைத் தருகிறது. இவற்றின் காரணங்கள் என்ன என லூயி பாஸ்டியர் ஆராயலானார்.

இத்தகைய மாறுதல்களை உண்டு பண்ணும் அணுவுயிர்களைக் குறித்து அறிஞர்களிடையில் கருத்து வேற்றுமைகள் இருந்து வந்தன. சில ஆராய்ச்சியாளர்கள் இவ்வணு உயிர்கள் தாமே தோன்றுகின்றன என்று கூறினார்கள். ஆனால் பாஸ்டியரும் வேறு சிலரும் மூலமான ஒன்றின்றி ஓர் உயிரும் தோன்ற முடியாது என்றும், ஓரிடத்திலுள்ள அணு உயிர்கள் காற்றினால் எடுத்துச் செல்லப்பட்டுப் பற்பல இடங்களை அடைந்து அங்கே வளர்கின்றன என்றும் தம் கருத்தை வெளியிட்டனர்.

பாஸ்டியர் ஒரு சீசாவுக்குள் சிறிது "சூப்பு" (இறைச்சிச் சாறு) எடுத்துக்கொண்டார். அதைக் கொதிக்க வைத்து அதனுள் இருந்த அணுவுயிர் இறந்துபோகும்படி செய்தார். பின்னர் அந்தச் சீசாவின் கழுத்துப் பாகத்தைச் சூடேற்றி நன்றாக வளைத்து, வளைவுக்கு மேலுள்ள பாகத்தை நீள இழுத்தார். இப்பொழுது சீசாவுக்குள் கழுத்து வரையிலுந்தான் வெளிக் காற்றுச் செல்லும். வளைவின் கீழுள்ள சீசாவின் உட்பாகத்தில் காற்றுப் புகவில்லை. ஆதலால் பல நாள்களாகியும் சூப்பில் எந்தவித மாறுதலும் உண்டாகவில்லை. பின்னர் அவர் அந்தச்

சீசாவைச் சற்றுச் சரித்துச் சூப்பின் ஒரு பாகம் கழுத்திலுள்ள வளைவில் தங்கும்படி செய்தார். சிலநாள்களில் கழுத்தில் தங்கிய சூப்புக் கேடு அடைந்தது. கழுத்துவரை சென்று பரவும் காற்றில் மிதக்கும் அணுஉயிர்கள் அந்தச் சூப்பில் கலந்ததே அதற்குக் காரணம் என்று பாஸ்டியர் மெய்ப்பித்தார்.

மேலும் அக்கருவியில் வெளிக் காற்றினால் வந்து சேர்ந்த அணு உயிர்கள் எந்த அளவில் காணப்படுகின்றன என்பதை விளக்கிக் காட்டினார். அக்கருவிகளில் ஒன்றை மக்கள் மிகுதியாகத் தங்கும் அறைக்குள் லூயி பாஸ்டியர் எடுத்துச் சென்று அதன் கழுத்தை உடைத்துக் காற்றை உள்ளே புகவிட்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு அதனை வேறு வகையில் இறுக மூடிவைத்துக்கொண்டார். இவ்விதமே வயல் வெளியிலும் மலையுச்சியிலும் அதைப்போன்ற வேறு கருவிகளை எடுத்துச்சென்று அங்குள்ள காற்றை உள்ளே புகவிட்டுப் பின்னர் மூடி வைத்துக்கொண்டார். சில நாள்களுக்குப் பின்னர் மூன்று சீசாக்களையும் பரிசோதித்தார். லில்லி என்னும் இடத்தில் வேலை பார்க்கச் சென்றபின் அவர் அவற்றைக் குறித்து மேன்மேலும் அறிய முற்பட்டார்.

'பீட்ரூட்டு'க் கிழங்கிலிருந்து மதுபானம் செய்வது லில்லி வாசிகளின் சிறப்புக் கைத்தொழிலாகும். ஒருவகை மதுவைத் தயாரிப்பதற்கு 'ஈஸ்டு' என்ற பொருளை அவர்கள் பயன்படுத்திவந்தார்கள். ரொட்டி சுடும்போது, அது பொங்கிப் பருப்பதற்கு அதில் சேர்க்கப்பட்ட ஈஸ்டே காரணமாகும்.

மது உற்பத்தி செய்பவர் ஒருவர் பாஸ்டியரிடம் வந்து தாம் செய்யும் மது விரைவில் கெட்டுப்போவதாகவும் அதற்குரிய காரணத்தை அறிந்து கூறு

மாறும் கேட்டார். லூயி உடனே மது ஈஸ்டு முதலிய வற்றைக் குறித்து ஆராயத் தொடங்கினார். ஆராய்ச்சி யாளர்களில் லூயி மிக மேம்பட்டவர். மக்களுக்குப் பயன்படும் வகைகளிலே உயர்ந்த குறிக்கோளோடு லூயி தமது ஆராய்ச்சியை நிகழ்த்தினார். அவர் எந்தப் பொருளைக் குறித்து ஆராய்ந்தாலும் அதன் வாயிலாக உலகுக்கு நன்மையே விளைவித்து வந்தார். சிறந்த ஆராய்ச்சி முறையைப் பின்பற்றுவதும் சரியான உண்மைகளைத் தெரிந்துகொள்வதும் ஆகிய இயல்பு கள் அவரிடம் இயற்கையிலேயே அமைந்திருந்தன.

ஈஸ்டு என்பது நுண்ணிய பல அணுவுயிர்களின் தொகுதியெனப் பாஸ்டியர் ஆராய்ந்து தெரிந்துகொண் டார். ஈஸ்டிலுள்ள அணுஉயிர்கள் நலமுள்ளவைகளா யிருந்தால், அந்த ஈஸ்டைக் கலந்து செய்யும் மது கெடாமல் இருக்கும். அவ்வணுவுயிர்கள் நலமற்ற வைகளாயிருந்தால், அந்த மது கெட்டுத் துர்நாற்றம் வீசும் என்பதை அறிந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு பாஸ்டியர் பாரிஸ் நகரிலுள்ள புகழ்வாய்ந்த ஒரு கல்லூரியின் விஞ்ஞான ஆராய்ச்சித் துறை மேற்பார்வையாளராய் அமர்ந் தார். அங்கும் அவர் உயிர் அணுக்களைப்பற்றிய ஆராய்ச்சியிலே மூழ்கி இருந்தார். அணு உயிர்கள் ஆங்கிலத்தில் 'பாக்டிரியா' எனப்படும். அவை நம் கண்களுக்குப் புலப்படாத மிக மிகச் சிறியவை. பூதக்கண்ணாடியின் துணை கொண்டே அவற்றைக் காணமுடியும். அவை மண், நீர், காற்று ஆகிய எல்லா இடங்களிலும் வாழ்கின்றன. அவை பல உருவ வேறு பாடுடையனவாகவும், சில மயிர் போன்ற உறுப்புகள் பெற்றவையாகவும் காணப்படும்.

பாஸ்டியர் செய்த சோதனைகளிலிருந்து மக்கள் கூடியிருக்கும் இடங்களிலுள்ள வாயு தூசி நிறைந்து அணு உயிர்களை மிகுதியாகப் பெற்றிருக்கிற தென்றும், வயல் வெளிகளிலுள்ள காற்று அணு உயிர்களைச் சிறிதளவே பெற்றிருக்கிற தென்றும், மலையுச்சியிலுள்ள காற்று மிக்க தூய்மையுற்றிருக்கிறதென்றும் அறிந்து, அதனை மிகத் தெளிவாக வெளிப்படுத்தினர். இவ்வாறு ஒவ்வோர் இடத்திலுமுள்ள காற்றின் இயல்பைப் பாஸ்டியர் ஆராய்ச்சி செய்து வெளியிட்டார். இம்மாதிரியாகக் காற்றின் இயல்பைப் பாஸ்டியர் வெளியிட்ட பிறகுதான் இல்லங்களில் கதவுகளையும் சாளரங்களையும் அமைத்துக் காற்றோட்ட முள்ளனவாகச் செய்ய வேண்டிய இன்றியமையாமையையும், காலை மாலைகளில் காற்றுள்ள இடங்களுக்கு உலாவச் செல்வதன் தேவையையும் மக்கள் உணரத் தொடங்கினர்கள்.

லூயி பாஸ்டியர் அணு உயிர்களைப் பற்றி ஒரு புதிய உண்மையை அறிவியல் ஆராய்ச்சித் துறையில் தோற்றுவித்தார். அணு உயிர்களில் பல இனங்கள் உண்டென்றும், அவை உருவத்தில் மாறுபடுவது போலத் தத்தம் இயல்புகளிலும் மாறுபடுகின்றன என்றும், பால் புளிப்பதற்கும் பழச்சாறு மதுவாகி மயக்கம் தருவதற்கும் இவ்வணு உயிர்களே காரணம் என்றும் அவர் வெளியிட்டார்.

அணுவுயிர்களில் சில மனிதனுக்குப் பெரிதும் பயன்படுபவைகளாய் இருக்கின்றன; வேறு சில தீமையை விளைவிக்கக் கூடியனவாய் இருக்கின்றன. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் வரும் பலவகைப் பிணிகளுக்கு இவ்வணு உயிர்களே காரணம் என்று வெளிப்படுத்திய பெருமை அம்மேதையைச் சேர்ந்ததே.

காலரா, டைபாய்டு, வைசூரி, க்ஷயம் முதலிய பிணிகளெல்லாம் ஒவ்வொரு வகைக் கிருமிகளால் உண்டாகின்றன. இவ்வணு உயிர்கள் காற்று, தண்ணீர், உணவு இவை வாயிலாக மனிதன் உடலிலும் பிராணிகளின் உடலிலும் புகுகின்றன. இவ்வணுக்கள் சிறிது நேரத்திற்குள் ஒன்று நூருகப் பெருகிவிடும். சில நாள்களில் கோடிக் கணக்கில் பெருகி மனிதனையும் விலங்குகளையும் பிணிவாய்ப் படச்செய்வதுடன், ஒவ்வோர் அணுவும் ஒவ்வொரு வகையான பிணியை உண்டுபண்ணுகிறது.

இப்பிணி அணுக்கள் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுங்கால் நாம் தொற்றும் பிணி வந்துவிட்டது என்கிருேம். உறுதி, உழைப்பு, வெற்றி என்ற கொள்கைகொண்ட பாஸ்டியர் இவ்வணுக்களின் வேறுபாடுகளை அறிந்து, இவற்றைத் தனித்தனியாகப் பிரித்தார்; தமது ஆராய்ச்சிக் கூடத்தில் ஒவ்வொரு வகையான அணுக்களையும் பெரிய சாடிகளில் வளர்த்து வந்து, அவ்வணுவுயிர்களைப் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொண்ட பின் மனிதர்களுக்கு அவற்ருல் விளையும் தீமைகளை அகற்றுவதற்கான முறைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்தார்.

'ஆந்திராக்ஸ்' என்னும் ஒருவகைத் தொற்றுப் பிணி ஆடு மாடுகளுக்கு வரக்கூடியது. சில வேளைகளில் இப்பிணி பற்பல காரணங்களால் மனிதர்களிடமும் பரவுகிறது. இப்பிணி கண்ட விலங்குகள் பெரும்பாலும் இறந்துவிடும்; சில பிழைப்பதுமுண்டு. அவ்வாறு பிழைத்த விலங்குகளுக்கு இரண்டாம் முறையாக இப்பிணி வருவதில்லை. வழக்கம் போலப் பாஸ்டியர் கூர்ந்து கவனித்து இவ் வுண்மையை அறிந்தார். அவரது நுண்ணறிவில் ஒரு கருத்துத்

தோன்றியது. மனிதனிடத்திலும் கன்று காலிகளிடத்திலும் இப்பிணியைச் சிறிய அளவில் முதலில் உண்டு பண்ணிக் கொண்டால், பின்னர் இப்பிணி வாராமல் தடுத்து விடக் கூடுமென்று எண்ணினர். அவர் தம் கருத்தைச் சில அறிஞர்களிடம் கூறினர். அவர்கள் இதைக் கேட்டவுடன் சினங்கொண்டார்கள். நன்ருயிருக்கும் உடலில் பிணிக் கிருமிகளைச் செலுத்துவதால் பிணி உண்டாகி மரணம் ஏற்படும் என்றும், பிணி வாராமல் தடுக்க அது பயன் படாதென்றும் பலரும் கூறினர். இச்சோதனையை மெய்ப்பித்துக் காட்டவேண்டுமென்று பாஸ்டியரிடம் மக்கள் கூறினர். ஆனல், இச்சோதனைக்கு எந்த மனிதனும் முன் வரவில்லை. ஆகவே, ஆடு மாடுகளிடத்தில் சோதனை செய்ய வேண்டியதாயிற்று. பாஸ்டியர் 48 விலங்குகளைத் தேர்ந்து எடுத்துக்கொண்டார். அவற்றை இரு பகுதிகளாகப் பிரித்து, ஒரு பகுதியைச் சார்ந்த 24 விலங்குகளின் உடலிற்குள் ஆந்திராக்ஸ் பிணி அணுக்களில் ஆற்றல் குறைந்த புதிய அணுக்களைச் சிறிதளவாகக் குத்திச் செலுத்தினர். இரண்டொரு நாள்களில் அவ்விலங்குகளுக்கு ஆந்திராக்ஸ் நோய் கண்டது; ஆனல், கடுமையாக உண்டாகவில்லை.

சில நாள்களுக்குப் பிறகு நாற்பத்தெட்டு விலங்குகளுக்கும் ஆந்திராக்ஸ் அணுக்களில் வீரியமுடையவற்றைக் குத்திச்செலுத்தினர். மக்கள் திரளாகக் கூடி அதைப் பார்த்தனர். மூன்ரும் நாள் அதன் முடிவைக் காணலாமென்று லூயி அறிவித்தார். 'மக்களோ, ஆர்வத்தைக் காட்டுகின்றனர். சோதனையின் முடிவோ, நன்ருக இருக்க வேண்டும்' என்ற கவலை லூயிக்கு உண்டாயிற்று. மூன்ரும் நாள் மக்கள் திரண்டு

சோதனையின் முடிவைக் காண வந்தனர். முதலில் பிணிவாய்ப்பட்டிருந்த 24 விலங்குகளும் அப்பிணியைத் தாங்கிக்கொண்டு உயிரோடிருந்தன. ஏனைய 24 விலங்குகளில் 22 இறந்து கிடந்தன. இச்செய்தி நாடெங்கும் பரவிற்று. ஆந்திராக்ஸ் பிணிக்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது என்று மக்கள் மகிழ்ந்தனர். அம்மருந்தை அனுப்பி வைக்குமாறு பாஸ்டியருக்குப் பல இடங்களிலிருந்தும் கடிதங்கள் வந்தன. ஆகவே, பாஸ்டியர் அம்மருந்தைப் பெரிய அளவில் செய்வதற்கான அணு உயிர் உற்பத்தி நிலையம் ஒன்றைத் தனியாக ஏற்படுத்தினர்.

நோய்களைத் தடுப்பதற்கு மருந்து ஊசி மூலம் குத்தி வைக்கும் முறை அக்காலத்தில் வழக்கத்திலிருந்தது. அதனை முதல் முதலாகக் கண்டவர் ஜென்னர் ஆவர். மக்களுக்கு வைசூரி வாராமல் இருப்பதற்காக வைசூரி கண்ட பசுவினிடத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மருந்தைக் குத்திவைப்பது பயன் தருவதாகும் என்று அவர் முதலில் வெளியிட்டார். அறிஞர்கள் அதனைச் சோதனை செய்து பார்த்து உண்மையை உணர்ந்து பின்னர் ஒப்புக்கொண்டனர். ஆனல் ஜென்னரோ, அணு வுயிர்களைக் குறித்து ஒன்றுமே அறியாதவராய் இருந்தார்.

வைசூரிக்கு மட்டுமே தடுப்பு மருந்து கூறப்பட்டது. தடுப்பு மருந்தைக் குத்திவைப்பதால் வைசூரி வாராமலிருப்பதற்குக் காரணம் என்ன என்பது ஒருவருக்குமே விளங்காததாயிருந்தது. ஆனல், பாஸ்டியரின் ஆராய்ச்சியோ, முற்றிலும் விளக்கமாய் இருந்தது. அவர் பிணி அணுக்களின் இயல்புகளையும் உயிரினங்களின் உடலிற்குள் அவை எத்தகைய மாறுதல்களைச் செய்கின்றன என்பதையும் அறிந்

திருந்தார்; தடுப்பு மருந்து குத்துவதன் தேவையை முறைப்படி மெய்ப்பிக்கப் பாஸ்டியரால் முடிந்தது. பிரெஞ்சு அரசாங்கம் அவரைப் பெருமைப் படுத்தியது.

பாஸ்டியர் வேறொரு கடுமையான பிணிக்கும் சிகிச்சை கண்டுபிடித்தார். நாய்களுக்கு ஒருவகைப் பிணி ஏற்படுவதுண்டு. அப்போது அவை தம் அறிவை இழந்து நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு இங்கும் அங்கும் அலைந்து திரியும்; பிற விலங்குகளை யும் மனிதர்களையும் கடித்துவிட்டு ஓடும். அந்த நாயை வெறி நாய் என்று மக்கள் கூறுவர். வெறி நாய் மனிதர்களைக் கடித்தால் அதன் உடம்பில் பரவி யிருக்கும் நஞ்சு மனிதனின் உடலிற்குள் புகுந்து அவனைப் பிணிக்கு ஆளாக்குகிறது. அக் காலத்தில் வெறி நாய் கடிக்கு ஆளானவர் எவருமே பிழைத்த தில்லை. பாஸ்டியர் அப்பிணியைக் குணப்படுத்து வதற்கான ஒரு வழியைக் காண வேண்டுமென்று ஆராய்ந்தார். அந்தப் பிணிக் கிருமிகளைக் காண முயன்றார். ஆனால், அவற்றைக் காண முடியவில்லை.

1885ஆம் ஆண்டு ஒரு நாள் ஒரு சிறுவனை அவன் தாய் அழைத்துக்கொண்டு பாஸ்டியரிடம் வந்தாள். அவன் உடல் முழுவதும் வெறிநாய் கடித்துக் குருதி கசிந்துகொண்டிருந்தது. அச்சிறுவனின் அன்னை பாஸ்டியரைப் பார்த்து, "உங்களுக்கு விலங்குக் கடிப் பிணியைக் குணப்படுத்த முடியுமானால், என் மகனை யும் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக் குண்டு. நீங்கள் இவனைக் குணப்படுத்த வேண்டும்" என்று வேண்டினாள். பாஸ்டியர் உடனே அப்பிணிக்கு மருத்துவம் செய்யத் தொடங்கினார்; அந்தச் சிறு வனும் சில நாள்களில் பிணி நீங்கிக் குணமடைந்தான்.

கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் பாஸ்டியரின் ஆராய்ச்சி உதவியாய் இருந்தது; பிரான்ஸ் நாட்டில் பட்டுப் புழுவை வளர்த்துப் பட்டு நூல் எடுத்து ஆடை நெய்யும் கைத்தொழில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஒரு சமயம் பட்டுப் புழுவிற்கு ஒரு வகைப் பிணி உண்டாகவே, புழுக்கள் பலவும் இறந்து போயின; பட்டு வணிகர்கள் பாஸ்டியரிடம் முறையிடவே, அவர் பல திங்கள் வரை ஆராய்ச்சி செய்து, ஒரு வகை நுண்ணிய அணுக்கிருமிகளே பட்டுப் புழுவின் நோய்க்குக் காரணம் எனக் கண்டறிந்தார். பிறகு அக்கிருமிகளைக் கொல்வதற்கும் அவை புழுக்களை மேலும் அணுகாமல் தடுப்பதற்குமான வழிகளை ஆராய்ந்து அவர்களுக்குக்கூறி, அவர்களும் இம்முறைகளைப் பின்பற்றவே பட்டுப் புழுக்கள் பிணி நீங்கி முன் போலப் பட்டு நூலை மிகுதியாகத் தந்தன.

பாரிஸ் நகரில் பாஸ்டியர் பெயரால் உள்ள ஆராய்ச்சி நிலையம் அவர் மக்களுக்குச் செய்த பெரு நன்மையின் சின்னமாய் அமைந்து, அவர் புகழை உலகெங்கும் விளக்குகிறது. உலகிலுள்ள பல நாடுகளிலிருந்து அறிஞர் பலர் அணுவுயிர்களைப் பற்றிய ஆராய்ச்சி முறைகளை அறிய அங்குச் செல்கின்றனர். 1881இல் பாஸ்டியர் காலத்திலேயே அந்நிலையம் நிறுவப்பட்டது. அதன் தொடக்கத்தில் பாஸ்டியர் ஒரு பேருரை நிகழ்த்தினர். அப்போது அவர், "உலகில் இரண்டு ஆற்றல்கள் ஒன்றோடொன்று பகைமை காட்டிப் போராடிக் கொண்டிருக்கின்றன. ஒன்று மக்களை அழிக்க முயல்கிறது. மற்றொன்று மக்களைப் பேணிக் காக்க முயல்கின்றது; இவற்றுள் எது வெற்றி பெறும் என்பதை ஆண்டவரே அறிவார். ஆனால் அறிவியல் மனிதனது நல்லுணர்ச்சிகளுக்கும் நன்னோக்கத்திற்கும் அடி பணிந்து அவனுக்கு இன்

பத்தையும் நீண்ட ஆயுளையும் தரக் காத்திருக்கிறது’’ என்று குறிப்பிட்டார்.

1892ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், 27 ஆம் நாள் உலக அறிஞர் எல்லோரும் திரண்டு பாரிஸ் பல்கலைக் கழகத்திலே ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தினர். அன்று ஒரு பெரு விழாப் போன்றே இருந்தது. அன்று நடந்த கூட்டத்தில் பாஸ்டியரால் பேச முடியவில்லை. அவருடைய பேச்சை அவர் மகனுர் படித்தார். அதில் துன்பப்படும் மக்களுக்கு உதவி செய்ய முன் வருபவரிடமே எதிர் காலம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வரிய பெரிய பாராட்டுகளுக்கு ஆளான பாஸ்டியர் எப்பொழுதும் எளிய தூய சிந்தனையிலேயே இருந்தார். ஆழ்ந்த சிந்தனையும் தளராத ஊக்கமுமே அவருக்கு வெற்றி அளித்தன. இத்தகைய நாகரிகச் சிற்பி, 1895 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள், 27 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்து அழியாப் புகழெய்தினுர்.


தோல் பதனிடுபவர் ஒருவருக்கு மகனுய்ப் பிறந்து, அறிவியல் மேதையாய்த் திகழ்ந்து, மக்கள் சமாதான வாழ்விலேயே வாழவேண்டும் என்று கருதி மானிடர் துயரைத் தீர்க்கத் தமது வாழ்க்கையையே காணிக்கையாக்கிய லூயி பாஸ்டியரை ஒரு நாகரிகச் சிற்பி என்பது மிகையாகாது. அவரது பெயர் உலகமெங்கும் ஒவ்வொருவர் இல்லத்திலும் அறியப்படும். அவருடைய அறிவியல் ஆராய்ச்சி மானிட வாழ்வை எந்த அளவில் சிறப்புறச் செய்யும் என்பதை அவரே தமது ஆராய்ச்சிகளால் விளக்கினுர். அவருடைய உழைப்பின் பயனுகக் கணக்கற்ற மனிதர் பல வகைத் துன்பங்களினின்று காப்பாற்றப்பட்டனர்.

## 5. இரவீந்திரநாத தாகூர்

மேனுடுகளில் ஆன்ம ஒளி வீசிய காலம் ஒன்று இருந்தது. சிறந்த தத்துவப் பேரறிஞர்கள் அந்த நாடுகளில் தோன்றி அன்பு, அருள், தியாகம் ஆகிய நெறிகளை மக்களுக்கு வகுத்துச் சென்றிருக்கிருர்கள். ஆனுல், ஆன்ரேர் காட்டிய அறவழியை, அவர் வழி வந்த மக்கள் பேராசையால் மறந்து வழி தவறிச் செல்கின்றனர். இயந்திரம், உற்பத்தி, பண்டம், வாணிகம், செல்வம் என்ற பல்லவியைப் பாடி இக் கால மக்கள் ஆன்ம வளர்ச்சியை அறவே கைவிட்டனர்; இறைவனுக்கும் தமக்குமுள்ள தொடர்பைக் கூட மறக்கலாயினர். கீழ்நாட்டு நாகரிக ஒளி ஆன்ம வலிமையாக அமைந்து உலக வாழ்வை மறக்கச் செய்தது. மேல்நாட்டு நாகரிக ஒளியோ ஆன்மாவைப் பொருட்படுத்தாமல் உலக வாழ்வு ஒன்றுக்குரிய பொருளேயே முதன்மையாகக் கொண்டு அமைந்துள்ளது.

மேனுட்டார் தாம் சொல்லும் உலக வாழ்வு நேரானது என்று கருதினர்; கீழ்நாட்டவரும் தாங்கள் கூறும் ஆன்ம நெறியே நேரானது என்று கருதினர். மேல் நாட்டினரும் கீழ் நாட்டினரும் அரசியல் போன்ற காரணங்களால் அவநம்பிக்கையும் வெறுப்புணர்ச்சியும் கொண்டு எதனேயும் நேருக்கு நேரே உணரும் ஆற்றல் அற்றவர்களா யிருந்தனர். பொதுவாக, நாகரிக ஒளி முற்போக்கடையாமலே பிற்போக்கு நெறியில் சென்றுகொண்டிருந்தது. ஆனுல், இவ்விரு நாகரிகங்களுக்கும் ஒரு பாலம் அமைத்து ஒருமைப்

பாட்டை உண்டுபண்ண வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்விரு நாகரிகங்களுக்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தியவர் நாகரிக ஒளியாய்த் திகழ்ந்த கவியரசராகிய இரவீந்திரநாத் தாகூர் அவர்களே ஆவார்.



இரவீந்திரநாத் தாகூர்

தாகூர் இந்தியத்தாயின் தவப் புதல்வர்களில் ஒருவர். பல`துறைகளில் ஆற்றலும் திறமையும் வாய்ந்தவர். வங்காள மொழியிலே முதல்தரமான கவிஞர்; ஆங்கில மொழியிலும் நிரம்பிய புலமை வாய்ந்தவர். கட்டுரைகள், சிறு கதைகள், நவீனங்கள், நாடகங்கள் முதலியவற்றுல் வங்காள இலக்கியத் துறையினை வளப்படுத்தியவர்; அவர் ஒரு சிந்தனையாளர்; சமயஞான ஆசிரியர்; சமூக சீர்திருந்தக்காரர்; ஓவியப்புலவர்; இசைப்புலவர்; இந்தியப் பண்பாட்டிலும், ஒழுக்க முறைகளிலும் வடித்தெடுக்கப்பட்ட நம் நாட்டை மேனுட்டார் உள்ளவாறு உணர்ந்து நம் நாட்டின் பெருமையை அறிந்துகொள்வதற்கு அவர் புரிந்த தொண்டுகள் எண்ணிறந்தன.

தாகூர் வங்கநாட்டில் கல்வி, செல்வம், பண்பாடு, ஆன்ம உணர்ச்சி ஆகிய யாவும் ஒருங்கே அமைந்த ஒரு பெரிய குடும்பத்தில் 1861ஆம் ஆண்டு, மேத் திங்கள், ஆறும் நாளில் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் தேவேந்திரநாத தாகூர். அவர் உயர் குணங்

களும் பற்றற்ற தூய வாழ்க்கையு முடையவராய் இருந்ததால் அவரை அனைவரும் மகரிஷி என்று அன்புடன் வழங்கிவந்தனர். அவர் மனைவியார் சாரதா தேவியார் கணவனுக்கேற்ற குணக்குன்றுய் விளங்கினர். அவர்களுக்குப் பிறந்த பதினைந்து மக்களுள் பதினன்காம் மகவாகத் தோன்றியவரே இரவீந்திர நாத தாகூர்.

தேவேந்திரநாத தாகூர் வங்காளத்தில் நிறுவப் பெற்றிருந்த ஆன்மஞான அவையொன்றைச் சார்ந்து அதன் வாயிலாகச் சமய உண்மைகளை மக்களுக்கு ஊட்டிவந்தார். உயர்ந்த ஒழுக்கமும், சிறந்த ஆற்றலும் வாய்ந்த பல பெரியவர்கள் அந்த அவையின் வளர்ச்சிக்கு உதவிபுரிந்தனர். எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த பரம்பொருள் ஒன்றுண்டென்றும், உலகிலுள்ள சமயங்கள் வெவ்வேறு பெயர்களால் வழங்கப்படினும் அவற்றின் அடிப்படையான உண்மைகளில் வேற்றுமை எதுவும் இல்லையென்றும் அவர் மக்களுக்கு எடுத்துரைத்தார். அந்த அவையிலிருந்து திங்களிதழ் ஒன்று வெளியிடப்பட்டது. அதிலுள்ள பொருள் நிறைந்த கட்டுரைகள் நாடெங்கும் பரவி மக்களிடையே நல்லுணர்வையும் நல்லொழுக்கத்தையும் உண்டுபண்ணின.

தாகூரின் இளமைப் பருவத்தில் இந்தியாவில் ஆங்கில ஆட்சி வேரூன்றி இருந்தது. மக்கள் அடிமை வாழ்வை வெறுத்து அங்கங்கே கிளர்ச்சி செய்து கொண்'டிருந்தார்கள். தாகூர் பிறப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே சிப்பாய்க் கலகம் என வழங்கப்பெறும் இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்டம் நடந்தது. இயந்திரக் கருவிகள் அக்காலத்தில் நம் நாட்டில் மிகுதியாய் இல்லை. இருப்புப் பாதை

களும் அப்பொழுதுதான் சிறிது சிறிதாகப் போடப் பட்டுவந்தன. மக்கள் மூடப்பழக்க வழக்கங்களில் ஆழ்ந்திருந்தார்கள். கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் சாதியிலிருந்து நீக்கப்பட்டார்கள். அக்காலத்தில் சமயத்தொண்டு புரியும் நோக்கத்தோடு மேனுடுகளிலிருந்து பல சமயக் குழுவினர் இந்தியா விற்கு வந்தனர். அவர்கள் பற்பல இடங்களில் பள்ளிகள் நிறுவி, சமயக் கல்வியோடு பொதுக் கல்வி யும் அளித்தனர். பின்னர்ப் படிப்படியாகச் சென்னை, பம்பாய், கல்கத்தா என்னுமிடங்களில் பல்கலைக் கழகங்கள் தோன்றத் தொடங்கின.

மூடப் பழக்க வழக்கங்களுக்குப் புறம்பானவர் தாகூரின் குடும்பத்தினர். அவர்கள் குடும்பத்தில் கல்வியும் கலையும் களிநடம் புரிந்தன. தாகூரின் தமையன்மார்களில் ஒருவர் ஐ. சி. எஸ். பட்டம் பெற் றவர். இந்தியாவில் முதல்முதலாக அப்பட்டத்தைப் பெற்றவர் அவரே. மற்ரெரு தமையனுர் சிறந்த ஓவியப் புலவர். அவரது ஓவியப் புலமையை மேனுட்டு ஓவிய அறிஞர்களும் பாராட்டியுள்ளார்கள். அவர் முன்னேற்றத் துறைகள் பலவற்றிலும் ஆர்வத் தோடு உழைத்துத் தம் பெரும்பொருளை அவற்றில் செலவழித்து வறுமையுற்ருர். வேறு ஒரு தமையனுர் கவிஞரும் எழுத்தாளருமாய்ப் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்களின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்ருர். தாகூர் செல்வக் குடும்பத்தில் பிறந்தவரா யினும், இளமை முதல் எளிய வாழ்க்கையிலேயே பழக் கப்பட்டு வந்தார். அவர் தந்தையாரான மகரிஷி தேவேந்திரரும் ஆடம்பரங்களை வெறுப்பவர்.

தேவேந்திரர், தம் மைந்தர் தாகூரை இயற்கைக் காட்சிகள் மிகுந்த இடங்களுக்கு அடிக்கடி அழைத்துச்

செல்வர். ஒருநாள் அவர் இரவீந்திரரை அழைத்துக், கொண்டு ஒரு படகிலேறிக் கங்கையாற்றைக் கடந்து சென்றார். கங்கையாற்றின் இருமருங்கும் அமைந்த இயற்கை வனப்புகளும் நீரில் நீந்தித் திரிந்த பல மீனினங்களும் வானவீதியில் பறந்துசென்ற புள்ளினங்களும் தாகூருக்கு உள்ளக் களிப்பை ஊட்டின.

மற்றொரு முறை தாகூர் தம் தந்தையாருடன் இமயமலைக்குச் சென்றார். செல்லும் வழியில் அவர்கள் முதலில் போல்பூரில் தங்கினார்கள். தேவேந்திரருக்கு அங்கே சிறிதளவு நிலமும் ஒரு சிறு வீடும் உண்டு. தேவேந்திரர் அவ்வீட்டிற்கு அமைதியின் உறைவிடம் என்னும் பொருள்கொண்ட 'சாந்தி நிகேதனம்' என்ற பெயரை வைத்திருந்தார். இரவீந்திரர் அங்குள்ள வயல் வெளிகளில் சுற்றி நடந்து தூய காற்றை நுகர்ந்து இன்புற்றார். அந்த இடம் அவர் உள்ளத்திற்கு மிகவும் உகந்ததா யிருந்தது. இயற்கைக் காட்சிகள் அவர் உள்ளத்தை ஈர்த்தன. இயற்கையில் அவர் இறைவரின் இயக்கத்தைக் கண்டார்.

மாலைப்பொழுதில் இராமாயணம் பாரதம் முதலிய நூல்களைத் தம் வீட்டில் படிப்பதற்காக நியமிக்கப் பட்டிருந்த முதியவரிடமிருந்து தாகூர் பல செய்திகளை ஆர்வத்தோடு கேட்டறிந்துகொண்டார். பின்னர் ஈசுவர சந்திர வித்தியாசாகர் போன்ற அறிஞர்கள் வங்காள மொழியில் எழுதிய ஆராய்ச்சி நூல்களைக் கற்று விரிவான அறிவு பெற்றார்.

பள்ளியில் தாகூர் பல நாள்கள் கற்கவில்லை. தம் வீட்டிலேயே தக்க ஆசிரியர்கள் உதவியால் அவர் கல்வி கற்றார்; பல மொழிகளைக் கற்றாரெனினும் வங்க மொழியே அவர் உள்ளத்துக்கு உவகை அளித்தது. ஒவ்வொருவரும் தம் தாய் மொழியில் போதிய பயிற்சி

பெற்றிருத்தல் வேண்டுமென்றும், அறிவு பெற்றுப் பண்பாட்டை அடைவதற்குத் தாய் மொழியினும் சிறந்த துணை வேறில்லையென்றும் அவர் பின்னளில் கூறி வந்தார். அவர் வீட்டிலுள்ள எல்லாருக்கும் இசையறிவு உண்டு. இசைப்பயிற்சி ஆசிரியர் ஒருவரும் வீட்டில் அமர்த்தப்பட்டிருந்தார்.

தாகூரின் தமையன்மாருள் ஒருவரான துவிஜேந்திரர் என்பவர் ஒருநாள் காளிதாசரது மேகதூதம் என்னும் நூலிலிருந்து ஒரு செய்யுளை இசையுடன் படித்தார். தாகூருக்கு அதன் பொருள் செவ்வையாக விளங்கவில்லை. ஆயினும், அவர் மனம் அதில் ஈடுபடவே, அவர் மேகதூதத்தை முறையாகப் படித்து ஓசை நயத்தையும் உணர்ந்துகொண்டார்.

சூழ்நிலைகள் இங்ஙனம் தாகூரை ஒரு கவிஞராக்குதற்குப் பெரிதும் உதவின. எட்டு வயதிலேயே அவர் கவிதை இயற்றத் தொடங்கினர். பத்து வயதில் அவர் கவிதைகள் சிறந்து விளங்கின. தாகூரின் கவிதைகள் முதன் முதலில் 'ஞான அங்குர்' என்ற திங்களிதழில் வெளிவந்தன. அவ்விதழில் கவிதைகளையேயன்றி ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தாகூர் எழுதி வந்தார்; பழங்காலத் துதிப் பாடல் போன்ற சில பாடல்களைப் பாடிப் புனைபெயருடன் வெளியிட்டார்.

தாகூரின் தமையனர் அப்போது பாரதி என்ற ஒரு திங்களிதழைத் தொடங்கி நடத்தினர். தாகூரின் கவிதை உள்ளத்திற்கு அவ்விதழ் ஒரு தூண்டுகோலாய் இருந்தது. தாகூரின் கதை, கவிதை, நாடகம் முதலியன அவ்விதழில் தொடர்ந்து வெளிவந்தன. மக்கள் தாகூரின் எழுத்தோவியங்களை விரும்பிச் சுவைத்துப் படித்தார்கள். அதனல், அவ்விதழ்கள் மிகுதியாக விற்பனை ஆயின. வங்காளத்தின் சிறந்த

நாவல் ஆசிரியர் என்று புகழ்பெற்ற பங்கிம் சந்திரர், தாகூரின் கவிதைகளைப் பாராட்டி அவருக்கு ஊக்க மளித்தார்.

ஒரு நாள் இரமேச சந்திர தத்தர் என்பவர் தமது வீட்டில் நடத்திய ஒரு விருந்திற்குப் பல அன்பர்களை அழைத்தார்; வந்தவர்களை வாயிலில் பூமாலை அணிவித்து வரவேற்றார்: பங்கிம் சந்திரரும் அவருக்குப் பின்னால் இரவீந்திரருமாக அவ்விருந் திற்கு வந்தனர். பங்கிம் சந்திரர் தமக்கு அணிவிக்கப் பட்ட மாலையைக் கழற்றித் தாகூரின் கழுத்தி லணிந்து, 'இனிமேல் இத்தகைய சிறப்புகள் தாகூ ருக்கே உரியன' என்று கூறி அவரைப் பாராட்டினார்.

தாகூர் சிறந்த கடவுட் பற்றுடையவர். அவ ருடைய வாழ்க்கையிலும் பேச்சிலும் இறைநெறி விளங்கக் காணலாம். அவர் பதினெட்டு ஆண்டு இளைஞராய் இருந்தபொழுது ஒருநாள் காலதர் வழியே கதிரவனுடைய தோற்றக் காட்சியைக் கண்டு மகிழ்ச் சிக் கடலில் திளைத்துக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு இறைவனது காட்சிப்பேறு கிடைத்தது. கடவுள் எளிய மனித உருக்கொண்டு, அன்பும் ஆதர வும் அளிக்குமாறு தம்மை வேண்டி நெருங்கி வருவ தாக அவர் கண்டார். இந்நிகழ்ச்சியைத் தாகூரே தமது சொற்பொழிவு ஒன்றில் கூறியுள்ளார். அற்றார்க் கும் அலந்தார்க்கும் உதவி புரிவதே ஆண்டவருக்குச் செய்யும் தொண்டு என்பதைத் தாகூர் உணர்ந்து கொண்டார்.

1877ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள், 20ஆம் நாள் முதன் முதலாகத் தாகூர் இங்கிலாந்து சென்று, அங்கே இலண்டன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்லூரியில் மாணவராய்ச் சேர்ந்து, ஸ்காட்ஸ் என்ற

பெயருடைய ஓர் ஆங்கிலக் குடும்பத்தாரோடு தங்கியிருந்தார். ஒன்றரை ஆண்டுக்காலம் அங்கே கழித்துவிட்டுப் பட்டம் எதுவும் பெருமலே அவர் இந்தியாவிற்குத் திரும்பினுர். அவரது இருபத்து மூன்ரும் ஆண்டில் செல்வக் குடும்பத்தைச் சார்ந்த மிருணுளினி தேவி என்ற அம்மையாரை மணந்து, அவ்வம்மையாருடன் இனிது இல்வாழ்க்கையை நடத்தினுர். தாகூரின் 41ஆம் வயதில் அந்த அம்மையார் நோய்வாய்ப் பட்டுக் காலமாகிவிட்டார்; அத்துன்ப நீக்கத்திற்காக அவர் சிறந்த கவிதைகள் பலவற்றை இயற்றினுர்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் தாகூரின் இயல், இசை, நாடகங்கள் பெரும்புகழ் பெற்றன. தாகூர் 1901ஆம் ஆண்டு சாந்தி நிகேதனத்தில் ஒரு கல்வி நிலையம் அமைத்தார்; பொதுவாக உள்ள பள்ளிகளில் தாம் கண்ட குறைபாடுகளை அகற்றப் பழைய குருகுல முறையில் ஒரு பள்ளி அமைக்க விரும்பினுர்; தந்தையார் இசைவுபெற்றுத் தமக்கு உரிய சாந்தி நிகேதனத்தில் அத்தகைய பள்ளியை அமைத்தார். அப்பொழுது அவர் மனைவி உயிரோடிருந்தார். தாகூருடன் அந்த அம்மையார் குருகுலத்திலேயே வாழ்ந்து வந்தனர். அம்மையார் தம் கையாலேயே மாணவர்களுக்கு உணவு சமைத்து வழங்கினுர். அம்மையார் காலமான பிறகும் இரவீந்திரர் அங்கேயே தங்கிப் பணியாற்றினுர். சாந்தி நிகேதனம் ஓங்கித் தழைத்தது. அங்கே பயிர்த் தொழில் கற்பிப்பதற்கெனத் தனிப் பள்ளி ஒன்று அமைக்கப்பட்டது. பெண்களுக்காகவென்று நாரீபவனம் என்ற பெயருடன் பெண் பள்ளி ஒன்று நிறுவப் பெற்றது. இப்பள்ளிகள் அனைத்தும் இன்றும் நடைபெற்று வருகின்றன.

1909 இல் புகழ்பெற்ற அவரது கீதாஞ்சலி வெளி வந்தது. அவர் தமது கீதாஞ்சலியுடன் இங்கிலாந்து சென்ருர். அங்கு அவர் இலக்கியப் பெரும்புலவரான ஈட்ஸ் என்பவரின் நட்பைப் பெற்ருர். அந்த ஈட்ஸ் கீதாஞ்சலியின் ஆங்கில ஆக்கத்திற்கு முன்னுரையும் புகழுரையும் வழங்கினுர். கீதாஞ்சலியில் உயர்ந்த நாகரிக ஒளி மிளிர்கின்றதென அவர் கூறியுள்ளார்.

கீதாஞ்சலி வெளிவந்த நான்காண்டுகள் கழித்துத் தாகூருக்கு நோபெல் பரிசு வழங்கப்பட்டது. கல்கத்தாப் பல்கலைக் கழகம் தாகூருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது; ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் 'இலக்கிய மேதை' என்ற பட்டத்தை வழங்கியது. தாகூர் 1921இல் போல்பூரில் விஸ்வபாரதி என்ற பல்கலைக் கழகத்தை நிறுவினுர். இது சாந்தி நிகேதனத் தின் விரிவேயாகும். இதற்குப் பத்தாண்டுகட்குப் பின் தாகூர் ருஷ்யா சென்று, அங்குள்ள மக்களைப்பற்றி நேரிற் கண்டறிந்து வந்து நூலொன்றினை எழுதினுர்.

சமூக முன்னேற்றத்துறையில் அவர் அரும்பாடு பட்டுள்ளார்; நம் நாட்டு மக்கள் சாதிப் பிரிவினை, மூட நம்பிக்கை, இளமைத் திருமணம் முதலிய பற்பல குறைபாடுகளுக் கிடமாக இருப்பதை எண்ணிப் பெரிதும் வருந்தினுர்; அக்குறைகளை அகற்றுவதை முதற்கடமையாக நாட்டுத் தலைவர்கள் கருதவேண்டு மென்று எடுத்துரைத்தார்.

நாட்டு விடுதலையிலும் தலையாயது மக்களினத்தை முன்னேற்றுவதே என்பது அவரது துணிபு. மக்களினம் சீர்கேடாய் இருக்கும்போது நாட்டு விடுதலையால் நிலைத்த பயனைப் பெறமுடியாதென்று தாகூர் கருதினுர். தாகூர் வருங்கால முணர்ந்த புலவர் மணி என்பதை அவர் நூல்களிலிருந்து அறியலாம். மேனுட்டு இயந்திர நாகரிகத்தின் குறைபாடுகளையும்

அது கொடிய போர்களைத் தோற்றுவித்து மனிதப் பண்பின் அழிவிற்குக் காரணமாய் இருப்பதையும் அவர் தம் நூல்களுள் ஒன்றில் விளக்கி யிருக்கின்றார். கீழ்நாடுகள் ஆன்ம வளர்ச்சியிலேயே அடியோடு அழுந்திக் கைத்தொழில் வாணிகம் முதலியவைகளை மறந்திருக்கும் குறையையும் அதில் எடுத்துக் காட்டி யுள்ளார். இவ்விரு நாடுகளும் தம்பால் இல்லாத நல்லியல்புகளை மற்ற நாட்டிலிருந்து பெற்று, அகமும் புறமும் ஒத்து வளருவதன்மூலம் உலக வாழ்க்கையை இன்பக் களஞ்சியமாகச் செய்யலாம் என்றும் அந்நூலில் எழுதியுள்ளார். மேல்நாட்டினரும் கீழ்நாட்டினரும் ஒருவரோடொருவர் நாகரிகத்தில் ஒன்றிக் கலந்து இன்பமாய் வாழவேண்டும் என்பதற்காகவே அவர் பெரிதும் பாடுபட்டார். தமது சுற்றுப்பிரயாண காலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலெல்லாம் அதன் இன்றியமையாமையை அவர் எடுத்துக் கூறி வந்தார்.

தாகூர் சிறந்த நாட்டுப் பற்றுடையவர். தமது நாடு வெளிநாட்டினர் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டுமென்று அவர் பாடுபட்டார்; பஞ்சாபில் நிகழ்ந்த படுகொலையைக் கேட்டு வருந்தி, அதற்குக் காரணமான ஆங்கில அரசினரைக் கடிந்துகொள்ளும் முறையில், அவ்வரசியலார் தமக்கு அளித்திருந்த 'சர்' பட்டத்தைத் துறந்துவிட்டார். ஆயினும், அவருக்கு இங்கிலாந்து மீதோ ஆங்கிலேயர் மீதோ வெறுப்பு இல்லை. 1921இல் இந்திய மக்கள் விடுதலைப் போரில் குதித்து நம் நாட்டில் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருந்த காலத்திலும், தாகூர் தனிப்பட்ட ஆங்கிலேயர்கள்மீது வெறுப்புக்கொள்ளுவது தவறென்று மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார். இங்கிலாந்தில் அவருக்கு அரிய நண்பர் பலர் இருந்தனர்.

தாகூர் ஒரு பிறவிக் கவிஞர். அவரது கவிதைகள் உள்ளத்தைக் கவரும் எழில் உடையவை. அவர் நவீனங்களும் நாடகங்களும் மிகச் சிறந்தவையாகும். அவர் சிறு கதைகள் இணையற்றவை. உள்ளத்தை உருக்கும் பட்டறிவுகளும் மனித இயல்புகளும் அவர் நூல்களில் அழகாக வெளிப்படுகின்றன. மேலும், இயற்கையின் எழில், இறை யுணர்ச்சி, எளிய வாழ்க்கை, அன்புள்ளம் ஆகிய நற்பண்புகள் அவருடைய நூல்களினூடே விளங்கக் காணலாம்.

'கோரா' என்ற அவரது நவீனம் எல்லோராலும் பாராட்டப்படுகிறது. மக்களிடத்தில் பழங்கொள்கை களும் புதுக் கருத்துக்களும் ஒன்றோடொன்று போராடுவதை மிக அழகிய முறையில் எடுத்துக் காட்டும் எழுத்தோவியமே அந்நூல். அவருடைய நூல்கள் இந்தியாவின் இதயத்தையும் பண்பாட் டையும் மேனாட்டாருக்குத் தெளிவாக விளக்குபவை களாய் அமைந்துள்ளன.

அவர் எழுதிய கவிதைகள் சிறிதும் பெரிதுமாக இரண்டாயிரத்துக்குமேல் உள்ளன. குழந்தைகள் படித்து மகிழ்வதற்குரிய பாடல்களையும் அவர் இயற்றி யிருக்கிறார். இன்று நாம் நம் நாட்டு வணக்கப் பாட்டாகப் பாடிப் பாடி மகிழும் 'ஜன கண மன அதிநாயக ஜயஹே' என்று தொடங்கும் பாடலும் கவியரசர் தாகூர் பாடியதேயாகும். அவர் ஓவியக் கலையில் புதியமுறை ஒன்றைப் புகுத்தினார். புதுப்புது நிறங்களைத் தீட்டும் ஒரு புதுமையை ஓவியத் துறையில் அவர் உண்டுபண்ணினார். அம்முறையைப் பிறநாடுகள் பாராட்டிப் பின்பற்றின. அதன் மூலமாக ஓவியக் கலையில் ஒரு புதிய எழுச்சி தோன்றிற்று.

கவிஞர் முதிய பருவத்திலும் இளமையுணர்ச்சியுடன் காணப்பட்டார். இறக்கும்வரை அவர் இலக்கியத் தொண்டு புரிந்துவந்தார். ஆயினும் இறுதிக் காலத்தில் ஒன்றிரண்டு ஆண்டுகள் அவர் முதுமைத் தளர்ச்சியினுல் பிணிவாய்ப்பட்டிருந்தார். 1941 ஆம் ஆண்டு அவரது புகழுடல் நிற்கப் பூதவுடல் மறைந்தது. மேனுடுகளையும் கீழ்நாடுகளையும் சந்து செய்து உலக நாகரிகத்தை ஓங்கச்செய்ய விரும்பிய அவரது முயற்சி என்றும் பயன்தருவதாகுக.

## 6. மார்க்கோனி

நாகரிக வளர்ச்சிக்குத் துணைபுரிந்த புதுமைக் கருவிகளுள் வானொலி (Radio) ஒப்புயர்வற்றதாகும். முன்னாளில் சற்றுத் தொலைவிலிருக்கும் ஓர் ஊருக்குச் செல்லுதலும் கடினமாயிருந்தது. மோட்டார், இரயில், கப்பல், விமானம் ஆகியவை தோன்றியபின் பயணம் செய்வது எளிதாயிற்று. இவை வெளிநாடுகளிலுள்ள மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

புதிய ஊர்திகள் தோன்றத் தோன்ற உலகம் விரிந்தது என்னும் எண்ணம் மறைந்து வந்தது. தொலை என்ற சொல் பொருளிழக்கத் தொடங்கியது. ரைட்டு உடன்பிறப்பாளர்கள் வானஊர்தி கண்டமைத்து அதில் ஏறிப் பத்து நாட்கள் வானத்தில் சுற்றிய பின்னர், இன்னும் சுற்றிவருவதற்கு இடம் இல்லாததாக உலகம் சிறுத்துவிட்டது.

இந்நாளில் வானவூர்தி மூலம்- உலகிலுள்ள எந்த நாட்டுக்கும் நினைத்தபோது சென்று வரலாம். அஞ்சல்களையும், செய்தித் தாள்களையும் வானவூர்தி மூலம் உலகின் எந்தப் பகுதியிலுள்ள நாட்டுக்கும் சில மணி நேரத்தில் அனுப்பலாம். இதனால் தொலைவிடங்களிலுள்ள செய்திகளையும் சில மணி நேரத்தில் அறிந்து கொள்ள முடிகிறது.

செய்தியை விரைவாக அனுப்பும் கருவிகளில் தந்தி சிறப்பானதாகும். செய்திகளைச் சில ஒலிக் குறிகள் மூலமாக மின்சாரத்தின் துணையால் அனுப்புவதே தந்தியின் தத்துவம். அவ்வொலி செல்வ

தற்குக் கம்பிகள் துணை புரிகின்றன. ஆகவே, நாடெங்கும் உயர்ந்த தூண்களின்மீது தந்திக்கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் உதவியால் தொலை யிடங்களிலுள்ள செய்தியையும் உடனுக்குடன் அறிந்துகொள்வதற்குரிய வாய்ப்பு உண்டாகிறது. கடலுக்குள்ளும் தடித்த கம்பிகளை அமைத்து அவற்றின் மூலமாகச் செய்தியை அனுப்பும் முறை பின்னர் மேற்கொள்ளப்பட்டது.

அதன்பின் ஒருவர் ஓரிடத்திலிருந்து அழைத்துப் பேசவும், மற்றவர் மற்றோரிடத்தில் அதைக் காதால் கேட்கவும் பயன்படும் 'தொலைபேசி' (டெலிபோன்) என்ற கருவியை மனிதன் கண்டுபிடித்தான். அதன் உதவியால் ஒருவர் நூற்றுக்கணக்கான கல் தொலை விற்கப்பாலுள்ள மற்றவருடன் அண்மையிலிருந்து நேருக்குநேர் பேசுவதைப்போன்று பேசிக்கொள்ள லாம். அக்கருவிகளின் விளைவாக உலகின் பரப்பு வர வரச் சுருங்கிக்கொண்டே வருகிறது என்று கூறலாம்.

இதனுல் உலகில் ஓர் இடத்திலிருந்து பேசும் செய்தியை அந்தக் கணத்திலேயே மற்றெல்லாப் பாகங்களிலும் கேட்கமுடியும். தந்திக் கம்பங்களோ தாங்கி நிற்கும் தூண்களோ தேவையில்லாமல் செய்தியை உடனடியாகக் கேட்கும்படி செய்யும் விந்தையான ஒரு கருவியை மேதையொருவர் கண்டு பிடித்தார். அக்கருவியையே நாம் ரேடியோ என்றும் வானொலி என்றும் கூறுகின்றோம்.

வானொலியால் ஏற்பட்ட நல்விளைவுகள் அளவிடற் கரியனவாகும். இதன் பயனுக நாகரிகம் இன்னும் ஒருபடி உயர்ந்துவிட்டது. வானொலி மூலமாகச் செய்தியை உலகெங்கும் அறிவிக்கலாம். உலகின் பற்பல பாகங்களில் பல்வேறு பணிகளில் மக்கள்

ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி யிருக்குங்கால் அவர்களுக்குத் திடீரென்று எதிர்பாராத இடையூறு ஏற்படின், வானொலி மூலமாக அச்செய்தியைத் தெரிவித்துத் தக்க உதவிகளைப் பெறலாம்.

பரந்த கடலின் நடுவே செல்லும் கப்பல்களுக்குப் புயலாலும் பனிப் பாறைகளாலும் திடீரென்று இடுக்கண் உண்டாகலாம். அப்பொழுது அக்கப்பல்கள் வானொலிமூலம் உடனடியாகச் செய்தியை அனுப்பி வேண்டிய உதவிபெறலாம்.

வானவூர்திகள் வானத்தில் பறந்து செல்லுங்கால் இயந்திரக் கோளாற்றினாலும் மூடுபனியாலும் இடுக்கணுக்குள்ளானால் அதைச் செலுத்துபவர் வானொலி மூலம் தமது துன்பநிலையைத் தெரிவித்து உதவியைப் பெறுகிறார்.

அறிவுத் துறையில் வானொலியால் விளையும் பயன்கள் எண்ணற்றன. அன்றாடச் செய்தித் தாள்களைப் படித்துப் பார்த்துச் செய்திகளை அறியுமுன்னே நாம் வானொலிமூலம் செய்திகளைக் கேட்டு அறிகிறோம். கலைகள் பற்றிய சொற்பொழிவுகளை வானொலி மூலம் செவி மடுக்கிறோம்; கைத்தொழில் பற்றிய அரிய பேச்சுக்களைக் கேட்டு அறிகிறோம்.

ஒரு மனிதன் ஒரு நாளில் பெற்றுக்கொள்ளும் ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த வானொலி மிகவும் துணைபுரிகிறது. வானொலி மூலம் ஓய்வு நேரத்தை இன்பமாகக் கழிக்கலாம். சில சமயங்களில் தேன் பொழிந்தாற்போல் இசை விருந்துகள் நடக்கின்றன. கதைகள், உரையாடல்கள், நாடகங்கள் வானொலி மூலம் ஒலி பரப்பப்படுகின்றன.

உலகிலுள்ள பல நாட்டினரோடு கல்வி, கலை, பண்பாடு முதலியவற்றில் வானொலி ஒருமைப்பாட்டை உண்டு பண்ணுவதுடன் அன்புடனும் ஒற்றுமையுடனும் மக்கள் வாழத் துணைபுரிகிறது.

இவ்வாறு வானொலி பல வழிகளிலும் மக்கள் முன்னேற்றத்திற்கும் நாகரிக வளர்ச்சிக்கும் அடிகோலியது. இதை அமைத்துத் தந்த மேதை மார்க்கோனி ஆவர். இவரது முழுப்பெயர் குக்லியெல்மோ மார்க்கோனி என்பதாகும். இவர் தாயார் இத்தாலி நாட்டையும் தந்தையார் அயர்லாந்து நாட்டையும் சேர்ந்தவராவர்.


மார்க்கோனி

1874ஆம் ஆண்டு இத்தாலி நாட்டிலுள்ள போலோஞே என்ற இடத்தில் இவர் பிறந்தார். இவரிடம் இளமையிலேயே நுண்மதியும் புதுமையை ஆராயும் இயல்பும் அமைந்திருந்தன. இவர் தம் வீட்டின் அருகிலுள்ள ஒரு குன்றில் வளரும் கள்ளிச் செடிகளிலிருந்து பழங்களைப் பறித்துவந்து அவற்றிலிருந்து எழுதுவதற்கான மை தயாரிக்க முயன்றார். அதற்கான கருவிகளை அமைப்பதிலும் மார்க்கோனியின் இளமையுள்ளம் ஈடுபட்டிருந்தது.

அமெரிக்க அறிவியல் மேதையாகிய தாமஸ் ஆல்வா எடிசன் மின்சாரத் துறையில் விளைத்த அரிய புதுமைகளை அவர் பள்ளியில் கற்க நேர்ந்தது.

மின்சார அலைகள் குறித்து ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அறிஞர்களும் மிக ஆர்வத்தோடு ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தனர். மார்க்கோனியின் பள்ளி ஆசிரியர்களில் ஒருவரும் அவ்வாராய்ச்சியில் இறங்கியிருந்தார். அவர் மூலமாகப் புகழ்பெற்ற ஜெர்மானிய அறிவியல் அறிஞராகிய ஹின்ரிச் ஹெர்ட்ஸ் என்பவரின் அரிய ஆராய்ச்சி நூல்களை மார்க்கோனி கற்றார்.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிவியல் அறிஞர்களிடையே கம்பியின் உதவியில்லாமலே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செய்தியை அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. நாம் பேசும்போது ஒலி, அலை வடிவமாகக் காற்றில் மிதந்து சென்று, கேட்போர் காதுகளை அடைகிறது. இவ்வொலி அலைகள் சிறிது தொலை செல்வதற்குள் இறந்துபோகின்றன. ஆகவே தொலைவில் இருப்பவர்களின் காதுகளில் இவ்வொலிகள் சென்று எட்டுவதில்லை. நம்மைச் சூழ்ந்துள்ள வானத்தில் 'ஈதர்' என்ற கண்ணிற்குத் தெரியாத நுண்ணிய பொருள் பரவியிருக்கிறது. சூரியனது ஒளிக்கிரணங்கள் இந்த ஈதரின் வழியாகவே நம்மை வந்தடைகின்றன. பேராற்றலாகிய மின்சாரம் உலகிலுள்ள பல பொருள்களிலும் வானத்திலுள்ள பல பொருள்களிலும் வானத்திலும் அடங்கியிருக்கிறது.

மார்க்கோனி தம் மேதை உள்ளத்திலே பேச்சொலியை மின்சாரத்தின் உதவியால் மின் அலைகளாக மாற்றி வானத்திலே செலுத்தினால் அது ஈதர் வழியாக எந்த நெடுந்தொலைக்கும் மிக விரைவில் செல்லும் என்று எண்ணி, அவ்வாராய்ச்சியில் இறங்கினார்.

மேலும், மார்க்கோனியைப்போல வேறு பல அறிவியல் அறிஞர்களாகிய எட்வர்டு ஹக்ஸ், ஜேம்ஸ்

ளோர்க்கு, ஆலிவர் லாட்ஜ், ஜகதீச சந்திர போஸ் என்போரும் இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர்.

எட்வர்டு ஹக்ஸ் கம்பியில்லாமல் செய்தி அனுப்புவதற்குரிய முறையை உண்மையிலேயே கண்டு பிடித்தபோதிலும், உலகம் அதன் அருமையை உணர்ந்து ஏற்றுக்கொள்ள இணங்கவில்லை. கம்பியோ அல்லது வேறு வகையான தொடர்போ எதுவுமின்றி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செய்தியை எவ்வாறு அனுப்பமுடியுமென்று மக்கள் எண்ணி எட்வர்டு ஹக்ஸின் ஆராய்ச்சியை ஏற்க மறுத்து விட்டனர்.

கம்பியில்லாமலே செய்தி அனுப்ப முடியுமென்று ஹக்ஸ் கூறியபோது, அவரைப் பித்தர் என்று ஊரார் ஏளனம் செய்தனர். ஊரார் ஏளனத்திற்கும் வசைக்கும் அஞ்சிய ஹக்ஸ் தம் ஆராய்ச்சிகளை இரவில் தம் இல்லத்திலே யாரும் அறியாமல் செய்துவந்தார்.

மார்க்கோனியும் மற்ற ஆராய்ச்சியாளரும் நூற்றைம்பது அடித்தொலைகூடச் செய்தி அனுப்பும் வகை தெரியாமல் தடுமாற்றமுற்றிருந்தக்கால் ஹக்ஸ், ஆயிரத்தைந்நூறு அடித் தொலைவரை செய்தியை அனுப்பவல்ல கருவியைக் கண்டு மக்களிடம் தம் ஆராய்ச்சியை விளக்கிக் காட்டினர். அவர்கள் அதனைச் செவிமடுத்தும், ஒலி அவரது மனத் தடுமாற்றத்தால் ஏற்பட்டதென்றும், உண்மையானதன்று என்றும் கூறினர். இதைக் கேட்ட ஹக்ஸின் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும் எனக் கூறவும் வேண்டுமோ?

அறிஞர்களுக்கு ஏற்படும் சோதனை இது போன்றதேயாகும். ஹக்ஸ் ஆராய்ச்சி அவர் காலத்தில் வெளியிடப்படாமலே போயிற்று. அவர் மனம் நொந்து

இறந்தார்; ஆனால், உலகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் பயனுடையதாகச் செய்து காட்டி, மக்கள் மனத்தை ஒருங்கே திருப்பி அவர்களது பாராட்டையும் மதிப்பையும் பெறும் பேறு மார்க்கோனி ஒருவருக்கே கிடைத்தது.

ஒலியை மின் அலையாக மாற்ற ஒரு கருவியை மார்க்கோனி செய்தார். இலட்சத்து எண்பதினாயிரம் மைல் விரைவில் மின் அலைகள் செல்லக்கூடியவை. ஆகவே, மின் அலையாக மாற்றப்பட்ட செய்தி அதே நிமிடத்தில் உலகமெங்கும் பரவி விடும். ஈதரில் மிதந்துவரும் மின் அலைகளை மீண்டும் ஒலியாக மாற்றுவதற்கு வேறொரு கருவியையும் அவர் செய்தார்.

அப்பொழுது அறிவியல் சிற்பி மார்க்கோனிக்கு வயது இருபதுகூட நிரம்பவில்லை. தம் தந்தையின் மாளிகைக்குப் பின்புறத்தில் தமது ஒலி பரப்பும் கருவியை வைத்துப் பார்த்து, இரண்டு கிலோ மீட்டர் தொலை வரை அதன் உதவியால் செய்தி அனுப்பலாம் என்பதை அறியவே மார்க்கோனிக்கு மிகுந்த நம்பிக்கை பிறந்தது. அந்நம்பிக்கையால் இவர் இக்கருவிகளைச் சீர்ப்படுத்தி நெடுந்தொலை வரைச் செய்திகளை அனுப்ப முயன்றுகொண்டிருந்தார். இவரது இத்திறமை எல்லோரையும் வியக்கச் செய்தது.

இத்தாலி அரசாங்கம் இவரது ஆராய்ச்சியின் பெருமையை அறியவில்லை. ஆதலால் இவர் 1895 இல் இங்கிலாந்திற்குச் சென்றார். அங்கே அப்பொழுதிருந்த அஞ்சல் துறைத் தலைமைப் பொறிவலாளரான (இஞ்சினியர்) ஸர் வில்லியம் பரீஸ் என்பவர் இவரை வரவேற்று, ஊக்குவித்து, உதவியும் புரிந்தார். அவரும் ஒரு சிறந்த ஆராய்ச்சியாளராய் இருந்தார்; மின் அலைகளின் உதவியால் செய்தி அனுப்புவது

பற்றிப் பல ஆராய்ச்சிகளைச் செய்திருந்தார்; தமது சோதனை நிலையத்தை மார்க்கோனியிடம் ஒப்புவித்து ஆராய்ச்சியைத் தொடர்ந்து நிகழ்த்த வழி செய்தார்.

முதன் முதலாக இலண்டனிலுள்ள தலைமை அஞ்சல் நிலையத்திலிருந்து தேம்ஸ் ஆற்றங்கரையில் அமைந்த ஓரிடத்திற்குச் செய்தி அனுப்பப்பட்டது. இது சிறந்த வெற்றியைத் தந்தது. பிறகு சாலிஸ்பரி என்னுமிடத்தில் நிகழ்த்திய ஆராய்ச்சி ஆறு கிலோ மீட்டர் தொலைவிற்குச் செய்தி அனுப்பும் வெற்றியைத் தந்தது. மார்க்கோனி தம் கருவிகளை மேலும்மேலும் சீர்ப்படுத்தி நெடுந்தொலை வரைச் செய்திகளை அனுப்ப முயன்று கொண்டிருந்தார். இவரது திறமையைக் கண்டு வியக்காதவரில்லை.

அரசாங்கம் வான வழியே செய்தியனுப்புவதன் தேவையை உணர்ந்து, இவருக்குத் தக்க ஆதர வளித்தது. 1898 ஆம் ஆண்டில் வைட்டுத் தீவிலும், போர்ன்மத்து என்னும் கடற்கரை நகரிலும் இரண்டு சோதனை நிலையங்கள் அமைத்துக்கொள்வதற்கு அர சாங்கம் இசைவு அளிக்கவே, மார்க்கோனி தம் ஆராய்ச்சியை அங்கு ஏற்படுத்தி நடத்திக்கொண் டிருந்தார்.

கடல் வழியாகச் செய்தி அனுப்புவதற்குரிய கம்பி களை அமைத்துப் புகழ் பெற்ற அறிவியல் நிபுண ரான கெல்வின் பிரபு என்பவர், மார்க்கோனியின் ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்று ஒரு செய்தியை ஒலி பரப்பச் சோதனை செய்து பார்த்தார். இது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாயிருந்தது. அவர் ஒலி பரப்பு முடிந்ததும் மார்க்கோனியிடம் ஒரு தொகையைக் கூலியாக வழங்க, அதனை மார்க்கோனி ஏற்க மறுத்துவிட்டார். ஆனால், மார்க்கோனியின்

செயல் வாணிகத்தில் உலகத்தொடர்பை உண்டாக்கு வதால் தாம் மகிழ்ந்து பரிசுபோலக் கொடுப்பதாகக் கூறி அவர் வற்புறுத்திக் கொடுத்துவிட்டுப் போனார்.

திங்கள் சில சென்றன. வட அயர்லாந்திலுள்ள ஒரு கப்பல் நிலையத்தார் மார்க்கோனியை அழைத்து இரண்டு இடங்களில் வானொலிக் கருவிகளை அமைத் துத்தரும்படி வேண்டினர். மார்க்கோனியும் அவ் விதமே செய்தார்.

டப்ளினில் பந்தய விளையாட்டுக்கள் நடந்து கொண்டிருந்தன. அச்செய்திகளை உடனுக்குடன் செய்தித்தாள்களுக்கு அனுப்பும்பொருட்டு வானொலி நிலையம் ஒன்றை அமைக்கச் செய்தித்தாளின் உரிமை யாளர் விரும்பினர். மார்க்கோனி அவர் விரும்பிய வாறு செய்தார்.

இரண்டு பெரிய கலங்கரை விளக்கங்களில் வானொலிக் கருவிகள் அமைக்கப்பட்டன. அவற்றின் உதவியால் பல கப்பல்கள் இடையூறுகளிலிருந்து தப்பின. நூற்றுக்கணக்கான மக்கள் உயிர்தப்பினர். ஆகவே, மக்களை இடையூறுகளிலிருந்து காப்பாற்று வதன்பொருட்டு வானொலி பயன்படுத்தப்பட்டது.

பின் மார்க்கோனி, 1899 இல் இங்கிலாந்து நாட்டிலுள்ள சவுத்போரிலிருந்து பிரான்ஸ் நாட்டி லுள்ள வீமாக்ஸ் என்ற இடத்திற்குச் செய்தி அனுப்பி வெற்றி பெற்றார். மக்கள் வானொலியின் பயனை உணரத் தொடங்கவே அது பல இடங்களில் அமைக் கப்பட்டது. அரசாங்கத்தார் போர்க் கப்பல்களில் அதைப் பொருத்தி வைத்துப் போர்ச் செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டனர்.

1901 ஆம் ஆண்டில் இவரது கருவி முந்நூற்றிருபது கிலோ மீட்டர் தொலைவுக்குச் செய்திகளை அனுப்பக்

கூடியதாய் இருந்தது. ஆயினும், இவர் அதோடு மன நிறைவு பெறவில்லை. அட்லாண்டிக் மாகடலுக்கு அப்பாலும் செய்தி அனுப்ப வேண்டுமென்னும் அவா இவருக்கு உண்டாயிற்று. அதற்காகக் கார்ன்வால் என்னுமிடத்தில் ஒலி பரப்பக்கூடிய நிலையம் ஒன்றை இவர் நிறுவினர்.

பின்னர்க் கடல் கடந்து அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சென்று அதன் கீழ்க்கரையிலுள்ள கேப்காட் என்னுமிடத்தில் ஒலி வாங்கும் நிலையம் ஒன்றை நிறுவினர். செப்டம்பர்த் திங்களில் தொடக்க வேலைகள் யாவும் முடிவுற்றன. சோதனை தொடங்க விருந்த பொழுது ஒரு பெரும் புயற்காற்றினல் கார்ன் வால் நிலையம் சேதமுற்றது. பின்னர் இவர் அதைப் பழுது பார்க்கும் வேலையைத் தொடங்கினர்.

அவ்வேலை முடிந்த சில நாட்களில் கேப்காட்டில் அமைந்திருந்த நிலையமும் அவ்வாறே கொடுங்காற் றினல் பழுதடைந்து போயிற்று. இதைச் சீர்ப்படுத்தப் பல திங்கள் ஆகும் என்பது தெரிந்தது. மார்க்கோனிக்கு அவ்வளவு காலம் பொறுத்திருக்க மனம் வரவில்லை. கேப்காட்டிலிருந்த ஒலி வாங்கும் கருவியை நியூபவுண்ட்லாந்து என்னும் இடத்திற்கு எடுத்துச் சென்றர்.

ஒலி வாங்கும் கருவி வானத்தில் மிக உயரத்தில் தூக்கி நிறுத்தப்பட்ட ஒரு கம்பியோடு இணைக்கப்பட வேண்டும். அக்கம்பியை ‘ஏரியல்’ என்பர். மார்க் கோனி இரண்டு ‘பலூன்’களின் உதவியால் அக் கம்பியை வானத்தில் தூக்கி நிறுத்த முயன்றும், முயற்சி பயனளிக்கவில்லை. பின்னர் ஏரியலை இரண்டு காற்ருடிகளில் இணைத்துப் பறக்கவிட்டார். அது வானத்தில் தொங்கிக்கொண்டிருந்தது.

இவர் முன்னரே கார்ன்வாலிலிருந்து குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட முறையில் ஒலி பரப்பும்படி ஏற்பாடு செய்து வைத்திருந்தார். குறிப்பிட்ட நேரம் வந்ததும், ஒலி வந்துவிட்டது. 'ஆ!' என்று மார்க்கோனி ஒரு குரல் எழுப்பினர். உடனே அக் கருவியைத் தம் அருகில் நின்ற நண்பர் ஒருவர் கையில் கொடுத்தார். அவர் வாங்கிக் காதில் வைத்த போது ஒலி வரவில்லை. கருவியில் ஏதோ பிழை நேர்ந்திருக்க வேண்டுமென்று கருதி மார்க்கோனி உடனே அதைச் சீர்ப்படுத்தினர். பிறகு ஒலி கேட்கத் தொடங்கியது. 1952 கிலோ மீட்டர் தொலைவுச் செய்தியை அனுப்ப முடிந்தமை பற்றி மார்க்கோனி களிப் படைந்தார். இருப்பினும், உலகிலுள்ள எல்லா மக்க ளோடும் ஒரே சமயத்தில் பேசக்கூடிய நாளை இவர் ஆவலோடு எதிர்பார்த்தார்.

சில மாதங்களில் கார்ன்வால் நிலையம் உறுதி யாக்கப்பட்டது. கனடா அரசாங்கம் நோவாஸ் காட்டியா என்ற இடத்தில் ஒரு பெரிய வானொலி நிலையத்தை மார்க்கோனியின் உதவியால் அமைத்துக் கொண்டது. அங்கிலையச் செய்திகள் 'டைம்ஸ்' முதலிய செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன.

1904 ஆம் ஆண்டு ருஷ்யாவிற்கும் ஜப்பானுக்கும் இடையே போர் மூண்டது. அது சமயம் 'டைம்ஸ்' செய்தித்தாளின் நிருபர் வானொலிக்கருவி அமைக்கப் பெற்ற ஒரு கப்பலிலிருந்துகொண்டு போர்ச் செய்திகளை ஒலி பரப்பினர். அது முதல் வானொலி மூலம் முறையாக ஒலி பரப்பும் ஏற்பாடு உலகெங்கும் அமைந்தது.

முதலில் வானொலியில் அனுப்பும் செய்தி யாவ ராலும் அறிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது.

குறிப்பிட்ட இடங்களுக்கும், மறைவாக ஒரு சில ருக்கும் செய்தி அனுப்புவதற்குரிய அமைப்பு அதில் ஏற்படவில்லை. மார்க்கோனி அதனை அனுப்புவதற்கு முயன்றார்; வெற்றி பெறாமல் இருப்பாரா?

ஒலிகளைப் பல்வேறு அளவுடைய மின் அலை வேகத்தில் அனுப்புவதற்கான அமைப்பை ஒலிபரப்பும் கருவியிலும் அவற்றைத் தனித் தனியாக வாங்கிக் கொள்வதற்கான அமைப்பை ஒலி வாங்கும் கருவி யிலும் இயற்றினார். இதனால் ஒரு குறிப்பிட்ட மின் அலை வேகத்தில் அனுப்பப்படும் செய்தியை, அந்த விரைவின் அளவை அறிந்த ஒருவனால் மட்டுமே ஒலி வாங்கும் கருவியின் மூலம் பெற்றுக்கொள்ள முடிந்தது. இவ்வாறு மார்க்கோனி மறைவுச் செய்தி யைப் பிறருக்குத் தெரியாமல், வேண்டியவர்களுக்கு மட்டும் அறிவிக்கும் முறையை வானொலிக் கருவி களில் அமைத்து, அவற்றின் பயனை நிறைவுடைய தாகச் செய்தார்.

மார்க்கோனியின் புகழ் உலகெங்கும் பரவிற்று; இவரைப் புகழாத மனிதர் இல்லை. இத்தாலிய மன்ன ரும், பிற நாட்டு அரசர்களும், தலைவர்களும், மார்க் கோனியைப் பாராட்டிச் சிறப்புச் செய்தனர். 1909 இல் அறிவியல் மேதைச் சிறப்பிற்காக இவருக்கு நோபெல் பரிசு கிடைத்தது. அதன் பயனாக இவர் சிறந்த அறிவியல் அறிஞர் என்பதை உலகமறிந்தது. மேலும், ஆல்பர்ட் பதக்கம், கல்வியின் பதக்கம் என் னும் தங்கப் பதக்கங்களும் இவருக்கு அளிக்கப் பட்டன. கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு முதலிய பல்கலைக் கழகங்கள் இவரை வரவேற்று இவருக்குப் பட்டங்கள் வழங்கிச் சிறப்பித்தன.

1914இல் தொடங்கிய உலகப் பெரும் போரில் இத்தாலி, இங்கிலாந்து முதலிய நாடுகள் சார்பாக முதலில் தரைப்படையிலும், பின்னர்க் கடற்படையிலும் இவர் சேர்ந்து நாட்டிற்குத் தொண்டாற்றினர். பின்னர் 1919இல் இத்தாலி நாட்டின் சார்பாகப் பாரிசில் நடந்த சமாதான மாநாட்டிற்குச் சென்றார்; ஆஸ்திரேலியா, பல்கேரியா என்னும் நாடுகளுடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்; 1923இல் இவர் பாசிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். 1930 ஆம் ஆண்டில் இவர் ரோம் பல்கலைக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1937ஆம் ஆண்டு, ஜுலைத் திங்கள் 20ஆம் நாள் ரோம் நகரில் இவ்வறிவியல் மேதை இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் குறளுக்கிணங்க வாழ்ந்த மார்க்கோனியின் புகழ் இவ்வுலகம் உள்ள வரை நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

# 7. பால கங்காதர திலகர்

## இளமையும் கல்வியும்

“சுயராச்சியம் எனது பிறப்புரிமை. அதனை நான் அடைந்தே தீர்வேன்!” என்று முழக்கம் செய்தவர் பால கங்காதர திலகர். அவர் 1856ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், இருபத்து மூன்றாம் நாள் இந்நிலவுலகில் தோன்றினார். சிங்க மராத்தியர் தோன்றிய மண்ணில் பிறந்த அவரிடம் இயற்கையிலேயே வீரமும் நாட்டுப்பற்றும் அமைந்திருந்தன. வீர மன்னன் சிவாஜி தோன்றிய மண்ணிலே பிறந்த அவரிடம் வீரமும் தீரமும் அமைந்திருந்ததில் வியப்பென்ன? அவர் தோன்றிய இடம், பம்பாய்ப் பகுதியில் இரத்தினகிரி என்பது ஆகும்.

திலகரது குடும்பமே அறிவுக்கும் ஆற்றலுக்கும் பெயர் பெற்றிருந்தது. அவர் தந்தையாராகிய கங்காதர இராமசந்திர திலகர் சிறந்த அறிஞர்; வட மொழியிலும் மராத்தியிலும் வல்லவர். அப்பெரியார் மிகக் குறைந்த ஊதியத்தில் பள்ளிக்கூட ஆசிரியராய் இருந்தார். அவரிடம் சுதந்தர உணர்ச்சியும், நாட்டுப் பற்றும் நன்கு அமைந்திருந்தன. எனவே, அப்பண்புகள் யாவும் நம் திலகருக்கு இயற்கையிலேயே அமைந்துவிட்டன. திலகரின் தாயாராகிய பார்வதிபாய் என்பவர், அன்பும் அருளும் அறிவும் பத்தியும் அமைந்தவர். நெடுநாள் தமக்கு ஆண் குழந்தை இல்லாத குறை வருத்தியதால், அவர் கடவுளை நோக்கித் தவமிருந்து, பால கங்காதரரை ஈன்றெடுத்தார். அத்தகைய அன்னையாரின் அருங்குணங்களும்

திலகரிடம் குடிகொண்டிருந்தன, 'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்,' என்பது பழமொழியன்றோ? அதற்கேற்பத் திலகர் தம் பெற்றோர்களின் நற்குணங்களையும், அக்குடும்பத்திற்கே இயற்கையான நாட்டுப் பற்றையும் பெற்று விளங்கினார்.

பால கங்காதர திலகர் இளமையிலே வடமொழியை நன்கு கற்றார். அதற்கு அவர் தந்தையாரே காரணமாவார். அவர் திலகருக்கு வடமொழியில் பேரார்வத்தினை உண்டாக்கினார். வடமொழிக் கவியொன்றைப் புதிதாக மனப்பாடம் செய்தால், திலகருக்கு ஒரு காசு பரிசாகக் கிடைக்கும். இவ்வாறு தந்தையார் திலகருக்கு இளமையில் வடமொழியில் ஆசையைப் பெருக்கினார். இதன் பயனாகத் திலகர் வடமொழியில் பெரும்புலமை பெற்றுத் திகழ்ந்தார். அவர் தந்தையாருக்கு டாக்டர் பண்டர்க்கர் என்னும் வடமொழி அறிஞர் நண்பராய் இருந்தார். அன்னாரது தொடர்பும் திலகரின் வடமொழி அறிவு வளர்தற்கு உதவி செய்தது. திலகருக்கு மராத்திய மொழியிலும் நல்ல பயிற்சி இருந்தது. திலகர் இயல்பாகவே கணிதத்தில் நுண்ணறிவு பெற்று விளங்கினார்.

திலகர் பூனாவிலிருந்த ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் பதினோராவது வயதில் சேர்க்கப்பட்டார். அவ்வாறு சேரும்பொழுதே அவருக்குக் கணிதம், இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றில் பயிற்சி இருந்தது. இவ்வாறு சிறந்த அடிப்படையுடன் பள்ளியில் சேர்ந்த திலகர், பள்ளியின் ஒழுங்கு விதிகளை விரும்பினாரல்லர். ஓராண்டுப் பாடம் முழுவதையும் அவர் இரண்டு மூன்று மாதங்களில் படித்து முடித்துவிடுவார். எனவே, அவர் ஆண்டு முழுவதும் ஒரே வகுப்பில் இருப்பதை வெறுத்தார். ஆசிரியர்களுக்குத் திலக

ரிடம் ஒரு வகை வெறுப்பே இருந்தது எனலாம். ஆனால், அவரனைவரும் அவரது நுண்ணறிவையும் கல்வி வளர்ச்சியையும் கண்டு பெரிதும் வியந்தனர்.

கற்பலகையில் கணக்கை எழுதிக்கொள்ளுமாறு ஆசிரியர் கூறினால், திலகர் அக் கணக்கைத் தமது மனத்திலேயே எழுதிக்கொள்வார். மற்றவர்கள் கணக்கை எழுதிக்கொள்வதற்கு முன்னரே அவர் கணக்கின் விடையைக் கூறிவிடுவார்.

பள்ளியில் படிக்கும் பொழுதே திலகருக்குத் திருமணம் நடைபெற்றுவிட்டது. அவருக்கு அப் பொழுது வயது பதினைந்துதான். அவருக்கு மனைவி யாராய் வாய்த்தவர் தபி பாய் என்னும் அம்மையாரா வார். அவர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவ ரிடம் அன்பும் அருளும், உருவும் திருவும் நன்கு அமைந்திருந்தன. அத்தகைய நங்கையார் தமக்கு நன்மனைவியாராகக் கிடைத்ததால் திலகர் பெரு மகிழ்ச்சி அடைந்தார்.

திலகருக்குத் திருமணம் முடிந்து சில நாட்களில் அவர் தந்தையார் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். அவரது பத்தாவது ஆண்டிலேயே தாயாரும் இறந்து விட்டார். ஆதலால், திலகர் தம் இளைய தந்தை யாரின் ஆதரவில் வாழ்ந்து வந்தார். அவருடைய ஆதரவாலேதான் திலகரால் தமது கல்லூரிக் கல்வியை முடிக்க முடிந்தது. அவர் 1872ஆம் ஆண்டு மெட்ரி குலேஷன் தேர்வில் வெற்றி பெற்றார். பிறகு அவர் தக்கணக் கல்லூரியில் சேர்ந்தார். அக்கல்லூரியின் ஆசிரியர் அவரது வடமொழி அறிவு கண்டு வியந் தனர். திலகர் பி. ஏ. பட்டமும் பெற்றார்.

திலகரது மனம் சட்டக்கல்வி கற்பதிலேயே சென் றது. அவர் இந்து சட்டங்களை எல்லாம் ஐயமறக்

கற்ருர். அதற்கு அவரது வடமொழி அறிவு பேருதவி செய்தது. திலகர் இந்துமத உண்மைகளையும், இந்தியர்களின் பழங்காலப் பண்பாடுகளையும் நன்கு கற்ருர். தாம் பிற்காலத்தில் தலைசிறந்த ஒரு வழக்கறிஞராக வேண்டும் என்பது அவரது பெருவிருப்பம். உலகத்தில் தம் புகழை நிலைநாட்டுவது சிறந்தது என்று அவர் கருதினர். வழக்கறிஞர் தொழில் வாயிலாகப் பெரும்பொருள் சேர்க்க வேண்டும் என்றும் அவர் சில சமயங்களில் நினைத்தது உண்டு. இத்தகைய நோக்கங்களுடன் அவர் சட்டத்தேர்வில் வெற்றி பெற்ருர். ஆனல், அவர் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளவில்லை! என்னே வியப்பு! அவர் பாரத நாட்டு மக்களுக்குத் தொண்டு புரிவதில் முனைந்தார். அவ்வாறு அவர் முனைந்தது நமது தவப்பயனே ஆகும்.

### வாழ்க்கையும் நாட்டு நலப் பணிகளும்

திலகர் வாழ்ந்த காலத்தில் பாரத மக்கள் யாவரும் கல்வி கற்க வசதிகள் இல்லை. வீதிதோறும் இரண்டொரு பள்ளியாவது வேண்டும் என்று பாரதியார் கண்ட கனவை மெய்ப்பிக்க இன்று நாம் முயல்கின்ருேம். செல்வன் மகனுயினும், வறியவன் மகனுயினும், முதலாளியின் பிள்ளையாயினும், பாட்டாளியின் பிள்ளையாயினும்-பள்ளி வயது அடைந்த சிறுவர் யாவரும் கல்வி கற்க இன்று வாய்ப்பு உண்டு. ஆனல் திலகர் வாழ்ந்த நாளில் நகரங்களிலேயே நல்ல பள்ளிகள் இல்லை. நாட்டுப்புறப் பள்ளிகளைப் பற்றியோ, சொல்லவே வேண்டுவதில்லை. சில கிராமங்களில் பள்ளிக் கூடங்கள் பெயரளவில் இருந்தன. அவை ஒழுங்காக நடைபெறவில்லை. அக்காலத்தில் மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வருவதே அரிது. இந்த நிலையில் கிராமக் கல்வி எவ்வாறு பரவும்? நகரங்

களில் இருந்த பள்ளிகளிலும் அந்நாளில் பழைய முறைகளிலேயே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது.

பாரத நாடு முன்னேற வேண்டுமானுல், பாரத மக்கள் நல்ல கல்வியைப் பெறவேண்டும்; இளைஞர் தம் வாழ்க்கைக்குப் பயன்படும் கல்வியைக் கற்க வேண்டும்; இளைஞர்களுக்கு நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், மதப்பற்றும் உண்டாக வேண்டும். இத் தகைய கருத்துகள் பல திலகரது மனத்தில் தோன்றின. எனவே, பாரத நாட்டில் சிறந்த பள்ளி களை எவ்வாறு அமைப்பது என்னும் ஆராய்ச்சியில் திலகர் ஈடுபட்டார். அவ்வாராய்ச்சியின் பயனுக அவர் தாமே அதற்கு வழி காட்டியாய் இருக்க முடிவு செய்தார். இளைஞர்க்கு நல்லொழுக்கங்கள் பல வற்றைப் பள்ளிக்கூடத்திலேயே கற்பிக்க அவர் விரும்பினுர். மாணவர்க்குத் தந்நலம் கருதாது பிறர் பொருட்டு உழைக்கக் கற்பிப்பது தமது கடமை என்று அவர் நினைத்தார்.

திலகரது கருத்தை அவர் நண்பராகிய அகார்க்கர் என்பவர் பெரிதும் பாராட்டினுர். அது மட்டுமா? திலகருடன் ஒத்துழைக்கவும் அவர் முன் வந்தார். அவ்விருவரும் செய்த முயற்சிக்கு விஷ்ணு சாஸ்திரி சிப்ளங்கர் என்னும் அறிஞரும் உதவ இசைந்தார். எனவே, அவர்களுடைய முயற்சியால் 'புதிய ஆங்கிலக் கல்விச்சாலை' என்ற பெயருடன் ஒரு கல்விச்சாலை நிறுவப்பெற்றது. அம்மூவரும், நண்பர் வேறு சில ரும் அக் கல்விச்சாலையில் ஆசிரியப்பணியை மேற் கொண்டனர். அவர்களுள் திலகருக்கே பல பொறுப் புக்களும் வேலைகளும் இருந்தன. அந்தக் கல்விச் சாலையில் கணக்கற்ற மாணவர் சேர்ந்தனர். அங்குக் கற்பிக்கப் பெற்ற கல்வியை எல்லோரும் புகழ்ந்தனர்.

ஆசிரியர்கள் தங்கள் வேலையின் பொருட்டு எவ்வித மான ஊதியத்தையும் பெறவில்லை. அக்கல்விச்சாலை யில் மாணவர்களுக்குச் சமயக் கல்வியும், ஒழுக்கக் கல்வியும் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன. பள்ளியிற் சேர்ந்த மாணவர்களின் தொகை பெருகவே, அப்பள்ளி பிறகு கல்லூரியாயிற்று. அதுவே இப்பொழுது பம்பாயில் 'பெர்கூஸன் கல்லூரி' என்ற பெயருடன் சிறந்து விளங்குகிறது.

திலகர் தம் காலத்திலே வாழ்ந்த மக்களிடம் குறைபாடுகள் பலஇருந்தமையைக் கண்டார். பாரத மக்களிடம் நாட்டுப்பற்று உண்டாகாமல் இருந்தது அவருக்குப் பெருவருத்தத்தை உண்டாக்கியது வீர சிங்கமாகிய சிவாஜி பிறந்த நாட்டில் தோன்றிய மக்க ளுக்கு நாட்டுப்பற்றினை ஊட்டுதல் தம் தலைசிறந்த கடமை என்பதை அவர் உணர்ந்தார். அவ்வாறு நாட் டுப் பற்றினை ஊட்டுவதற்கு இரண்டு பத்திரிகை களைத் தொடங்குவது நலமென்று விஷ்ணு சாஸ்திரி யார் திலகருக்கு யோசனை கூறினர். திலகருக்கும் அவ்வாறு பத்திரிகைகளை நடத்துதல் சரி என்று தோன்றியது. எனவே, திலகர் தம்முடைய நண்பர் களின் உதவி பெற்று, இரண்டு பத்திரிகைகளைத் தொடங்கினர். அவை 'கேசரி', 'மராத்தா' என்பன. 'கேசரி' என்பது தினசரிப் பத்திரிகை. அது மராத் திய மொழியில் வெளி வந்தது. 'மராத்தா' என்பது ஆங்கில வாரப் பத்திரிகை. பாரத மக்கள் எல்லோ ரும் படித்து அறியும்பொருட்டு அஃது ஆங்கிலப் பத்திரிகையாக நடத்தப்பட்டது. திலகரும், அவ ருடைய நண்பர்களும் உணர்ச்சி வாய்ந்த கட்டுரைகள் பலவற்றை அவ்விரு பத்திரிகைகளிலும் எழுதி வந்தார்கள்.

அக்காலத்தில் பாரத மக்கள் அயலார் ஆட்சியில் அடிமைகளாய் ஒடுங்கிக் கிடந்தார்கள். ஆங்கிலேயரின் அடக்கு முறைக்கு அஞ்சியே பெரும்பாலோர் அடிமை வாழ்க்கை வாழ்ந்தனர். தங்களை அடக்கி ஆண்ட அயலார் செய்த தவறுகள் பொதுமக்களுக்குத் தெரியாமலே இருந்தன. அவற்றை எல்லாம் வெட்ட வெளிச்சமாக்கத் திலகர் விரும்பினார்.



பால கங்காதர திலகர்

எனவே, அவர் அயல் அரசாங்கத்தின் தவறுகளைக் கேசரியில் விளக்கமாக எழுதிவந்தார். அக்காலத்தில் கோலாப்பூர் சம்ஸ்தான நிருவாகத்தில் ஊழல் இருந்ததைத்திலகர் கேள்விப்பட்டார். உடனே அவர் அதைக் கேசரியில் வெளிப்படுத்தினார். நிருவாகத்தின் குற்றத்தைப் பொதுமக்கள் அறியுமாறு செய்வது தமது கடமை என்பதே திலகரின் நினைவு. அவ்வாறு எழுதியதன் பயனாகத் திலகருக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது. அவர் நண்பராகிய அகர்க்கரும் இதனால் சிறைபுக நேர்ந்தது. சிறையில் அவ்விருவரும் அடைந்த அல்லல்களுக்கு எல்லையில்லை. ஆனால் சிறை வாழ்க்கை காரணமாக அவர்கள் பொதுமக்களால் பெரு வீரர்களாகக் கருதப்பட்டார்கள். சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடன் அவர்களை யாவரும் மதிப்புடன் வரவேற்றுப் போற்றினர்; அவர்களுடைய அஞ்சாமையையும் நேர்மையையும் புகழ்ந்தனர்.

திலகரும் அகர்க்கரும் இந்து சமூகத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்ய முன் வந்தனர். அதற்கு

அவர்கள் நடத்தி வந்த கேசரிப் பத்திரிகை பேருதவி செய்தது. திலகர் இந்துக்களின் பழங்காலப் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்தார். இந்து சமூகத்தில் திடீரென்று பல மாறுதல்களை உண்டாக்குதல் பயன் தாராது என்பதை அவர் உணர்ந்தார். எனவே, அவர் மெல்ல மெல்லத்தான் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று கருதினர். ஆனல், அகர்க்கரின் கருத்து வேறு விதமாய் இருந்தது. இந்து சமூகத்தில் உடனடியாகச் சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும், மக்களுடைய எதிர்ப்பைத் தாம் பொருட்படுத்தக் கூடாதென்றும் அகர்க்கர் கூறினர். இத்தகைய மனவேற்றுமை காரணமாக நண்பர்களுக்குள் வாதங்கள் நிகழ்ந்தன. அவற்றின் பயனக நண்பர் இருவரும் பிரியும்படி நேர்ந்துவிட்டது.

நண்பரின் மன வேறுபாடு திலகரது முயற்சிக்குத் தடை செய்யவில்லை. தாம் கருதியதைச் செயற்படுத்துவதில் அவர் முனைந்தார். மராத்திய நாடு முழுவதிலும் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டும் என்பது திலகரின் கருத்து. எனவே, அவரும் அவருடைய நண்பர் சிலரும் சேர்ந்து தக்கணக் கல்விச் சங்கத்தைத் தொடங்கினர். அதன் ஆதரவில் திலகர் கல்வியை எங்கும் பரப்ப முயன்ருர். தமது முயற்சிக்கு உதவி செய்கின்றவர்கள்பால் தன்னடக்கமும், தமக்கென வாழாமையும், அருள் உள்ளமும் இருக்கவேண்டும் என்று திலகர் வற்புறுத்தினர். ஆசிரியர்கள் வேறு அலுவல்களை மேற்கொள்ளக் கூடாதென்றும் திலகர் விதி வகுத்தார். இவற்றைச் சிலர் விரும்பவில்லை. தக்கணக் கல்விச் சங்க இயக்குநர்களிடையே வாதங்கள் பல நிகழ்ந்தன. திலகரின் கூற்றுப்படி நடப்பதற்குப் பலர் மறுத்தனர். எனவே, திலகர் அக்கல்விச் சங்கத்தை விடுத்து விலகிவிட்

டார். ஆனால், அவர் தாம் நடத்தி வந்த கேசரிப் பத்திரிகை வாயிலாக மக்களுக்குத் தொண்டு செய்வதை நிறுத்தினாரல்லர்.

திலகருடைய நாட்டுத் தொண்டு நன்கு வெளிப்படுவதற்கு ஏற்ற ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அக்காலத்தில் கிராபோர்டு என்னும் அரசாங்க அதிகாரி ஒருவர் அரசாங்க வரிகளை வசூல் செய்துவந்தார். அவர் கைக்கூலி வாங்கி வந்தார் என்று நாட்டு மக்களிடையே ஓர் எண்ணம் பரவியிருந்தது. அதன் உண்மையை ஆராய்ந்து அறிய அரசாங்கம் அவாவியது. ஆனால், அது பற்றிய உண்மைகளை உணர்ந்தவர்கள் அவற்றை வெளியிட அஞ்சினார்கள். அவற்றைத் தம் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்துமாறு திலகர் பொதுமக்களை வேண்டிக் கொண்டார். ஆயின், சிலரே அவற்றைப் பற்றிய சில உண்மைகளைக் கேசரியில் எழுதினர். பல உண்மைகள் வெளிப்படவே இல்லை. எனவே, கிராபோர்டு குற்றமற்றவர் என்று அரசாங்கம் முடிவு செய்து, அவரைப் பற்றிக் குறை கூறியவர்கள்மீது குற்றம் சுமத்தியது. இவ்வாறு பொது மக்களுள் சிலர்மீது குற்றம் சுமத்தப்பட்டது தகாதசெயல் என்று திலகர் தம் கேசரியில் கண்டனக் கட்டுரை எழுதினார். அக்கட்டுரை மக்களின் உணர்ச்சியைத் தூண்டியது. மக்கள் திலகரை மேலும் மேலும் போற்றிப் புகழத் தொடங்கினார்கள். திலகரின் புகழ் பாரத நாடு முழுவதும் பரவியது. அவர் 1895 ஆம் ஆண்டில் பம்பாய்ச் சட்ட சபையிலும் உறுப்பினர் ஆனார்.

திலகர் அரசியல் தொண்டில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டிருந்தார்: இந்திய தேசியக் காங்கிரசின் உறுப்பினராயும் இருந்தார். ஆனால், அப்பொழுது

மராத்திய நாட்டுத் தொண்டரிடையே இரு பிரிவுகள் இருந்தன. ஒரு பிரிவின் தலைவர் திலகர்; மற்றொரு பிரிவின் தலைவர் கோபால கிருஷ்ண கோகலே. இவ்விருவரும் அறிவு மிக்கவர்; மராத்தியர்; நாட்டின் முன்னேற்றத்திலேயே நாட்டம் கொண்டவர்; நாட்டுத் தொண்டர்; தியாகிகள். ஆனால், கோகலே அரசாங்கத்துடன் ஒத்துழைத்தே மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கருதினார். திலகரோ, அயலார் ஆட்சியை அறவே வெறுத்தார். கோகலே சட்ட சபைகளிற் கலந்துகொண்டு நாட்டில் பல சீர் திருத்தங்களைச் செய்ய விரும்பினார்; திலகரோ கிராம மக்களுடன் கலந்திருந்து எளியவர்களை முன்னேற்ற விரும்பினார். கோகலே சுய ஆட்சி கிடைக்க வேண்டும் என்று உழைத்தார்; திலகரோ, பூரண சுயராச்சியம் வேண்டும் என்று அல்லும் பகலும் அரும்பாடுபட்டார். இவ்வாறு இவ்விரு பெரியார்களுக்கிடையே அடிப்படையான கருத்து வேறுபாடுகள் பல இருந்தன. இவற்றால் காங்கிரஸ் கூட்டங்களில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. ஆனால், திலகரது நாட்டுப்பற்றினை அவருடைய எதிர்க்கட்சிக்காரர்களும் புகழ்ந்தார்கள்.

பொதுமக்களிடம் அன்பு, அருள், அறிவு, ஆற்றல், அடக்கம், ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் யாவும் இருந்து வந்தன. ஆனால், அக்காலத்தில் அவர்களுக்கு நாட்டுப் பற்று மிகக் குறைவாய் இருந்தது. எனவே, மராத்தியர்களுக்கு நாட்டுப் பற்றை மிகுதியாக ஊட்ட வேண்டும் என்பதற்காகத் திலகர் பெரும்பாடு பட்டார். மராத்திய வீர சிங்கமாகிய சிவாஜியைப் பற்றி மராத்திய மக்களும் மற்றையோரும் நன்கு அறியுமாறு செய்ய வேண்டும் என்பது திலகரின் ஆவல். எனவே அவர் சிவாஜியின் நினைவிற்கு அறிகுறியாகத் திருவிழாக் கொண்டாட

வேண்டும் என்று கூறினர். மக்கள் அதனை மன மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்கள். ஆகவே, அத் திருவிழா, சிறந்ததொரு வீர விழாவாக ஆண்டு தோறும் நல்ல முறையில் நடத்தப்பட்டு வந்தது.

ஒரு முறை அவ்வீர விழா நடைபெற்ற சிறப்பைப் பற்றித் திலகர் தமது கேசரியில் விரிவாக எழுதியிருந் தார். அக்கட்டுரையில் வீரவுணர்ச்சி பொங்கி வழிந்தது. அக்கட்டுரை வெளிப்பட்ட சில நாள் களுக்குப் பிறகு, பூனுவில் ஆங்கிலேயர் இருவர் கொலை செய்யப் பெற்றனர். திலகரது வீரவுணர்ச்சிக் கட்டுரையே அக்கொலைகளுக்குக் காரணம் என்று அரசாங்கம் கருதி, அவர்மீது வழக்கும் தொடுத்தது. வழக்கின் முடிவாகத் திலகர் பதினெட்டு மாதச் சிறைத் தண்டனை அடைந்தார். அவரைச் சிறையில் அடைத்தது தகாது என்று பொதுமக்கள் கொதிப் படைந்தார்கள். எனினும், என் செய்வது? அடிமைத் தளையால் அடக்கப்பட்டிருந்த அவர்களால் யாது செய்ய இயலும்? திலகரின் சிறைத் தண்டனையை அவர்களால் மாற்ற முடியவில்லை. திலகர் சிறையில் அடைந்த தொல்லைகளுக்கு எல்லையில்லை. எனினும், அவர் சிறையில் தமது அருங்காலத்தை வீணாக்கின ரல்லர். அரிய நூல் ஒன்றை எழுதுவதிலேயே சிறை யில் அவர் தம் காலத்தைக் கழித்தார். ஓராண்டிலேயே அவர் விடுதலை பெற்றுவிட்டார். எனினும், என்? அவரது உடல் நலம் சிறை வாழ்க்கையால் பெரிதும் குன்றிவிட்டது.

சிறையிலிருந்து வெளிப்பட்ட பின்பு திலகர் சிறிது காலம் ஓய்வு பெற்றார். அத்தகைய ஓய்வினால் அவரது உடல் நிலை சற்றுக் குணமடைந்தது. உடனே அவர் மறுபடியும் தேசத் தொண்டில் ஈடுபட்டார்.

கேசரியில் வீரச்சுவை பொருந்த எழுதுவதும், மக்களின் வீரவுணர்ச்சியைத் தட்டி யெழுப்புகின்ற சொற்பொழிவுகளை நிகழ்த்துவதும் அவருடைய அலுவல்களாய் இருந்தன. அக்காலத்தில் நாட்டில் பல இடங்களில் கலகங்கள் தோன்றின. ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராகப் பலர் பொங்கியெழுந்தனர். அந்நிலையில் திலகர், "அயலவர் ஆட்சிக்கு எதிராகக் குழப்பங்களும் கலகங்களும் தோன்றியுள்ளன. இவற்றை அடக்குதல் இயலாது. கடலின் கொந்தளிப்பை மக்களால் அடக்க இயலுமோ? இவற்றை அடக்குவதற்கு அரசாங்கம் முயல்வது வீணாகும். கலகங்களை அடக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இந்தியர்களுக்குச் 'சுயராச்சியம்' கொடுப்பதுதான் அந்த வழி," என்று தமது கேசரியில் எழுதினார். இவ்வாறு எழுதியதற்காகத் திலகர் மீண்டும் சிறைப்படுத்தப்பட்டார். திலகர் சட்ட நுட்பங்களை உணர்ந்தவர் அல்லரோ? அவரே தம் வழக்கில் வாதம் செய்தார். செய்தும் பயனென்ன? நாட்டுப்பற்று உடையவர்களை நசுக்க வேண்டும் என்று அயல் அரசாங்கம் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தது. எனவே, திலகருக்கு முடிவில் தண்டனையே கிடைத்தது. அவர் நாடு கடத்தப்பட்டார். ஆறு ஆண்டுகள் திலகர் பர்மாவில் மாண்டலே நகரில் காவலில் வைக்கப்பட்டார்.

தமது சிறை வாழ்க்கையைத் திலகர் நல்ல முறையில் பயன்படுத்தினார். தாம் சிறைப்பட்டமை பற்றி அவர் கவலைப்பட்டாரல்லர். தம்மைப் போலும் நாட்டுப்பற்று அமைந்த நல்லோர் பலர் கிளர்ந்து எழுவதற்கு அவர் வழி வகுத்துவிட்டிருந்தார். எனவே அவர் கவலையின்றிச் சிறந்ததொரு நூலை எழுதுவதில் ஈடுபட்டார். தம்முடைய வடமொழி இலக்கிய

இலக்கண அறிவுகொண்டு அவர் பழங்காப்பியங்களை யெல்லாம் ஆராய்ந்தார். வேதங்களைப் படித்து அவற்றின் உட்பொருள்களை உணர்ந்தார்; பத்தி யுடன் பகவத்கீதையைப் பயின்றார். இத்தகைய முயற்சிகளின் பயனாகக் 'கீதா ரகசியம்' என்னும் அவரது பெருநூல் உருப்பெற்றது. இன்று அந்நூலை உலகம் போற்றுகிறது.

1914 ஆம் ஆண்டு திலகர் விடுதலை பெற்றுத் தாய்நாடு திரும்பினார். திரும்பியவுடன் அவர் மறுபடியும் கேசரி, மராத்தா என்னும் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்; காங்கிரஸ் தொண்டர்களுடன் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டார்; அப்பொழுது நடந்து வந்த அகில இந்திய சுய ஆட்சிச் சங்க இயக்கத்தில் சேர்ந்தார். அவர் 1916 ஆம் ஆண்டில் லக்னோவில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மகாநாட்டிலும் கலந்துகொண்டார்; டாக்டர் அன்னி பெசண்டு அம்மையாருடன் ஒத்துழைத்தார். திலகர் தம்முடைய நண்பர் சிலருடன் பங்களூர், சென்னை, தஞ்சை, மதுரை முதலிய நகரங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். பிற்காலத்தில் அயலாருக்கு எதிராகக் கப்பலோட்டிய வீரத் தமிழராகிய வ. உ. சிதம்பரம் பிள்ளை போலும் பெரியார்களின் நட்பு அச்சுற்றுப் பயண காலத்தில் அவருக்குக்கிடைத்தது. இந்தியர்களுக்கு சுய ஆட்சி கிடைக்கும்பொருட்டு வாதம் செய்வதற்காக அவர் ஒரு முறை, இங்கிலாந்திற்கும் சென்று திரும்பினார்.

மேனாட்டிலிருந்து திரும்பிய திலகரின் உடல் நலம் பெரிதும் குன்றிவிட்டது. ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு நண்பர் அவரை வற்புறுத்தினர். கவின் மிக்க காஷ்மீரில் சிறிது காலம் கவலையின்றி வாழ்ந்து உடலுக்கும் உள்ளத்துக்கும் ஓய்வு கொடுக்குமாறு

பலர் கட்டாயப்படுத்தினர். ஆனால் திலகர் அதற்கு இசைந்தாரல்லர். அவரது உடல் தளர்ந்திருந்ததே ஒழிய உள்ளம் தளரவில்லை. அவர் சிந்து மாகாணத்தி லும் சுற்றுப் பயணம் செய்தார். அப்பொழுது அவர் ஆற்றிய சொற்பொழிவுகளில் அவரது உடலின் தளர்ச்சி நன்கு புலப்பட்டது. சுற்றுப் பயணத்தி லிருந்து திரும்பிய திலகர், பிறகு நோய் வாய்ப் பட்டார். அக்காலத்திலும் அவர் ஒய்வு ஒழிவு இல் லாமல் அலுவலில் ஈடுபட்டார். இவ்வாறு தளரா ஊக்கமும் சலியா முயற்சியும் கொண்ட திலகர், தமது 65 ஆம் வயதில் 1920 ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் முதல் நாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். எண்ணிறந்த மக்கள் அவரது இறுதிப் பயணத்தின் பொழுது கூடினார்கள். அவரது உடலைச் சுடுகாட் டிற்குச் சுமந்து சென்றவர்களுள் மகாத்மா காந்தி யடிகள், லாலா லஜபதிராய், மௌலானா ஷௌக்கத் அலி என்பவர் குறிப்பிடத் தக்கவராவர். திலகரது பூதவுடல் மறைந்தாலென்ன? அவரது உடல் அழிந்ததே ஒழிய, அவர் வளர்த்த உணர்ச்சி அழிய வில்லை. அது நன்கு தளிர்த்தது. அவ்வுணர்ச்சியின் பயனாகத்தான் நாம் சுதந்தரம் பெற்றோம்.

### விநாயகர் விழா

1857 ஆம் ஆண்டில் இந்திய சுதந்தரப் போர் நடைபெற்றது. அப்போரினை ஆங்கிலேயர் 'சிப்பாய்க் கலகம்' என்றே குறிப்பிட்டனர். ஆனால், உண்மை யில் அஃது இந்திய சுதந்தரப் போரேயாகும். அப் போர் நிகழ்ந்த காலத்திலும் அதன் பின்னரும் ஆங் கிலேயருடைய பழக்க வழக்கங்களைப் பாரத மக்களுள் பலர் வெறுத்தனர். ஆங்கிலேயர் இந்து மதத்தையே அழிக்க முயல்கின்றனர் என்று பலரும் எண்ணத்

தொடங்கினர். ஆங்கிலத்தைக் கற்றவர், ஆங்கிலேய அரசாங்கத்தில் அலுவல் பார்த்ததோடு அமையாமல், ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்களையும் ஆர்வத்துடன் மேற்கொண்டனர். இத்தகைய நிலையைக் கண்ணுற்ற திலகர் மக்களுக்குத் தாய் நாட்டுப் பற்றை உண்டாக்கவும், பாரத நாட்டுப் பண்பாட்டை எடுத்துக் காட்டிப் பின்பற்றுமாறு செய்யவும் விரும்பினர். எனவே, அவர் மக்களிடையே புதியதோர் எழுச்சியை உண்டாக்குவதற்காக ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் பாடுபட்டார்.

பழங்காலக் கிரேக்கர்களின் வரலாற்றைத் திலகர் நன்கு அறிவார். நாட்டு மக்களிடம் ஒற்றுமையைப் பரப்ப அவர்கள் ஆண்டுதோறும் தேசிய விழாவினைக் கொண்டாடிய பான்மை அவரது நினைவுக்கு வந்தது. வேறுபட்ட கொள்கைகளும், உணர்ச்சிகளும், கருத்துக்களும் உடைய மக்கள் வேறுபாடுகளை மறந்து, யாவரும் ஒரு நாட்டு மக்கள் என்ற உணர்ச்சியைப் பெறுவதற்குக் கிரேக்க நாட்டுத் தேசிய விழாப் பயன் பட்டது. பலவகைப்பட்ட துறையினரும் ஒன்று சேர்ந்து உறவாடுவதற்கு அத்திருவிழா நல்லதொரு வாய்ப்பினை நல்கியது. இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்த திலகர், பாரத நாட்டிலும் அத்தகையதொரு பெருவிழாக் கொண்டாடப்பட்டால், அவ்விழா வாயிலாக நாட்டு மக்களிடையே ஒற்றுமையையும் நாட்டுப் பற்றையும் உண்டாக்கலாம் என்று கருதினர். அத்தகைய கருத்துடன் திலகர் விநாயகர் விழாவினைச் சிறந்த முறையில் மக்கள் கொண்டாட வழிவகைகளைச் செய்தார்.

செய்ய முற்பட்ட ஒரு செயல் இடையூறின்றி இனிது முடிதற்குக் கடவுளை முதற்கண் வணங்குதல்

நம் நாட்டில் நெடுங்காலமாய் இருந்துவரும் வழக்க மாகும். இந்து சமயக் கடவுள்களுள் ஆனைமுகக் கடவுளை வணங்குதல் நம் நாட்டில் பலருடைய வழக்க மாய் இருந்து வந்தது. ஆண்டுதோறும் இந்துக்க ளுடைய வீடுகளில் விநாயகர் விழாச் சிறிய அளவில் கொண்டாடப் பெற்று வருதலைத் திலகர் கண்டார். அவ்விழாவினையே பெரிய அளவில் பொது இடங்களில் பலர் கூடிக் கொண்டாடுமாறு செய்தல் தம் கருத்து நிறைவேறுவதற்கு ஏற்ற வழி என்பதைத் திலகர் கண்டார்; எனவே இந்துக்களுடைய பிற வகை விழாக் களுள் திலகர் விநாயகர் விழாவினைத் தேர்ந் தெடுத்தார்.

திலகரது பெரு முயற்சியால், பல இடங்களில் கொண்டாடப்பெற்ற விநாயகர் விழா, சிறந்ததொரு சமூகப் பொது விழாவாய் அமைந்திருந்தது. அவ் விழா, பத்து நாள் கொண்டாடப்பெற்று வந்தது. விழாக் காலத்தில் குறிப்பிட்ட இடங்களில் பலர் ஒன்று கூடினர். திலகரும், அவருடைய நண்பர் களும் அத்திருவிழாக் காலத்தில் சமயச் சொற் பொழிவுகள் பல நிகழ்த்தினர்கள். திலகரே வட மொழிப் புலமை மிக்கவர்; இராமாயணம், பாரதம் முதலிய மாபெருங் காப்பியங்களை நன்கு கற்றவர்; இந்து சமய உண்மைகளை ஐயம் திரிபறக் கற்றவர்; கேட்போர்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்குமாறு பேசுதலில் வல்லவர். எனவே, அவ ருடைய பேச்சைத் திருவிழாக் காலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் விரும்பிக் கேட்டார்கள். அவ்வாறு பேசுங்கால் திலகர் இடையிடையே மக்க ளுக்கு நாட்டுப் பற்றையும் நயமான முறையில் ஊட்டினர். இந்த வகையில் விநாயகர் விழா மக்க

ளுக்கு நாட்டுப் பற்றை ஊட்டுவதற்குச் சிறந்த வாய்ப்பை நல்கியது.

விநாயகர் விழாக் காலத்தில் ஆடல் பாடல்களும் இடம் பெற்றன. இன்னிசையைக் கேட்டு மகிழவும். கூட்டமாகச் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடிக் கடவுளின் அருளைப் பெறவும், நடன நிகழ்ச்சிகளைக் கண்டு இன்புறவும் மக்கள் விழா நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். விழாவின் பத்தாவது நாள், விநாயகரின் படிமத்தைக் குளத்திலோ, ஆற்றிலோ, கடலிலோ போடுதல் வழக்கம். இத்தகைய விநாயகர் விழாவில் பங்கு கொண்ட மக்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள்; பாரத நாட்டுப் பண்பாட்டை உணர்ந்தார்கள்; தங்களிடையே இருந்த பூசல்களையும் பிணக்குகளையும் மறந்தார்கள்; ஒற்றுமையுடன் செயலில் ஈடுபட்டார்கள்; நாட்டுப் பற்றுத் தோன்றப் பெற்றார்கள்.

இந்த முறையில் விநாயகர் விழா, பாரத மக்களை இந்தியச் சுதந்தரப் பாதையில் அழைத்துச் சென்றது. மராத்திய மக்கள் வீறு பெற்று எழுவதற்குத் திலகர் இவ்விழாவைப் பயன்படுத்தினார் என்று சொல்லலாம். மக்களுக்கு வீரவுணர்ச்சியை ஊட்டுதற்கு அவர் சிவாஜி விழாவினைக் கொண்டாடுமாறு செய்தார். அதைப்பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளோம்.

### பாரதியார் பாராட்டுரை

திலகர் பெருமானைப் பாரத நாடு முழுவதும் போற்றி வந்தது. நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட யாவரும் அவரைச் 'சுயராச்சியத் தந்தையார்' என்று வழங்கிப் போற்றினர். அக்காலத்தில் தமிழ் நாட்டிலே வாழ்ந்து வந்த

பாரதியார் திலகரை வானளாவப் போற்றிப் பாராட்டி யிருக்கின்றார்.

திலகர் பாரத மக்களிடத்தே நிலவியிருந்த அச்ச உணர்ச்சியை அகற்றினார்; அவர்களுக்குச் சுதந்தர உணர்ச்சியை ஊட்டினார்; பட்டம் பெற்றுக் கைகட்டி வேலை செய்வதை வெறுக்குமாறு செய்தார்; அயல்நாட்டுத் துணியை ஒதுக்குமாறு செய்தார்.

அக்காலத்தில் மக்களுக்குச் சுதந்தர உணர்ச்சியை ஊட்டி, மக்களிடையே கல்வியைப் பரப்பியவர் திலகரே. அவரது பெயர் பலரது அச்சத்தை அகற்றியது.

திலகர் கல்விக் கடல், அறிவுக் களஞ்சியம், பாரதத் தாயின் அடிமைத் தளையை அகற்றும் விரதம் பூண்டவர். சைவர்கள் ஐந்தெழுத்தை அன்போடு ஓதுதல்போல, அக்காலத்து மக்கள் திலகரின் பெயரை அன்போடு கூறிவந்தார்கள். பகைவர்க்கு அவர் தீப்போல்பவர்; தந்நலத்தைத் துறந்த முனிவர். அவரை நினைத்தவர்களது உள்ளம் தூய்மைபெறும். இத்தகைய கருத்துக்களை அமைத்துப் பாரதியார் திலகரைப்பற்றி,

“நாம கட்குப் பெருந்தொண் டியற்றிப்பல்
நாட்டி னோர்தம் கலையிலும் அவ்வவர்
தாம கத்து வியப்பப் பயின்றொரு
சாத்தி ரக்கட லென்ன விளங்குவோன்;
மாம கட்குப் பிறப்பிட மாகுமுன்
வாழ்ந்திந் நாளில் வறண்டயர் பாரதப்
பூம கட்கு மனந்துடித் தே,‘இவள்
புன்மை போக்குவல்!’ என்ற விரதமே.

நெஞ்சக த்தோர் கணத்திலும் நீங்கிலான்
நீத மேயோர் உருவெனத் தோன்றினோன்;

வஞ்ச கத்தைப் பகையெனக் கொண்டதை
மாய்க்கு மாறு மனத்திற் கொதிக்கின்றேன்
துஞ்சு மட்டுமிப் பாரத நாட்டிற்கே
தொண்டி ழைக்கத் துணிந்தவர் யாவரும்
அஞ்செ ழுத்தினைச் சைவர் மொழிதல்போல்
அன்பொ டோதும் பெயருடை ஆரியன்,

வீர மிக்க மராட்டியர் ஆதரம்
மேவிப் பாரத தேவி திருநுதல்
ஆர வைத்த திலக மெனத்திகழ்
ஐயன் நல்லிசைப் பாலகங் காதரன்
சேர லர்க்கு நினைக்கவுந் தீயென
நின்ற எங்கள் திலக முனிவர்கோன்
சீர டிக்கம லத்தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே.''

என்று பாடியுள்ள பாடல்கள் படித்துச் சுவைத்தற் குரியவை.

பாரதியார் சிறந்த புலவர். புலவர் பாடும் புகழுடையோர் வானுலகில் தேவர்களாகிப் பெருமை பெறுவர் என்று புறநானூறு புகல்கிறது. புலவர் பாடும் புகழுடையவராய்த் திலகர் திகழ்ந்தார். அவர் தேவருலகில் பெருமையுடன் வீற்றிருப்பார் என்று நாம் கருதலாம். ஆனால், அவர் மண்ணுலகில் தேவரைப்போலப் பெருமை பெற்று விளங்கினர் என்பது நாம் கண்கூடாகக் கண்ட உண்மை யாகும்.

### அருங்குணங்கள்

திலகர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றை விளங்க அறிந்தோம். அவர் தாம் இறக்கும்வரையில் மக்களுக்குப் பல தொண்டுகள் செய்தார். அரசியலி லும் சமூகத்திலும் சீர்திருத்தங்கள் பலவற்றைச்

செய்தார். அவர் செய்த சமூகச் சீர்திருத்தங்களுக்கு அளவேயில்லை. ஒருவருக்குக் கண் போன்றது கல்வியே என்பதனை உணர்ந்த திலகர் மக்களுக்குக் கல்வியறிவைப் புகட்டுதற்குச் செய்த அரும்பெரு முயற்சிகளை முன்பு நாம் குறிப்பிட்டோம். கல்வி வாயிலாக மக்களின் உள்ளத்தில் நாட்டுப் பற்றினை ஊட்டவேண்டும் என்பதே அவரது நோக்கம். அத்தகைய நோக்கத்தோடு அவர் செய்த சீரிய செயல்களை அறிந்தோம். அவர் உள்ளம் உறுதி வாய்ந்தது. அவர் அச்சத்தை அகற்றியவர். சலியாத உழைப்புடையவர். தளராத ஊக்கம் உள்ளவர்; சொல்வன்மை நன்கு அமையப் பெற்றவர்; எழுத்து வன்மையும் வாய்ந்தவர்.

திலகரிடம் சுதந்தர உணர்ச்சி இளமையிலேயே அமைந்திருந்தது. அவ்வுணர்ச்சி பிற்காலத்தில் நன்கு ஒளி பெற்றுத் திகழ்ந்தது. 'சுயராச்சியம் எனது பிறப்புரிமை. அதனை நான் அடைந்தே தீர்வேன்!' என்று அவர் உறுதி பூண்டார். அது மட்டுமா? அத்தகைய உறுதி தம் காலத்து மக்களுள் பலரும் கொள்ளுமாறு அவர் செய்தார். அவர் பின் பற்றிய முறைகளைச் சிலர் எதிர்த்தனர் என்பது உண்மையே. எனினும், அவரது நோக்கத்தை யாவரும் பாராட்டிப் புகழ்ந்தனர்; தியாகத்தை வியந்தனர்.

திலகர் கடவுட்பக்தி மிகுதியாக வாய்ந்தவர். குற்றவாளி என்று கூறி, நாடு கடத்தப்பட்ட பொழுது திலகர், "என்னைக் குற்றவாளியென்று நீதி மன்றத்தினர் கருதுகின்றனர். நான் ஒரு குற்றமும் செய்யாதவன். நெஞ்சறிந்து யான் ஒரு குற்றமும் செய்யவில்லை. என்னை இப்பொழுது அரசாங்கம் சிறைப்படுத்தியிருக்கிறது. என் உடலைத்தான் சிறைப்படுத்த இயலுமே ஒழிய, என் உள்ளத்தைச் சிறைப்படுத்த இவ்வரசாங்கத்தால் இயலுமோ? உலகத்தில் உள்ள

எல்லாவற்றிலும் மறைந்திருந்து, பொருள்களையெல் லாம் ஆட்டி வைக்கின்ற மேலான சக்தி ஒன்று உண்டு. அந்தச் சக்திக்கு எதிராக யாராலும் எதுவும் செய்ய இயலாது. நான் துன்பம் அடைய வேண்டும் என்பது கடவுளின் கருத்துப்போலும்! நான் துன்பத்தை அடைய அடைய எனது மனம் திண்மையை அடை யும்,'' என்று கூறினர்.

திலகர் இந்து மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவர். வடமொழிப் பேரறிஞராகிய அவர் வேதங்களையெல் லாம் நன்கு கற்ருர்; பகவத்கீதையைப் படித்துணர்ந் தார்; கீதா ரகசியம் என்னும் அரியநூலை எழுதினர். அவர் சிறையில் இருந்த பொழுதெல்லாம் பகவத் கீதை போலும் நூல்களைப் படிப்பதிலேயே தம் காலத் தைக் கழித்தார். இந்து மதத்தின் உண்மைகளையெல் லாம் நன்கு எடுத்துக் கூறிப், பாரத நாட்டுப் பண்பாடு களை மக்களுக்கு எடுத்துரைப்பது வாயிலாகவே, அவர்களுக்கு நாட்டுப் பற்றை ஊட்ட இயலும் என்று அவர் கருதினர்.

வாதம் புரிவதில் வல்லவர் திலகர். அவர் பகைவர் களிடம் கடுமொழி பகரார்: எளியவர்களிடமும், நண்பர் களிடமும் இன்மொழி கூறுவார். எளியவர்களைக் கண் டால் திலகரது மனம் உருகும். ''இந்தியா எனது தாய் நாடு. நான் வணங்கும் கடவுள் எனது தாய் நாடு தான். பாரத மண்ணில் பிறந்தவர் யாவரும் என்னு டைய உறவினர். ஏழைகளாயினும் எளியவர்களா யினும், எல்லோரும் என் உடன் பிறந்தவர்கள். அவர் களுக்கு விடுதலை வாங்கித் தருவதே எனது தலையாய கடமையாகும். அதுவே எனது சமயக் குறிக்கோ ளாகும்,'' என்று அவர் கூறியுள்ளமை நினைத்து இன் புறுதற்குரியது.

திலகர் இளமையில் இளைத்த உடல் உடையவ ராய் இருந்தார். அவர் உடல் உறுதியற்று இருந்தது. கல்லூரியில் சேர்ந்த காலத்தில் அவர் தமது உறுதி யற்ற உடல் நிலையைப்பற்றிச் சிந்திக்கத் தொடங் கினார். அப்பொழுது அவர் மனைவியாரோ, அவரைக் காட்டிலும் பருத்த உடலுடன், வலிமை மிக்கவராய் இருந்தார். அது பற்றி நண்பர் பலர் திலகரை எள்ளி நகையாடினர். உடலுக்குப் பொருத்தமில்லாத பருத்த தலையும், எலும்பு வெளித்தெரியும் மெலிந்த கை கால் களும், பானைபோலப் பருத்த வயிறும் கொண்டு காட்சியளித்த அவரை நண்பர்கள் நகையாடி இகழ்ந் ததில் வியப்பென்ன? ஆனால், திலகர் பிறருடைய இகழ்ச்சியுரைகளைப் பொருட்படுத்தினாரல்லர். எவ்வா றேனும் முயன்று தம் உடலை உறுதிப்படுத்துவதில் அவர் முனைந்தார். அதன்பொருட்டு முயன்றதால் அவரது கல்லூரி வாழ்க்கையில் ஓராண்டு வீணாகியது. அது பற்றி அவர் கவலைப்பட்டாரல்லர். நாட்டுக்கு உழைக்க நல்லுடல் வேண்டுமென்பது அவரது கருத்து. எனவே, அவர் பல வகைப்பட்ட தேகப்பயிற் சிகளை முறைப்படி நாள்தோறும் செய்தார். ஓடுவதும், நீந்துவதும், படகு ஒட்டுவதும் அவருடைய அன்றாட உடற் பயிற்சிகளாய் இருந்தன. இத்தகைய பல வகைப் பயிற்சிகளால் அவரது உடல் உரம் பெற்றது. அதனாலேயே அவரால் பிற்காலத்தில் இடைவிடாமல் உழைக்க முடிந்தது. "என் உடலைப் பேண முயன்ற காரணத்தால் என் கல்லூரி வாழ்க்கையில் ஓராண்டு வீணாயிற்று. ஆனால், அது பற்றி யான் கவலைப்பட வில்லை. இத்தனை ஆண்டுகள் என் தாய் நாட்டுக்கே உழைப்பதற்கு என் உறுதியான உடலே உதவு கிறது," என்று அவரே பிற்காலத்தில் பல முறை கூறியுள்ளார்.

மராத்திய நாட்டில் பெரும்பஞ்சம் உண்டான பொழுதும், 'பிளேகு' என்னும் கொடுநோய் தோன்றிய பொழுதும் திலகர் ஏழை மக்களுக்குச் செய்த உதவிகள் கணக்கிலடங்கா. அவர் எளியவர்களின் பொருட்டு அரசாங்கத்துடன் வாதம் செய்தார்; பஞ்ச காலத்தில் மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள்களை விற்க வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தினர்; பிளேகு பரவிய காலத்தில் தாம் ஒரு மருத்துவச் சாலையை ஏற்படுத்தினர்; நோயுற்றோரின் அருகில் நின்று வேண்டுவன செய்து, இன்மொழி கூறினர்.

திலகர் எப்பொழுதும் தம் விருப்பப்படியே நடக்க விரும்புவார். ஆராய்ந்து பார்த்தே அவர் ஒரு செயலை மேற்கொள்வார். அவருடைய முறைகளைச் சிலர் விரும்பவில்லை. அவருக்கு எதிரான கொள்கையினர் பலர் இருந்தனர். ஆனல், திலகர் தம்முடைய எதிரிகளிடம் இருந்த நற்குணங்களைப் புகழாமல் இரார். அதற்கு எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம்:

திலகரும் கோகலேயும் மாறுபட்ட கொள்கையை உடையவராய் இருந்தனர். கோகலே இறந்த பொழுது திலகர் மகிழ்ச்சி அடைந்தாரோ? இல்லை. எல்லோரைக் காட்டிலும் திலகரே பெரிதும் வருந்தினர். கோகலேயினது பூதவுடம்பின் அருகில் நின்று திலகர், "இன்று நாம் சிறந்த ஒரு தேசத் தொண்டரை இழந்து விட்டோம்! பாரதத்தாய் தன் தலைமைப் புதல்வனை இழந்து வருந்துகின்ருள்! கோகலேயைப்போல நாமும் வாழ முயல வேண்டும். அவர் தம் கடமைகளை நன்கு செய்தார். அவரது நோக்கத்தை நாம் பின்பற்றினல் நன்மையை அடைவது திண்ணம்," என்பன போலும் கருத்துக்களமைந்த பெருஞ்சொற்பொழிவை நிகழ்த்

திஞர். இச்செய்தியிலிருந்து பகைவரிடம் உள்ள நற்பண்புகளைப் பாராட்டும் பண்பு திலகரிடம் அமைந்திருந்தது என்பதை நாம் நன்கு உணரலாம்.

திலகர் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்; பாடுபட்டார்; தம் இன்பங்கள் பலவற்றை விடுத்தார்; தமக்கென வாழாமல், பிறர்க்கென வாழ்ந்தார்; மக்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டினர்; கல்விச்சாலையை நிறுவினர்; கடவுள் உணர்வைப் பரப்பினர்; சட்ட அறிவும் நுண்ணறிவும் பெற்று விளங்கினர்; தமது பெயர் பாரதநாடு உள்ள வரையில் நிலைத்திருக்குமாறு செய்தார். அத்தகைய பெரியாருக்கு நாட்டு மக்கள் பொருத்தமான சிறப்புப் பெயரினை அளித்தார்கள். 'லோகமானியர்' என்பதே அப்பெயராகும். அப்பெரியாரின் வாழ்க்கை நமககுச் சிறந்த வழி காட்டியாய் உள்ளது. அவருடைய அரும்பெருங்குணங்களைப் பின் பற்றினுல், நாம் நற்பயன் பெறலாம்.

# 8. பண்டிட் ஜவாஹர்லால் நெஹ்ரு

நம் நாடு பிறநாட்டார் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதற்காக மகாத்மா காந்தியடிகள் நடத்திய அறப்போரில், நாட்டுத் தொண்டாற்றிய தலைவர்களுள் தடியடிக்குத் தயங்கிப் பின் வாங்கியவரும், சிறைவாசத்துக்கு அஞ்சித் திரும்பி ஓடியவரும், பட்டத்துக்கும் பதவிக்கும் அடிமையானவரும் பலப் பலர். இத்தகைய இழிதகைமை தம்மை நெருங்க விடாமல், நாட்டுக்கு விடுதலை அளிக்கத் தக்க இடம் சிறைக்கூடமே என்னும் காந்தியாரின் கொள்கையைத் தழுவி நின்று, நம் நாட்டை அடிமைப் படுத்தியிருந்த பிற நாட்டாரை எதிர்த்து அறப்போர் தொடுத்த உண்மைத் தியாகிகள் ஒருசிலரே யாவர். அவர்களுள் சிறப்பித்துக் கூறத் தக்கவர் பண்டிட் ஜவாஹர்லால் நெஹ்ரு அவர்களே. இத்தகைய தந்நலமற்ற பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்திருக்க வேண்டுவது நம் கடமையாகும்.

டெல்லியில் பேரரசராயிருந்த ஔரங்கசேப் பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மரணமடைந்தார். அவருக்குப்பின் வந்தவர்களுள், பருக்சியார் என்பவர் டெல்லிப் பேரரசராக இருந்த வமயம் காஷ்மீர நாட்டில் இராஜ்கால் என்னும் வேதியர் ஒருவர் வடமொழியிலும் பாரசீக மொழியிலும் புலவராயிருந்தமையால், அவரது புகழ் நாடெங்கும் பரவியிருந்தது.

காஷ்மீரத்துக்குச் சென்றிருந்த பேரரசர் பருக்சியார் அவ் வேதியரின் பெருமைகளைப்பற்றிக் கேள்வி

யுற்றார்; அவரைக் குடும்பத்துடன் டெல்லிக்கு அழைத்து வந்தார்; ஒரு கால்வாய்க் கரையில் வீடும் நிலமும் அமைந்த ஒரு ஜாகீரை இராஜ்காலுக்கு இனமாக அளித்தார்.

கால்வாய் என்னும் சொல்லுக்கு இந்திமொழியில் நஹார் என்று கூறப்படும். நஹார் என்னும் இச் சொல்லே இராஜ்காலின் கால் வழியில் வந்தவர்கட்கு வழங்கிவரும் நெஹ்ரு என்னும் பட்டப்பெயருக்குக் காரணமாயிற்று.

பண்டிட் ஜவாஹர்லால் நெஹ்ருவின் பாட்டனார் பெயர் கங்காதர நெஹ்ரு. இவர் இராஜ்கால் அவர்களின் கால் வழியில் தோன்றியவர். இவர் டெல்லி நகரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பதவி வகித்து வந்தார். இவருக்குப் புதல்வி ஒருத்தியும், புதல்வர் மூவரும் பிறந்தனர். அம்மூவருள் கடைசிப் புதல்வரே, பண்டிட் ஜவாஹரின் தந்தையாரான மோதிலால் நெஹ்ரு.

மோதிலால் சட்டம் பயின்றார்; கான்பூர் மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கறிஞர் தொழிலை நடத்தி வந்தார். ஆனால், அவர் அங்கு நீண்டகாலம் இல்லை. அலகாபாதுக்கு வந்து அங்குத் தமது தொழிலைத் துவக்கி நடத்தினார். விரைவில் அவருடைய திறமையும், புகழும் பெருகிப் பரவின. மோதிலால் நெஹ்ரு சொரூப ராணி என்னும் பெண்மணியை மணந்து இல்லற வாழ்க்கையை இனிது நடத்தினார். மோதிலாலின் இல்லம் ஆடம்பர வாழ்க்கைக்கும் மேல்நாட்டு நாகரிகத்திற்கும் உறைவிடமாக விளங்கியது. மோதிலால் நெஹ்ருவும் சொரூபராணியும் செய்த தவப் பயனாக, அவர்களின் அருமை மைந்தராக 1889ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 24ஆம் நாள் அலகாபாதில்

TB
031,6(9)
N65
85088



ஜவாஹர் பிறந்தார். அதே ஆண்டில் ஆனந்தபவனம் என்னும் மாளிகை கட்டிமுடிக்கப் பெற்றது. அரண்மனை போன்ற அம்மாளிகையில் மோதிலால் குடிபுகுந்தார். மோதிலால் ஆனந்த பவனத்தில் அரச வாழ்வு வாழ்ந்து வந்தார். இதினின்று ஜவாஹர் குழந்தைப் பருவத்தில் எங்ஙனம் வளர்க்கப்பட்டிருப்பார் என்று கூறவும் வேண்டுமோ!

**கல்வி**

ஜவாஹர் கல்வி கற்கத்தக்க பருவம் அடைந்தவுடனே, சில ஆங்கிலச் செவிலிகள் அவருக்குக் கல்வி கற்பிக்க வென்று அமர்த்தப்பட்டார்கள். முபாரக் அலி என்பவர் உர்தூமொழி கற்பிக்கும் ஆசிரியராக அமர்த்தப்பட்டார். அவர் ஜவாஹருக்கு அரபுக் கதைகளையும் முதல் இந்திய சுதந்தரப் புரட்சிபற்றிய நிகழ்ச்சிகளையும், கூறுவது வழக்கம். அவற்றை ஜவாஹர் பேராவலுடன் கேட்டு மகிழ்வார். இராமாயண, பாரதக் கதைகளைக் கேட்பது அவருக்கு இன்பமாக இருந்தது.

ஜவாஹருக்குப் பதினொன்றாவது வயது வந்தவுடன் புருக்ஸ் என்ற ஐரிஷ் நாட்டு அறிஞர் ஆங்கில ஆசிரியராக அமர்த்தப்பட்டார். நூல்களைப் படிப்பதில் விருப்பமும், செய்தித்தாள்களைப் படிப்பதில் ஆர்வமும் அச் சிறுவயதிலேயே இவருக்கு உண்டு. இவரது இளமைப் பருவத்தில் நிகழ்ந்த ரஷ்ய-ஜப்பானியப் போரைப் பற்றிய செய்திகளைக் காலை நேரங்களில் இவர் மிகுந்த ஆவலுடன் படிப்பது வழக்கம். ஜப்பானியர் அடைந்த வெற்றி நம் நாட்டு விடுதலையில் இவர் மனத்தைத் திருப்பியது என்று கூறலாம். ஜப்பானியரைப் போல், நாமும் ஏன் வீரர்களாக

விளங்கி, நம் நாட்டுக்கு உரிமைபெறக் கூடாது என்று ஜவாஹர் எண்ணுவார்.

மோதிலால் நெஹ்ரு ஜவாஹரைப் பதினைந்தாவ்து வயதில் இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார்; அங்கே செல்வச் சிறுவர்கள் படிக்கும் ஹாரோ பள்ளியில் ஜவாஹரைச் சேர்த்தார்.

ஜவாஹர் இரண்டாண்டுகள் வரை அப்பள்ளியில் ஊக்கமாகக் கல்வி பயின்றார். பிறகு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த "டிரினிட்டி" கல்லூரியிற் சேர்ந்து விஞ்ஞானம் பயின்றார். அதன் பிறகு சட்டக்கல்வி கற்றுத் தேறினார்; இவ்வாறு ஏழாண்டுகள் இங்கிலாந்தில் தங்கிக் கல்வி பயின்றார்; பிறகு தமது கல்விப்பயிற்சியை முடித்துக்கொண்டு நம் நாடு திரும்பினார்,

பண்டிட் ஜவாஹர் இந்தியா வந்ததும், அலகாபாத் உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞர் தொழிலை இனிது நடத்தத் தொடங்கினார். அவரது புகழ் இளம்பிறை போல வளர்ந்தது. நீதி மன்றத்திற்குச் சென்று வாதம் புரிதல் தொடக்கத்தில் ஜவாஹருக்கு மகிழ்ச்சியளித்தது. எனினும், நாளடைவில் அத்தொழிலில் அவருக்குப் பற்று, குறையத் தொடங்கியது. இதற்குக் காரணம் நாட்டு விடுதலைக் கிளர்ச்சியேயாகும்.

## சுதேசி இயக்கம்

பண்டிட் ஜவஹர்லால் இங்கிலாந்தில் தங்கிக் கல்வி பயின்று கொண்டிருந்தபோது, இந்தியாவில் நாட்டு உரிமையை நாடி அரசியல் கிளர்ச்சி தோன்றியது. நாட்டு விடுதலையில் ஆர்வம் கொண்ட பலர் அரசியல் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மகாராட்டிரத்தில் தோன்றிய லோகமானிய பாலகங்காதர திலகர்,

தென்னாட்டு வீரர் வ. உ. சிதம்பரனார், வங்கத் தலைவர் அரவிந்தகோஷ், பாஞ்சாலச் சிங்கம் லாலா லஜபதி ராய் போன்றவர்கள் வகுத்த திட்டங்களும், ஆற்றிய சொற்பொழிவுகளும் ஆங்கில ஆட்சியாளரைத் திடுக்கிட வைத்தன. ஆதலால் அவர்கள் தலைவர்களை நாடு கடத்தியும், சிறையில் அடைத்தும் கொடுமைப் படுத்தினர்.

இதனால் முன்னரே ஆங்கிலேயரை அறவே வெறுத்து வந்த தேசத் தொண்டர்கள் மனம் மேலும் புண்பட்டது. அவர்கள் தீவிரக் கிளர்ச்சியில் ஈடுபடத் தொடங்கினர். ஆங்கில ஆட்சியாளரின் அடக்கு முறைகளால் சுதேசி இயக்கம் தோன்றியது. வெளி நாட்டுப் பொருள்களை வாங்கக்கூடாதென்று நாட்டுத் தலைவர்கள் ஆங்காங்கே பேசிவந்தனர். நமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் நம் நாட்டில் நாமே செய்ய வேண்டும் என்றும், நம் நாட்டில் செய்யப்பட்ட பொருள்களையே எல்லாரும் பயன்படுத்த வேண்டுமென்றும், தலைவர்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் எடுத்துக் கூறிவந்தனர். இதனால் 'வெளிநாட்டுப் பொருள் மறுப்பு இயக்கம்' காட்டுத் தீப்போல் நாடெங்கும் பரவியது. இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருந்த ஜவாஹர் இச் செய்திகள் அனைத்தையும் அன்றாடம் பத்திரிகைகள் வாயிலாகப் படித்து வந்தார். எந்த நாடும் பிற நாட்டுக்கு அடிமைப்பட்டிருத்தல் கூடாது என்பது மாணவராயிருந்த ஜவாஹரின் கருத்தாகும். எனவே இச்செய்திகள் அவர் உள்ளத்தில் நாட்டுப் பற்றை பதியச் செய்தன. இவ்வாறு நாட்டு விடுதலைக் கிளர்ச்சியில் ஆழ்ந்துகிடந்த அவருள்ளம் வழக்கறிஞர் தொழிலில் ஊன்றி நில்லாமல் மெல்ல மெல்ல நழுவியதில் வியப்பில்லை அல்லவா?

## முதல் உலகப் போர்

1914ஆம் ஆண்டில் முதல் உலகப்போர் ஐரோப்பாவில் தொடங்கியது. அப்போரில் ஈடுபட்ட ஆங்கிலேயர் இந்தியாவைப் பயன்படுத்திக் கொண்டு போரில் வெற்றிகாண விரும்பினர்; போருக்கென்று இந்தியாவிலிருந்து வீரர்களைத் திரட்டினர்; சுதேச மன்னர்களிடமிருந்தும் குடிமக்களிடமிருந்தும் பல்வகைகளிற் பொருள் திரட்டினர்.

ஆங்கிலேயருக்கு இத்தகைய உதவிகள் செய்வதை இந்தியர் விரும்பவில்லை. இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டவருள் ஒருசாரார் ஆங்கிலேயருடைய தொடர்பு இன்றி முழுவிடுதலை பெறவேண்டுமென்று விரும்பினர். இத்தகைய தீவிரக் கொள்கை உடையவராயிருந்தபடியால் அவர்கள் தீவிரவாதிகள் என்று வழங்கப்பட்டார்கள். ஆங்கிலேயரின் தொடர்பு கொண்டு சிறிதுசிறிதாக அவர்களிடமிருந்து உரிமை பெற்று, இறுதியில் விடுதலை பெறுவதே சிறந்தமுறையென ஒருசாரார் கருதினர்; அவர்கள் மிதவாதிகள் என்று வழங்கப் பட்டார்கள்.

தீவிரவாதிகள், மிதவாதிகள் ஆகிய இரு பிரிவினருள், மிதவாதிகள் உலகப்போரில் ஆங்கிலேயருக்கு எல்லாவகையான உதவிகளும் அளிக்க வேண்டுமென்று கருதினர். ஜவாஹரின் தந்தையார் ஒரு மிதவாதி. அவர் போருக்குப் படைதிரட்டும் அதிகாரியாக அலகாபாதில் ஆங்கிலேயரால் நியமிக்கப் பெற்றிருந்தார்.

பண்டிட் ஜவாஹர் அவ்வமயம் காங்கிரசுப் பேரவையின் உறுப்பினராயிருந்தார். அவர் தீவிர நோக்கமுடையவர். ஆதலால் தம் தந்தையார் மிதவாதியாக இருப்பதை அவர் விரும்பவில்லை. தீவிரவாதிகள்

ஆங்கிலேயருக்கு எவ்வித உதவியும் அளிக்கக்கூடாது என்று கூறினார்கள்.

நம் நாட்டை அவ்வமயம் ஆட்சி புரிந்த ஆங்கிலேயர், போரை எதிர்த்துப் பேசியவர்களைச் சிறையிலிட்டும், பத்திரிகைகளில் எழுதுவதைக் கட்டுப்படுத்தச் சட்டமியற்றியும், அடக்குமுறை நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள். இதைக் கண்டிப்பதற்காக அலகாபாதில் ஒரு கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட பண்டித ஜவாஹர் பேசிய பேச்சு இந்தியர் உள்ளங்களில் வீர உணர்ச்சியை ஊட்டியது; ஆங்கிலேயர்களுக்கு நடுக்கத்தை உண்டாக்கியது.

முதல் உலகப்போர் 1916 ஆம் ஆண்டில் கடுமையான நிலை அடைந்துவிட்டது. அவ்வமயம் இங்கிலாந்தின் முதல் அமைச்சராயிருந்த லாயிடு ஜார்ஜ் போரை நடத்தும் முழு உரிமை பெற்றார். அவர் சிறந்த அரசியல் அறிஞர். இந்தியாவின் ஒத்துழைப்பின்றிப் போரில் வெற்றிபெற இயலாதென்பதை அவர் உணர்ந்தார். இந்தியா எல்லாவகையான உதவிகளையும் அளிக்க முற்படுமாயின், போர் முடிந்த பிறகு படிப்படியாக இந்தியாவுக்குத் 'தன்னாட்சி உரிமை' வழங்கப்படுமென அவர் வாக்குறுதியளித்தார். சிறை வைக்கப்பட்டிருந்த காங்கிரசுத் தீவிரவாதிகளையும் விடுதலை செய்தார். அதன் பிறகு இந்தியத் தலைவர் எல்லாரும் இங்கிலாந்துக்கு உதவியளிக்க முற்பட்டனர்.

## திருமணம்

அந்த ஆண்டில் கமலாதேவி அம்மையாருக்கும் ஜவாஹருக்கும் திருமணம் சிறப்பாக நிறைவேறியது. திருமணத்திற்குப் பிறகு மணமகனும் மணமகளும்

சிறிது காலம் காஷ்மீரத்தில் தங்கி இனிதாக வாழ்க்கை நடத்தினர்.

தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் புரிந்த தொண்டைப்பற்றி ஜவாஹர் நன்கு அறிந்தார். எனினும், 1916 ஆம் ஆண்டுக்கு முன் காந்தியடிகளுடன் எத்தகைய தொடர்பும் கொள்ளப் பண்டித ஜவாஹர் லாலுக்கு வாய்ப்புக் கிடைக்க வில்லை. 1916 இல் இலட்சுமணபுரியில் காங்கிரசுப் பேரவை கூடியபோது அங்குக் காந்தியடிகளைக் கண்ட ஜவாஹர் அவருடைய அருங்குணங்களில் மனத்தைப் பறிகொடுத்தார். தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் ஆற்றிய தொண்டுகளைப்பற்றி ஜவாஹர் நன்கு அறிந்திருந்தார். காந்தியடிகளின் பேச்சுகளையும் செயல்களையும் அது முதல் ஜவாஹர் கூர்ந்து கவனித்து வந்தார்.

## 'ரௌலட் சட்டம்'

முதல் உலகப் போர் 1918 இல் முடிவுபெற்றது. போர் முடிந்த பிறகு இந்தியாவுக்குத் தன்னுட்சி உரிமை தருவதாகக் கூறிய ஆங்கில ஆட்சியினர் அவ்வாறு செய்யவில்லை. ஆட்சியினரின் சொற்களை நம்பிய இந்தியத் தலைவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். ஆதலால் நாடெங்கும் உரிமைக் கிளர்ச்சிகள் மீண்டும் தோன்றின. செய்தித் தாள்கள் ஆங்கில அரசியலை வன்மையாகக் கண்டித்துக் கட்டுரைகள் எழுதின.

இவற்றைக் கண்ட அரசியலார் அடக்குமுறைகளைக் கையாளத் தொடங்கினர். ரௌலட் சட்டம் என ஒரு கடுமையான சட்டத்தை அரசியலார் இயற்றினர். அதன்படி போலீசார் ஐயப்படும் எவரையும் கைது செய்யவும் காவலில் வைக்கவும் உரிமை பெற்றனர்.

அந்தச் சட்டம் நடைமுறையில் வராமல் தடுக்க நாட்டுத் தலைவர்கள் முயற்சி செய்தார்கள்.

காந்தியடிகள் சட்டங்களை மீறி அறப்போர் நடத்தத் துணிந்தார். அது குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்களைச் செய்தித் தாள்கள் வாயிலாக அறிந்த ஜவாஹர் தாமும் அறப் போரில் கலந்துகொள்ள அவாக்கொண்டார். ஆனால், அதை அவர் தந்தையார் மோதிலால் விரும்பவில்லை.

1919ஆம் ஆண்டில் பஞ்சாப் மாவட்டத்தில் அமிர்தசரசு நகரில் உள்ள ஜாலியன்வாலாபாக் என்னும் தோட்டத்தில் ஆங்கில அரசியலாரின் அடக்குமுறைகளைக் கண்டிக்க ஒரு கூட்டம் கூடியது. அக்கூட்டத்தினரை ஜெனரல் டையர் என்ற ஆங்கில இராணுவத் தலைவன் தன் இராணுவத்தினரைக் கொண்டு சுட்டுத் தள்ளினான். அந்தப் பஞ்சாப் படுகொலை, மிதவாதியாக இருந்த மோதிலாலையும் அவர் போன்ற பலரையும் மனமாற்றம் அடையும்படி செய்துவிட்டது. அமிர்தசரசில் கூடிய காங்கிரசுப் பேரவைக் கூட்டத்தில் மோதிலால் தலைமை வகித்து, அரசியலாரின் அடாச்செயல்களை மிக வன்மையாகக் கண்டித்துப் பேசினார். நாட்டில் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது.

நாட்டு மக்கள் மனக்கொதிப்பு அடைந்த இந்த நிலையில், ஆங்கில அரசாங்கம் 'இந்தியாவுக்கு மாண்ட் போர்டு சீர்திருத்தங்கள்' என்ற பெயரால் அரசியலில் சில உரிமைகள் அளித்தது. இந்தியருக்கு இது ஏமாற்றம் அளித்தபடியால், 1920இல் மீண்டும் ஒத்துழையாமை இயக்கம் ஓங்கியது.

இவ்வியக்கம் பண்டிட் ஜவாஹரின் மனத்தில் உணர்ச்சி எழுப்பியது. அவர் காந்தியடிகளின் அறப்

போர் ஒன்றுல் மட்டுமே ஆங்கில ஆட்சியைச் சீர்குலேயச் செய்ய முடியும் என்ற உண்மையை நன்கு உணர்ந்தார்; அதில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார்; ஒத்துழையாமை இயக்கக் கொள்கைப்படி தமது வழக்கறிஞர் தொழிலேக் கைவிட்டார். மேனுட்டு நாகரிக உடைகளே ஒழித்தார்: கதராடை அணிந்தார்.

தம் மைந்தராகிய ஜவாஹரின் செயல்களே மோதிலால் முழுமனத்துடன் ஆதரித்தார். தாமும் கதராடை அணிந்து ஆடம்பர வாழ்க்கையை ஒழித்தார்; சிறை செல்லவும் முற்பட்டார்; சிறைக்கும் சென்ருர்.

## சிறை வாசம்

1922இல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். அவர் வருகையைப் புறக்கணிப்பதெனக் காங்கிரசுப் பேரவை முடிவு செய்தது. அதற்காகத் தொண்டர் படைகள் திரட்டப்பட்டன. மோதிலால் நெஹ்ருவும் அவர் மைந்தரான ஜவாஹரும் தொண்டர் படைகளேத் திரட்டத் தொடங்கினர். அது கண்ட அரசியலார் தொண்டர் படைகள் சட்ட விரோதமானவை என்று அறிவித்து நாட்டுத் தொண்டர்களேச் சிறையிலிட்டனர். அப்போதுதான் தந்தை மோதிலாலும், மைந்தர் ஜவாஹரும் முதல்முறையாகச் சிறைக்குச் சென்றனர். ஏறத்தாழ முப்பதினுயிரம் தொண்டர்கள் இவ்வாறு சிறைபுகுந்தனர். ஒத்துழையாமை இயக்கமோ நிற்கவில்லே. சிறை புக மேலும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் முன்வந்தனர்.

இந்நிலே கண்ட அரசியலார் ஆத்திரமடைந்தனர். தொண்டர்களே முரட்டுத்தனமாகத் தாக்கும்படி போலீசாருக்கு உத்தரவிட்டனர். இதனுல் மக்கள் பொறுமை இழந்து மறச்செயல்களில் இறங்கினுர்கள்.

மக்கள் மறச் செயல்களில் ஈடுபட்டதைக் கண்ட காந்தியடிகள் அறப்போருக்கு இன்னும் மக்கள் தகுதி பெறவில்லை என்று அறிந்து அறப்போரைச் சிறிது காலம்வரை நிறுத்துமாறு உத்தரவிட்டார். எனினும் காந்தியடிகளை அரசியலார் சிறையிலிட்டனர்.

காந்தியடிகளைச் சிறையிலிட்ட பிறகு, சிறையிலிருந்த ஜவாஹரை அரசியலார் விடுதலை செய்தனர். விடுதலை அடைந்த ஜவாஹர் சில நாட்களில் அலகாபாதை அடைந்து வெளி நாட்டுத் துணி மறுப்பில் ஈடுபட்டார். துணிக்கடைகளை மறியல் செய்ய ஆயிரக் கணக்கில் தொண்டர்கள் புறப்பட்டார்கள். அரசியலார் மீண்டும் ஜவாஹரைச் சிறையிலடைத்தனர். இதனுல் ஜவாஹர் இரண்டாவது முறை சிறை புகுந்தார்.

இம்முறை ஜவாஹர் இலட்சுமணபுரிச் சிறையில் இருந்தார்; அங்கு அவர் நூல்களைப் படிப்பதிலும், தொண்டர்களுக்கு இந்தி கற்பிப்பதிலும், சர்க்காவில் நூல் நூற்பதிலும், உடற்பயிற்சிக்காக நாள்தோறும் கிணற்றிலிருந்து நீர் இறைப்பதிலும் காலத்தைப் பயனுடையதாகக் கழித்துவந்தார்.

ஜவாஹர் சிறையிலிருந்தபோது, அங்கு நடைபெற்று வந்த ஊழல்களைப்பற்றியும் அரசியல் கைதிகள் அல்லாதவர் அடைந்து வந்த துன்பங்களைப் பற்றியும் ஊன்றிக் கவனித்துப் பல உண்மைகளை அறிந்தார். 1923 ஆம் ஆண்டுத் துவக்கத்தில் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டபோது ஜவாஹரும் வெளியே வந்தார். சிறையிலிருந்து வெளிவந்த ஜவாஹர் சில நாட்களில் அலகாபாத் நகராண்மைக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நகராண்மைக் கழகத் தலைவராயிருந்து

அவர் அந்நகர மக்களுக்குச் செய்த பணி பெரிதும் போற்றத்தக்கதாகும்.

காங்கிரசுக்காரரிடையே அரசியல் பற்றி அப்போது இரண்டு கருத்துக்கள் இருந்தன. சிலர் சட்ட சபைகளைக் கைப்பற்றி அரசியலாரை எதிர்ப்பதன் மூலம் நாட்டுக்கு நன்மைபெறலாம் என்று எண்ணினர். மோதிலால் போன்றவர்கள் அதை ஆதரித்தார்கள்.

காந்தியடிகளும் அவரை முற்றிலும் பின் பற்றிய தலைவர்களும் சட்ட சபைகளைக் கைப்பற்றுவதால் சிறு பயனும் விளையாது என்று எண்ணினர்கள். ஜவாஹர் இக்கருத்தையே கொண்டிருந்தார்.

ஜவாஹரின் மனைவி கமலாதேவியார் தமது கணவரைப்பின்பற்றி நாட்டுக்கு உழைக்க முற்பட்டார். அதன் காரணமாக அடிக்கடி அவர் சிறையில் வைக்கப் பட்டார். இதனால் கணவரும் மனைவியாரும் பல முறை பிரிந்து வாழ வேண்டியவராயினர். அதனால் கமலா தேவியார் சிறிதும் மனச்சோர்வு அடையவில்லை.

ஆனால் அடிக்கடி சிறைப்பட்டு அல்லலுற்ற கமலா தேவியாரின் உடல்நிலை சீர்குலைந்தது. மருத்துவர்கள் அவரைச் சுவிட்சர்லாந்து நாட்டுக்கு அழைத்துச் சென்று சிகிச்சையளிக்க வேண்டும் என்று ஜவாஹரை வற்புறுத்தினர்கள்.

தம் மனைவிக்குத் தாம் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்த ஜவாஹர் தமது மனைவியையும், மகள் இந்திராவையும் அழைத்துக்கொண்டு சுவிட்சர் லாந்து சென்றார். அங்கே தக்க மருத்துவர்களை அமர்த்தித் தமது மனைவிக்குச் சிகிச்சை அளிக்கச் செய்தார். அதனால் கமலாதேவியார் முற்றிலும் குண மடைந்தார். பின்னர் ஜவாஹர் பிரான்சு, ஜெர்மனி முதலிய ஐரோப்பிய நாடுகளிலும், இங்கிலாந்திலும்

சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு 1927இல் இந்தியா திரும்பினுர்.

பண்டிட் ஜவாஹர் 1928 இல் காங்கிரசுப் பேரவையின் பொதுச் செயலாளராகவும், இந்தியத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவ்வமயம் இந்தியாவின் நிலையை நேரில் கண்டறிவதற்கெனச் சைமன் பிரபு என்பார் தலைமையில் ஒரு குழு இந்தியாவுக்கு வந்தது; ஜவாஹர் அந்தச் சைமன் குழுவினரைப் புறக்கணிக்கும் பணியில் ஈடுபடவேண்டியவரானுர்.

## ஜவாஹரின் நெஞ்சுறுதி

சைமன் குழுவினர் இலட்சுமணபுரிக்கு வந்த போது ஜவாஹர்லால் தொண்டர் அணிவகுப்பையும் புறக்கணிப்பு ஊர்வலத்தையும் நடத்தினுர். இதனுல் ஜவாஹர் இரண்டுமுறை போலீசாரால் தாக்குண்டார்.

இரண்டாம் முறை போலீசார் தடிகொண்டு தாக்கியதை அவர் பொறுத்துக்கொண்டு தாம் நின்ற இடத்தைவிட்டு அசையாமல் நின்றுர். அவர் துணிவைக் கண்ட போலீசாரே வியந்தனர். ஆனுல் போலீசார் மேலும் அவரை அடிக்க முயன்றதைக் கண்ட தொண்டர்கள் அவரை அவ்விடத்தினின்று தூக்கிச் சென்று காப்பாற்றினுர்கள். அடுத்த ஆண்டில் காங்கிரசுப் பேரவை இலாகூரில் கூடியபோது, தலைமைப் பதவி பண்டிட் ஜவாஹர்லாலுக்கே அளிக்கப்பட்டது.

இந்திய அரசியல் திட்டத்தை வகுக்கும்பொருட்டு இந்தியாவிலிருந்த எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் கொண்ட வட்டமேசை மகாநாடு ஒன்றை இங்கிலாந்தில் கூட்ட ஆங்கிலேய அரசியலார் ஏற்பாடு செய்தனர். ஆனுல், ஜவாஹர் தலைமை வகித்து நடத்திய இலாகூர்க் காங்கிரசுப் பேரவையில் நாட்டிற்கு முழு

உரிமை பெறுவதே காங்கிரசாரின் நோக்கமென்றும், வட்டமேசை மாநாட்டினுல் எத்தகைய நன்மையும் ஏற்படாதென்றும் எடுத்துக்காட்டி, வட்டமேசை மாநாட்டில் காங்கிரசுப் பேரவைத் தலைவர்கள் பங்கு கொள்ளக் கூடாதென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி வைத்தார். அதையொட்டி முதல் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசுப் பேரவையினர் எவரும் கலந்து கொள்ளவில்லை.

## தொடர்துன்பம்

1930 ஆம் ஆண்டில் சட்டமறுப்பு இயக்கமும், வரிகொடா இயக்கமும், உப்புச் சட்ட மறுப்பும், கள்ளுக்கடை, துணிக் கடைகளின் மறியல்களும் தொடங்கப்பட்டன. இவை அனைத்திலும் பங்கு கொண்ட ஜவாஹர் உப்புச் சட்டத்தின்கீழ்ச் சிறை செய்யப்பட்டு ஆறு திங்கள் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பெற்றுர்.

ஜவாஹரின் தந்தையாராகிய மோதிலால், தாயாராகிய சொரூபராணி அம்மையார், மனைவியாகிய கமலா தேவியார், தங்கையாகிய விஜயலட்சுமி அம்மையார் ஆகிய அனைவரும் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர்.

நாட்டு விடுதலைக்காக ஒரு குடும்பத்தினர்-செல்வத்தில் சிறந்து நின்று நாகரிக வாழ்க்கையின் எல்லை கண்ட ஒரு குடும்பத்தினர், அனைவரும் அனைத்தையும் தியாகம் செய்துவிட்டுச் சிறை புகுந்து துன்புற்ற செய்தி நம் நாட்டில் மட்டுமின்றிப் பிறநாட்டு வரலாற்றிலும் காணமுடியாததாகும்.

பண்டிட் ஜவாஹர் ஆறு திங்கள் சிறையில் இருந்துவிட்டு வெளிவந்த உடனே வரிகொடா இயக்

கத்தில் ஊக்கம் காட்டினர்; தடையுத்தரவுகளை மீறினர். அதனல் அவர் மீண்டும் இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். ஆனல் மோதிலால் நோய்வாய்ப்பட்டு வருந்தியபோது அரசியலார் ஜவாஹரை விடுதலை செய்துவிட்டனர்.

மோதிலால் நோயினின்று மீளாமல் 1931 இல் காலம் சென்றுர். தந்தையின் பிரிவால் துன்பமடைந்த புதல்வரைக் காந்தியடிகள் ஆறுதல் கூறித் தேற்றினர்.

**காந்தியடிகளின் நம்பிக்கை**

தமக்குப் பிறகு தலைமை தாங்கித் தாம் மேற்கொண்ட அறப்போரை நடத்தும் அறிவும், ஆற்றலும் சகிப்புத்தன்மையும் உடையவர் இந்தியாவில் ஜவாஹரைத் தவிர வேறு எவரும் இலர் என்று காந்தியடிகள் வெளிப்படையாகப் பன்முறை கூறினர். எதிர்காலத்தில் ஜவாஹருக்குரிய மாபெரும் பொறுப்பை அவருக்கு எடுத்துக் காட்டினர். தந்தையாரின் பிரிவாலும் நீண்ட காலச் சிறை வாசத்தாலும் தம் உடல்நிலை குன்றியிருந்தபடியால் மருத்துவர் அறிவுரைப்படி, ஜவாஹர் இலங்கையில் தங்கிச் சிறிது காலம் ஓய்வு பெற்றுர்.

1931 இல் கூட்டப்பெற்ற இரண்டாம் வட்ட மேசை மாநாடு முறிவடைந்துவிட்டபடியால், காந்தியடிகள் இங்கிலாந்தில் நடந்த வட்டமேசை மாநாட்டிலிருந்து இந்தியா திரும்பிய உடனே சிறையில் வைக்கப்பட்டார். அதனல் தோன்றிய கிளர்ச்சியில் ஜவாஹர் மீண்டும் சிறைபுகுந்தார். அப்போது அலகாபாதில் ஊர்வலம் நடத்திய அவரது அன்னையாரைப் போலீசார் தலையிலடித்துக் காயமுண்டாக்கினர். முதிர்ந்த

வயதில் அவ்வம்மையாருக்கு நேரிட்ட அந்த இன்னலை நினைத்து ஜவாஹர் மிகவும் வருந்தினர்.

## தீமையில் நன்மை

அதிகாரிகள் இம்முறை ஜவாஹரைச் சிறையில் சற்றுக் கொடுமையாகவே நடத்தினர்கள். அவருக்குப் பத்திரிகைகள் தராமல் அவரை வெளியுலகத் தொடர் பின்றி இருக்கச் செய்தனர். இது ஒருவகையில் நன்மையாக முடிந்தது. ஜவாஹர் சிறையில் 'உலக வரலாறு' 'இந்திராவுக்குக் கடிதங்கள்' முதலிய அரிய நூல்களை இயற்றினர்.

கமலாதேவி கடும் நோய்வாய்ப் பட்டமையால் 1933 இல் ஜவாஹர் விடுதலையடைந்தார். அவர் தம் மனைவியை மருத்துவத்திற்காகக் கல்கத்தாவுக்கு அழைத்துச் சென்றபோது மீண்டும் சிறைபுக நேரிட்டது. அப்போது அவர் தமது வாழ்க்கை வரலாற்றைச் சிறையில் எழுதிமுடித்தார். டேராடுன் சிறையினின்றும் வெளிவந்த இந்நூல் சிறந்த வாழ்க்கைத் தத்துவ நூலாகும்.

## கமலாதேவியாரின் நாட்டுப் பற்று

ஜவாஹர் டேராடுன் சிறையிலிருந்தபோது கமலாதேவியின் உடல்நிலை கவலைக்கிடமாயிற்று. ஆதலால் ஜவாஹர் விடுதலை பெற்றுக் கல்கத்தாவுக்குச் சென்று தம் மனைவியைக் கண்ட பிறகு பதினெரு நாட்களில் மீண்டும் சிறை புகுந்தார். அவருடைய அன்பான மனைவியாரின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. அந்நிலையில் ஒரு சிறிதும் இரக்கமின்றி அரசியலார் அவரைச் சிறையிலிட்டனர். 'இனி அரசியலில் தலையிடுவதில்லை'யென வாக்களித்தால் அவரை நிரந்தரமாக விடுதலை செய்துவிடுவதாக அரசியலார் கூறினர்.

இச்செய்தி அறிந்த கமலாதேவி உள்ளம் கொதிப் படைந்தார்; ஒருவேளை தம் கணவர் தம்மீது வைத்த அன்பினுல் அத்தகைய வாக்குறுதி அளித்துவிடு வாரோ என்று ஐயுற்ருர். தம் உயிர் தம் உடலைவிட்டு நீங்குவதாயினும், அத்தகைய வாக்குறுதி அளிக்கக் கூடாதென்றும், நாட்டுப்பணியினின்று நழுவக்கூடா தென்றும், தமது உயிரைப் பாரத அன்னையின் பாதங் களுக்குக் காணிக்கையாக்கத் தாம் சிறிதும் அஞ்ச வில்லையென்றும் சிறையிலிருந்த ஜவாஹருக்குக் கமலாதேவி செய்தி அனுப்பினுர்.

சிறந்த தியாக உள்ளமும் நாட்டுப் பற்றும் கொண்ட கமலாதேவியாரின் விருப்பத்திற் கிணங்க ஜவாஹர், 'எக்காரணம் பற்றியும் அரசியல் அலுவல் களினின்று தாம் விலகமுடியா'தென்று அரசியலாருக்கு அறிவித்துவிட்டார். ஜவாஹர் அளித்த இந்தப் பதி லைக் கேட்டு ஆங்கிலேயர் அச்சமுற்றனர்.

கமலாதேவியின் உடல்நிலை முற்றிலும் சீர்குலைந்து விட்டது. அவ் வம்மையார் மருத்துவத்திற்காக ஜெர்மனிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு அவரது உடல்நிலை நம்பிக்கைக்கு இடமின்றி இருந்த மையால், ஆங்கில அரசியலார் ஜவாஹரைச் சிறையி லிருந்து விடுதலை செய்தனர். ஜவாஹர் உடனே புறப் பட்டுச் சென்று ஜெர்மனியை அடைந்தார்; தமது அருமை மனைவியைக் கண்டார். கணவர் தம் அருகில் இருக்கும் பேறுபெற்ற அம்மையாரின் உடல் நிலை சற்றுக் குணமடைவதுபோலத் தோன்றியது. ஆயினும் அவர் அப்பிணியினின்று விடுபட முடியாமல் காலமானுர்.

## மீண்டும் அறப் போர்

மாகாணத் தனியாட்சியும், கூட்டு அரசியல் திட்டமும் இந்தியாவுக்கு ஆங்கிலேயரால் 1935ஆம்

ஆண்டில் இந்தியா சட்டப்படி வழங்கப்பெற்றன. இரண்டாண்டுகளுக்குப் பின் மாகாணங்களில் தேர்தல்கள் நடைபெற்றன. எட்டு மாகாணங்களில் காங்கிரசுக்கு வெற்றி கிடைத்தது.

இங்கிலேயில் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. ஆங்கிலேயர் இந்தியரின் இணக்கத்தைப் பெருமலே இந்தியாவைப் போரில் இணைத்தனர். அதுகண்ட காங்கிரசுப் பேரவை இந்தியாவுக்கு விடுதலை யளித்



தால்தான் போரில் இந்தியா ஒத்துழைக்க முற்படும் என்ற கட்டுப்பாட்டை விதித்தது. ஆனால் ஆங்கிலேயர் அதனை ஒருசிறிதும் பொருட்படுத்தவில்லை; எனவே காங்கிரசு 1939இல் மந்திரிசபைப் பதவியைத் துறந்துவிட்டு மீண்டும் அறப்போரைத் தொடங்கியது.

## கிரிப்ஸ் தூது

அச்சமயம் கோரக்பூரில் ஜவாஹர் நிகழ்த்திய சொற்பொழிவு மறுப்புக் கிடமானதென்று கூறி அரசியலார் அவருக்கு நான்காண்டுகள் சிறைத் தண்டனை விதித்தனர். இதனால் தோன்றிய கிளர்ச்சிகளை அடக்க விரும்பி எல்லாத் தலைவர்களையும் அரசியலார் சிறையிலடைத்தனர். ஆயினும் போரில் ஜப்பானியர் ஜெர்மனியருடன் சேர்ந்தபிறகு போர் நிலை மிக்க நெருக்கடியாக இருந்தமையால், அரசியலார் இந்தியத் தலைவர்களை விடுதலை செய்து, ஸ்டாப் போர்டு கிரிப்ஸ் என்பவரை 1942இல் அனுப்பிச் சமாதானப் பேச்சு நடத்தினர். கிரிப்ஸ் திட்டத்தால் இந்தியாவுக்கு உரிமை கிட்டாதென்பதை உறுதியாக அறிந்த இந்தியத் தலைவர்கள் அதை மறுத்துவிட்டார்கள். பிறகு 1942ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 8ஆம் நாள் காங்கிரசுச் செயற்குழுவினர் பம்பாய் நகரத்தில் கூடினர்.

'ஆங்கிலேயர் இந்திய ஆட்சியை இந்தியரிடம் ஒப்படைத்தால் ஜப்பானியரின் தாக்குதலை எதிர்ப்பதற்குரிய எல்லா முறைகளையும் இந்தியர் மேற்கொள்ள முற்படுவர். இல்லையானால் அப்போரில் இந்தியர் ஆங்கிலேயருடன் எத்துறையிலும் ஒத்துழைக்க முடியாது. காங்கிரசு இந்தியாவைக் காப்பாற்றுதற்குரிய தனி முயற்சிகளை ஆராய்ந்து மேற்கொள்ளும்' என்று செயற்குழுவினர் தீர்மானித்தனர்.

அத்தீர்மானம் மறுநாள் சட்டபூர்வமாக நிறைவேற்றப்படுமுன்னரே ஆங்கில அரசியலார் காங்கிரஸ் செயற்குழுவினர் அனைவரையும் காந்தியடிகளையும் கைது செய்தனர். இச்செய்தி மறுநாள் வெளியான போது கலகமும், குழப்பமும், கிளர்ச்சியும் நாடெங்கும்

காட்டுத்தீப்போலப் பரவின. எங்கும் வேலைநிறுத்தம், கடைகளின் கதவடைப்பு, பள்ளிக்கூடப் புறக்கணிப்பு, ஒரே குழப்பம். அரசியலார் சிறிதும் மனந் தளராமல் நாட்டாட்சி மன்றங்களைக் கலைத்தனர். தொண்டர்களையும், தலைவர்களையும் பாதுகாப்பில் வைத்தனர். துப்பாக்கிகளும் தடிகளும் தங்கு தடையின்றி நடமாடத் தொடங்கின.

அரசியலாரின் இத்தகைய அடக்குமுறைச் செயல்கள் குழப்பத்தையும் கலகங்களையும் பெருக்கின. ஆறுதல் கூறவும் அறிவு புகட்டவும் தலைவர் எவரும் வெளியில் இராமல் சிறையில் இருந்தமையால், பொதுமக்களின் ஆத்திரம் எல்லை கடந்துவிட்டது. மக்கள் அழிவு வேலைகளில் ஈடுபட்டனர்.

இவற்றைக் கண்ட அரசியலாரின் ஆத்திரமும் அளவுகடந்து சென்றது. அரசியலார் ஏறத்தாழ ஓரிலட்சம் பேரைச் சிறையிலிட்டனர்.

போர் முடிந்தபிறகு நாட்டுத் தலைவர்கள் அனைவரும் விடுதலை அடைந்தனர். ஒன்பதாவது முறையாகச் சிறை புகுந்திருந்த ஜவாஹரும் விடுதலை பெற்றார். சிறையினின்று வெளிவந்த ஜவாஹருக்குக் காங்கிரசுப் பேரவையின் தலைமைப் பதவி அளிக்கப் பட்டது.

அப்போது கீழ்க்கோடிப் போர்முனையில், நமது தனிப்பெருந் தலைவராகிய சுபாஷ்சந்திரரின் இந்தியத் தேசியப் படைவீரர்கள் சிறை செய்யப்பட்டு இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்கள்மீது அரசியலாருக்கு இரண்டகம் புரிந்த குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டு டெல்லியிலுள்ள செங்கோட்டையில்

விசாரணை தொடங்கிற்று. ஜவாஹரின் நன்முயற்சியால் புலாபாய் தேசாய் என்னும் வழக்கறிஞர் இந்திய வீரர் சார்பில் வாதம் நடத்தினர். அவ்வாதத்தில் அருகிலிருந்து உதவிபுரிந்தார் ஜவாஹர். அதன் பயனாக இந்திய தேசிய இராணுவ வீரர்கள் விடுதலை பெற்றனர்.

## இடைக்கால ஆட்சி

இந்நிலையில் இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலில் ஆளும் கட்சியினராகிய சர்ச்சில் கட்சியார் தோல்வி அடைந்தனர். தொழிற் கட்சியினர் வெற்றி பெற்றனர். அவர்கள் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை இந்தியரிடம் ஒப்படைப்பதே அறிவுடைமையென முடிவு செய்தனர். அதன் பயனாக முழு உரிமை வழங்கப்படும் வரையில் டெல்லியில் இடைக்கால அரசியல் தோற்றுவிக்கப்பட்டது. ஜவாஹரே அதன் தலைமைப் பதவியைப் பெற்றார்.

இந்தியாவின் நிலை துன்பம் நிறைந்ததாய் இருந்தது. உணவுப்பஞ்சமும் உடைப்பஞ்சமும் தொழிலாளர் வேலை நிறுத்தங்களும் இந்து முஸ்லிம் கலகங்களும் மலிந்திருந்த நிலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்ற ஜவாஹர், கட்சி மனப்பான்மை இன்றித் தக்க தலைவர்களின் துணைகொண்டு அரசியலை நடத்தினர்.

ஆசிய நாடுகள் எவ்வாற்றானும் மேனாடுகளுக்குக் குறைந்தவையல்ல வென்றும், ஆசிய நாடுகள் ஒற்றுமை யுற்றால், மகத்தான செயல்களை முடிக்கக் கூடும் என்றும் கருதிய ஜவாஹர், அதனை உலகத்தவர்க்கு அறிவிக்க விரும்பினர். ஆசிய நாடுகளின் மாநாட்டைக் கூட்டினர். 1955 இல் பாண்டுங் என்னும் நகரில் நடந்த அம்மாநாட்டுக்குத் தலைமை வகிக்

கும் பேறு அவருக்குக் கிட்டியது. அவரது தலைமைப் பேருரை, கீழ்நாடுகள் பற்றி மேனாட்டார் கொண்டிருந்த எண்ணங்களை மாற்றிக் கீழ்நாட்டவருடன் உறவு கொண்டாடுவதே மேனாட்டார் பல துறைகளிலும் பயனடையும் வழி என்னும் உணர்ச்சியைத் தோற்றுவித்தது.

## இந்தியாவுக்கு முழு உரிமை

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தியாவுக்குக் குடியேற்றநாட்டு உரிமை வழங்கப்பட்டபோது, ஜவாஹர் இந்திய யூனியன் முதல் அமைச்சர் பதவி அளிக்கப்பெற்றார். 1950ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26 ஆம் நாள்முதல் நமது நாடு குடியரசு நாடாகத் திகழ்கின்றது. இப்போது குடியாட்சித் தலைவர் பதவியை வகிப்பவர் டாக்டர் S. இராதா கிருஷ்ணன். ஆனால் அரசியலை நடத்தி வந்த அமைச்சர் குழுவுக்குத் தலைமை வகித்து முதல் அமைச்சராக விளங்கியவர் ஜவாஹரே ஆவார். பண்டிட் ஜவாஹர் நம் நாடு குடியேற்றநாட்டு உரிமை பெற்றது முதல் தொடர்ச்சியாகப் பதினேழு ஆண்டுகள் முதல்அமைச்சராக இருந்து நாட்டைத் திறமையாக நடத்தினர்.

## முடிவு

பண்டிட் ஜவாஹர் பதினேழு ஆண்டுக் காலம் முதல் அமைச்சராய் இருந்தபோது, நம் நாட்டை உலக நாடுகளிடைச் சிறந்த பெருமையுடையதாகச் செய்வதில் மட்டும் கவனம் செலுத்தி இருந்துவிடவில்லை. வல்லரசுகளாகிய அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளுடனும் தோழமை பூண்டு அவை ஒன்றுக்கொன்று முட்டிக்கொள்ளாதபடி உலக அமைதிக்கு அபாயம் உண்டாகாதபடி செய்தார்; ஆப்பிரிக்க

நாடுகள் உரிமை பெற்று வாழ வழிசெய்தார். பஞ்ச சீலக் கொள்கைகளை வகுத்து, மாறுபட்ட கொள்கைகளையும் தத்துவங்களையும் கொண்ட நாடுகளும் அமைதியாக இணைந்து வாழமுடியும் என்பதை மெய்ப்பித்தார்; இந்தியாவின் மதிப்பை உலக நாடுகள் உணருமாறு செய்தார்.

இத்தகைய ஈடும் எடுப்புமற்ற மாணிக்கமாம் ஜவாஹர் தம் 74 ஆம் வயதில் 1964ஆம் ஆண்டு, மேத் திங்கள், 27 ஆம் நாள் பொய்யுடலை நீத்துப் புகழுடம்பு அடைந்தார்.

## சிறப்பியல்புகள்

ஜவாஹரின் நாட்டுத் தொண்டு இணையற்றது. அவர் செல்வச் சிறப்பு மிக்க குடும்பத்தில் பிறந்தார். காலில் மண் ஒட்டாதவாறு வளர்ந்தார்; மேனாடு சென்று கல்வி பயின்றார்; முடிசூடா மன்னர் போன்று வாழும் நிலை அவருக்கிருந்தது. ஆனால் நாட்டின் நிலை அவரை இன்ப வாழ்வில் புகவிடவில்லை. நாட்டுமக்களின் உரிமைக் கிளர்ச்சி அவரைத் துன்பத் துறைக்கு ஈர்த்தது; அவர் மனம் உன்னத வாழ்வில் ஈடுபட மறுத்தது. உரிமைக் கிளர்ச்சி அவர் மனத்தைக் கவர்ந்தது.

உரிமைக் கிளர்ச்சி இயக்கத்தில் அவர் மட்டுமின்றி, நாகரிகச் சிகரத்திலிருந்த தம் தந்தையாரையும், தங்கையையும், மனைவியையும், மகளையும் மற்றைய உறவினர்களையும் பெரும் பங்கெடுக்கச் செய்தார்; தடியடி பட்டார்; ஒன்பது முறை சிறைபுகுந்தார்; நாட்டுத் தொண்டின் பயனாகத் தம் அருமை மனைவியாரை இழந்தார். தம் சொத்துக்களின் பெரும் பகுதியை நாட்டின் பொதுச்சொத்தாக்கினார். நாட்டு

மக்கள் அனைவருடைய அன்பையும் கவர்ந்தார். உரிமை இயக்கத் தலைவர்களிடையே சிறப்பிடம் பெற்றார். உலக மக்களிடை ஓர் உயர்தனிச் செம்மலென விளங்கினார். அவர் இன்று நம்மிடையிருந்து மறைந்தாரெனினும் அவர் புகழ் இவ்வுலகம் உள்ளளவும் நிலைபெற்று நிற்கும். வாழ்க ஜவாஹரின் திருநாமம்!

---

# 9. கட்டுரைப் பயிற்சி

[பின்வரும் தலைப்புக்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் இரண்டு பக்கங்கட்கு மிகாமல் ஒவ்வொரு கட்டுரை வரைக.]

1. பெஞ்சமின் பிராங்க்ளின்

    1. இளமைப் பருவம்
    2. அச்சகத் தொழில்
    3. பெஞ்சமின் கண்டு பிடித்தவை
    4. இறுதி வாழ்வு

2. ஜார்ஜ் ஸ்டீவன்சன்

    1. இளமையில் வறுமை
    2. இயந்திரங்களும் ஸ்டீவன்சனும்
    3. இரயில்வே இஞ்சின் கண்டு பிடித்தமை
    4. இறுதியில் அடைந்த சிறப்பு

3. பிளாரன்ஸ் நைட்டிங்கேல்

    1. இளமைப் பருவத்திலும் கருணையுள்ளம்
    2. மருத்துவப் பணிப் பெண்ணாக அவா
    3. கிரிமியாப் போரில் செய்த தொண்டு
    4. பிளாரன்ஸ் அடைந்த பெரும் புகழ்

4. லூயி பாஸ்டியர்

    1. தொற்றும் பிணிகளும் முற்கால மக்களும்
    2. பாஸ்டியரின் இளமைப் பருவம்
    3. பாஸ்டியர் கண்டு பிடித்தவை
    4. பாஸ்டியர் அடைந்த புகழ்

5. இரவீந்திர நாத தாகூர்

1. தாகூரின் இளமைப் பருவம்
2. தாகூர் அமைத்த கல்வி நிலையம்
3. தாகூரின் இலக்கியத் தொண்டு
4. தாகூர் அடைந்த பெரும் புகழ்

6. மார்க்கோனி

1. வான ஊர்தியும் வானொலியும்
2. மார்க்கோனி செய்த ஆராய்ச்சி
3. மார்க்கோனி அடைந்த புகழ்
4. வானொலியால் விளைந்த பயன்

7. பாலகங்காதர திலகர்

1. இளமையும் கல்வியும்
2. நாட்டு நலப் பணிகள்
3. விநாயகர் விழா
4. திலகரும் பாரதியாரும்
5. திலகரின் அருங்குணங்கள்

TB
031,6(9)
N65

8. பண்டிட் ஜவாஹர்லால் நெஹ்ரு

1. ஜவாஹரின் முன்னோர்
2. ஜவாஹரின் இளமைப் பருவம்
3. சுதேசி இயக்கமும் ஜவாஹரும்
4. பஞ்சாப் படுகொலை
5. ஜவாஹரின் முதல் சிறைவாசம்
6. சைமன் குழுப் புறக்கணிப்பும் ஜவாஹரும்
7. கமலா தேவியாரின் நாட்டுப் பற்று
8. ஜவாஹர் ஆற்றிய தொண்டுகள்
9. ஜவாஹரின் சிறப்பியல்புகள்

85088

———